ட

த.

இடிமா, பார்த்தசாரதிநாயுடுசன்ஸ்

சென்னை, 1.

சென்னை :

இட்டா - பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்

சக்கரவர்த்தி அச்சுக்கூடம்

நெ. 189, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

இதன் விலை] 1950. **Rs 1-50**

குருவே துணை

விநாயகர் தோத்திரம்

ஐந்துகரத்தோனே அருள்சடையாள்புத்திரனே
ஆனைமுகப்பிள்ளையாரே அறுமுகர்க்குமூத்தோரே
வேறுவினைவாராமல் விநாயகரேமுன்னடவீர்
ஆதிசிவன்தன்மகனே ஆயன்மருகோனே
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
முன்னடக்கும்கணபதிக்கு கண்ணடக்கம்பொன்னாலே
கண்ணடக்கம்பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தானதண்டைகொஞ்ச முன்னடவும்பிள்ளையாரே
பாட்டுக்குகந்தருளும் பார்வதியாள்புத்திரனே
ஆலடியிற்பிள்ளையாரே ஐந்துகரத்தோனே
மூலமுதலேநீர் முன்னடக்கவேண்டுமையா

சரஸ்வதி தோத்திரம்

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
சரஸ்வதியேவாணியரே தாயேவரங்கொடுப்பாய்
என்னாவிலேநீயிருந்து நல்லோசையருள்புரிவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
தப்பிதங்கள்வாராமல் சரஸ்வதியேமுன்னடவாய்

கதையின் வரலாறு

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளும்நாளையிலே
வில்வாங்கும்அர்ச்சுனனார் விசையனிடதேவியர்கள்
அர்ச்சுனனார்தேவியர் ஐந்திரண்டுயேழுபேராம் [ள்
பாஞ்சாலன்பெற்றபெண்ணாம்பைங்கிளி துரோபதையா
நாகராசன்பெற்றபெண்ணும் நாககன்னியாது
சித்தாயன்தங்கையவள் சுபத்திரைநாயகியாள் [மாள்
பாண்டியர்கள்பெற்றபெண்ணும் பைங்கிளியாளல்லியம்

மேகராசன்பெற்ற மெல்லியந்தமின்னொளியும்
அகஸ்தியனார்பெற்றபெண்ணும் அபானபோகவதி
சேராய்புராசன்பெற்ற செல்வியாய்பவளக்கொடி
ஏழுலட்சம்பெண்களாம் அவர்களுக்குதாதியர்கள்
ஆண்டிருக்குநாளையிலே அர்ச்சுனராசதுரை
ஒற்றையொருநாளில் உத்தமனும் அர்ச்சுனனர்
தருமர்தம்பியருச்சுனன் தனஞ்சயனுந்தானெழுந்து
முழுகிக்குளித்து முன்மயிரைபின்போட்டு
பூசைமுடித்தானே பொற்பூசைதான்போட்டு
ஆடையுமாபரணம் அலங்கிர்தம்செய்துகொண்டு
மல்லிகைப்பூமாலையது மார்பில்பிரண்டாட
கொற்றப்பூமன்னனுக்கு கொண்டையிலேபூவுதிர
பொன்னிழைத்தபட்டாடை பூமியில்புரண்டாட
சாந்தால்மிதியடியாம் சந்தனத்தால்மேற்குமிழாம்
முத்தால்மிதியடியாம் மேலானரத்தினமாம்
பூவால்மிதியடியைப் போட்டுநடந்தாரே
கோட்டைகடந்தாரே கொத்தளமுந்தான்கடந்தார்
தெத்துத்தெருகடந்தார் தேரோடும்வீதிவிட்டார்
மாளிகைகடந்தாரே மன்னரிடவீதிவிட்டார்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டார்
தெத்தடிப்பெண்களெலாம் தோடிப்பெண்களெல்லாம்
ஆலஞ்சுழற்றுவார்கள் அப்புறத்தேவிட்டெறிவார்
திருஷ்டிகழித்திடுவார் திசைநான்கும்விட்டெறிவார்
கன்னிமார்பெண்களெல்லாம் கண்டாசைபெற்றார்கள்
பட்டணத்துபெண்களெல்லாம் பார்த்தாசைப்பெற்றார்
ஆகாயகன்னியர்கள் ஆசைகொண்டுநின்றார்கள் [கள்
என்னென்றுகேளாமல் ஏறமுகம்பாராமல்
மின்னொளியாள்கோவிலுக்கு விருப்பமுடன்வாறாராம்
மின்னொளியாள்செய்கிற விவரங்கள்சொல்லுகிறேன்
அன்னநடைமின்னொளியாள் அரிவையர்தானெழுந்து
பாலைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
முழுகிக்குளித்தல்லோ முன்மயிரைபின்போட்டு
கோதிமயிராற்றி கோடாலிமுடிபோட்டு
ஈரத்துயிலுடனே எழுந்தாளேமின்னொளியாள்
ஆசாரவாசலிலே அன்னநடைதாதியர்கள்
பூசைக்கிடம்வைத்தார் பொற்கொடியாள்வந்துநின்று

வட்டமணைமேலே வந்தமர்ந்து மின்னொளியும்
அரகராவென்றல்லோ அணிந்தாளேவெண்ணீறு
சிவசிவாவென்றல்லோ திருநீறுதானணிந்து
பண்ணைப்பூபோட்டு பகவானை பூசைசெய்து
புன்னை மலரெடுத்து பெருமானைப்பூசைசெய்து
கண்ணிரண்டுமூடியல்லோ கர்த்தன்மேல் நினைவானாள்
ஆதிசிவனை நோக்கி அரும்பூசைசெய்திருந்தாள்
அந்தச்சமயத்தில் அருச்சுனரும்வாருரே
மின்னொளிகோட்டைதேடி விசையரும்வாருரே
பத்துகட்டுஅரண்மனையும் பார்த்தீபன்தான்கடந்து
ஆசாரவாசல்தேடி அருச்சுனரும்வாருரே
மின்னற்கொடியாள் மெல்லிநல்லாள் பூசையிலே
சித்திரப்பதுமையைப்போல் செல்வதியாள் நிற்கிறதை
காண்டீபனருச்சுனரும் கண்டாரேகன்னியரை
சூரியனைப்போலேயல்லோ துலங்குகிருள் கன்னியரும்
உற்றுப்பார்த்தேனே ஒளிபிறந்தகண்ணாலே
கண்ணாலேபார்க்கையிலே காயரூபனர்ச்சுனற்கு
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகிறதாம்
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகிறதாம்
ஆறுகுருபாணமது மார்புருகிப்போகிறதாம்
ஆணலழகுமன்னன் அருச்சுனவீரியரும்
அவள்-பக்கத்தில்வந்து நின்று பார்த்தீபனருச்சுனரும்
நின்றுனரை நாழி நினைத்தானேகோடிபுத்தி
பொறுத்துமுடிவதில்லை பொங்குதுதேகமெல்லாம்
ஏண்டிபெண்ணே மின்னொளியே இந்நேரம் நிற்பேனே
ஆசையெல்லாமுன்மேல் அலையுதேஎன்னசெய்வேன்
வனிலும்பூசையென்ன ஏந்திழையேயுந்தனுக்கு
பத்தாநாளிருக்கையிலே பரமன்பூசையுனக்கேண்டி
என்று-தாவயணைத்து சரசங்கள்செய்யலுற்றுன்
அப்போ-கோபம்பெருகிக்கொம்பனையுந்தான்சீறி
மதிப்பற்றுபோச்சுதோதான் வாள்விசயாயுந்தனுக்கு
நாவ-அர்ச்சனைசெய்து அரனை நினைந்துருகி
பூசையில்தானிருக்கப் போர்விஜயாயுந்தனுக்கு
புத்தியில்லாமற்போச்சோ போர்விஜயாயுந்தனுக்கு
அப்படிக்கொற்ற அருச்சுனனே நீயெனக்கு
ஏதுக்குதவியென்று இனிவேண்டாமுன்னுசை

வேண்டாமெனசொல்லி விருந்தெடுத்தூதிவைத்தாள்
ஆகாதவனென்று அருச்சுனனை ஊதிவைத்தாள்
அன்றுமுதலின்றளவும் அர்ச்சுனரும்வாரதில்லை

துரோபதை தன் தாதியிடத்தில் அருச்சுனன்
தேவிகளை விருந்துக் கழைத்துவரச் சொன்னது

அன்றுமுதலாக அருஞ்சிறையில்தானிருந்தாள்
அப்படியாக அனேகநாட்சென்றபின்பு
மாதொத்தமங்கையர் மயிலனையாள் துரோபதையும்
தோருவடிவழகி துரோபதையுங்கூறிடுவாள்
வாள்விஜயனருச்சுனற்கு மங்கையர்களாயிரமாம்
சொல்லிமுடியாது சுந்தரிமாருயிரம்பேர்
கூறவுங்கூறி முடியாதுகொம்பனைமார்
பாலானமேனிப் பனிபூங்குழலாளும்
பொன்னனமேனிப் புதுப்பெண்மடந்தையரும்
சொர்னவடிவழகியரும் சோழன்மடந்தையரும்
ஆறெங்குமோதும் அகஸ்தியனார்பாவையரும்
அங்கமலர்ப்பூவில் அவதரித்தஅல்லியரும்
சங்குடையாள்தங்கை சுபத்திரை நாயகமும்
பரிவானமங்கையரைப் பார்த்தந்தப்பாஞ்சாலி
சிறுசோறமுதுண்ணத் தேன்மொழிமாறெல்லவரும்
தோருவடிவழகி துரோபதைநாயகியும்
தனக்குகவரியிடும் தாதிமுகம்நோக்கி
முத்தின்கவரியிடும் முகப்பின்முகம்நோக்கி
அந்த-ஆனலழகுமன்னன் அருச்சுனர்தேவிகளை
அத்தனைபேரையும் அழைத்தோடி வாருமென்றாள்
அப்படியேஎன்றுச்சி அழைத்தோடிவருவேனென்று
ஆரிழையாந்தாதி அதிவேகமாய்நடந்து
சித்திரவீதி தெருவும்பலகடந்து
தேரோடும்வீதி தெருவும்பலகடந்து
முத்தணிந்தவாசல் முகப்பிலேபோய்நின்று
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகத்தை
தாமக்குழலாளுந் தாதிபோய்தெண்டனிட்டாள்
வைகைவளநாடி மாதவம்போய்நடந்து
நீ-ஆருடையதாதி அரியவுரையுமென்றார்
நான்-ஆருடையதாதியல்ல அடியேன்திருப்பணிதான்

தென்மதுரையாளுகிற தென்மொழியேவிண்ணப்பம்
அன்னமேகேளீர் அடியேன்வாய்விண்ணப்பம்
தேன்மொழியாள்கோவிலிலே விருந்தமுதுண்பதற்கு
அஞ்சலருமும்மை அழைத்துவரச்சொன்னார்கள்

அருச்சுனன் தேவிகள் துரௌபதியிடம் வந்தது

பிறவாமுடி தரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
விருந்தமுதென்றுசொல்ல மெல்லியருஞ்சம்மதித்து
அவள்-பச்சைக்கடகம் பவழத்தாலாபரணம்
தங்கத்தினாலே சரப்பளிநேர்மையுடன்
தாளிப்பதக்கமும் சன்னற்பின்னற்றுழ்வடமும்
இசைந்தநல்லபாவாடை இளமாதுளம்பட்டுடுத்தி
மாணிக்கத்தண்டிகை வருகவருகயென்றாள்
வாமவென்றுசொல்லவே தண்டிகைகொண்டுவந்தார்
பிறவாமுடி தரித்த பெண்பெருமாள்கோவிலிலே
மாணிக்கத்தண்டிகைமேல் ஏறியந்தமெல்லியரும்
வந்துபுகுந்தார்கள் மெல்லியர்களெல்லோரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
நீருடுமண்டபத்தை சென்றார்கள்நேரிழைமார்
முல்லையரும்பெடுத்து மெல்லியர்கள்பல்விளக்க
வாயோடுபல்லும் மதிமுகந்தான்கழுவி
ஆடைகளைந்து ஆபரணந்தாள்களைந்து
சிவசங்கராவென்று ஸ்நானமதுசெய்தார்கள்
ஆசாரமண்டபத்தே வந்தாரணியிழைமார்
தியான்குழல் நீண்ட வல்லமடமாதர்
சீவிமயிராற்றி சந்தனப்புகைகொடுத்து
ஒவ்வொருமயிருக்கும் ஒவ்வொருபொன்னிதழும்
மாணிக்கச்சீப்பாலே வாரிமயிர்முடித்து
ஆயிரம்பொன்பெற்ற அணிவயிரந்தான்முடித்து
மருக்கொழுந்துவைத்து முடித்தார்வலமாக
ஆபரணப்பெட்டி அணியிழைமார்தான் திறந்தார்
வலைமதிக்கப்போகாத மெல்லியர்கள்தன்பதக்கம்
பூட்டியலங்கரித்துப் பொற்கைவளநாட்டியர்கள்
மாணிக்கத்தண்டிகையின்மேல் ஏறியந்தமெல்லியரும்
மங்களவீதியிலே வந்தாரேமாதரெல்லாரும் [யரும்
இதில்-விளங்கியசீர்மாதவத்துமின்னொளியாள்மெல்லி

கலங்குமன துடனே காரிழையாள் நாயகியும்
திலமணியாள் செஞ்சாந்துபொட்டுமிட்டாள்
கூந்தல்முடியாமல் கொம்பனைமின்னொளியாள்
பலபலவிதமாக முடித்தந்தமெல்லியரும்
பைங்கிளியாளும் பல்லக்கின்மீதேறி
அந்த-வேல்பொருதுங் கண்ணாளும் வீதிபுறப்பட்டாள்
மின்னொளியாள் தாதியரும் மெத்தமனவ்ஸ்தாபமதாய்
ஆச்சிமாரெல்லாம் அனுபோகியாயிருக்க
நம்மிட-ஆச்சிசிறையிருக்க யார்செய்தபாவமென்றாள்
என்று-எல்லோருங்கூடி யேகமாய்த்தானடந்தார்
கவியர்கவிபாட கட்டியர்களார்ப்பறிக்க
கீதமெடுத்துரைக்கக் கின்னரிகள் மீட்டுவர
மேளப்புடைசூழ வீராணந்தான்முழங்க
பட்டுக்குடைகள் பவழநெடுங்குடைகள்
முத்துக்குடைகள் முழுமாணிக்கப்பொற்குடைகள்
சங்கீதவெண்பரிசை யெங்குமுழங்கிவர
மாரிப்பிரம்பிடிக்க மண்டபம்சென்றேறினாள்
அன்னமுந்தாருவும் தன்னிற்பசுங்கிளியும்
கொம்பிற்பழுத்திருக்குங் கோதுபடாமாங்கனிபோல்
வில்விஜயன்தேவியர்கள் மெல்லிமார்வந்தார்கள்
ஒன்றோடேஒன்று உறவணைந்துமெல்லியர்கள்
தோருவடிவழகி துரோபதையாள்தன்னடிக்கே
தேவிதிருவடிக்கே தென்னடிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை மாமியார்தானெடுத்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் மங்கிலியமீடேற
வாள்விஜயன் தன்னோடே மாறுமல்வாழ்ந்திருப்பீர்
என்றுதான்வாழ்த்தியே யேலங்கருங்குழலும்
தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
மாணிக்கச்சிம்மாதனம் மங்கையற்குசோடியென்றாள்
மற்றுமொருபெண்களுக்குவட்டமணைபோடுமென்றாள்
அந்த-வட்டமணைமேலே மங்கையர்கள்வீற்றிருந்தார்
சிங்காதனமேறித் தேன்மொழிமார்வீற்றிருந்தார்
அப்போ-தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அழகியபூங்கொம்பனையாள் அல்லியரைதான்பார்த்து
வெல்லவும்வெட்டவல்லாள் வீரவாளெடுக்கவல்லாள்
செருக்களங்கள்தான்புகுந்துசேவகமும்பண்ணவல்லாள்

மாணிக்கவாளெடுத்து மான்வேட்டையாடவல்லாள்
ஆரமுலையாள் அம்மானையாடவல்லாள்
நாயகியேயுன்னோட்டம் நான்பார்க்கவேணுமென்றான்
அப்போ-தனக்குகவரியிடுந் தாதிமுகம்நோக்கி
அம்மானைபந்துகொண்டு ஆரணங்கேவாருமென்றாள்
தங்கப்பொன்னம்மானை தாதிகள்கொண்டுவந்தார்
ஆணிமுத்தம்மானை அடைவுடனேகொண்டுவந்தார்
பாரித்தஅம்மானை பாஞ்சாலிகைகொடுத்தார்

அருச்சுனன் தேவிகள் அம்மானையாடினது

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானைதான்வாங்கி
அவள்-மார்பில்சரப்பளி மங்கையர்க்குத்தானசைய
குங்குமங்கள்தானொழுக கொம்பனையாளல்லியரும்
அங்கயற்கண்ணம்மையர் அவள்பாடியாடியே
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்டதுவும்
தக்கன்தலையறுத்து தான்நஞ்சையுண்டதும்
விறகுசுமந்ததுவும் வேடனெச்சில்தின்றதுவும்
நரியைப்பரியாக்கி நல்லபதமீந்ததும்
அத்தப்புகழ்பாடி அம்மானையாடினாள்
அப்போ-தோராவடிவழகி துரோபதைதான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானைதான்வாங்கி
முத்துமுகம்வியர்க்க விழிகள்சிவப்பேற
சாய்ந்ததாழ்வடங்கள் சன்னல்பின்னலற்றுவிழ
கன்னிதுயிலெடுத்துக் கானகத்தில்சென்றதுவும்
ஆழிகடலிலே அமர்ந்துபள்ளிகொண்டதுவும்
அந்தவளம்பாடி ஆடினாளம்மானை
நற்சாந்திடமுலையாள் நாககன்னிதான்வாங்கி
சுற்றெங்கும்மாணிக்கம் சூழ்மதிலுமாணிக்கம்
கும்பத்தரையைக் குவிப்பதுமாணிக்கம்
அந்தப்புகழ்பாடி ஆடினாளம்மானை
அந்த-விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்கை
அம்மானையாடாள் பள்ளாங்குழியாடாள் [கொடுத்தார்
பந்துபலவாடாள் பைங்கொடியும்மின்னொளியாள்
சிந்துபலவாடாள் சீரானமின்னொளியாள்
ஆரணங்குமாது அகஸ்தியனார்தான்வாங்கி

ஆரமுலையாளும் அம்மானைதான்வாங்கி
சந்திரனுஞ்சூரியனும் தானுரைத்தபாவனைபோல்
பரந்தமுகங்களும் பார்வேந்தர் தீர்த்தங்களும்
அந்தப்புகழ்பாடி ஆடினாளம்மானை
சோரவள நங்கை சுபத்திரையாள் தான்வாங்கி
உமையாள் தனக்கு ஒருபாகமீந்ததவும்
திங்களிளம்பிறையைச் சிரசில்தரித்ததுவும்
பொங்கவரம்பூண்டு புலித்தோலுடுத்தினது
சிவசங்கராவென்று தையலருமாடினாள்
மற்றுமுள்ளமங்கையர்கள் வாங்கியப்போ அம்மானை
ஆடினார் தங்களிட ஆபரணஞ்சோதிமின்ன
பாடினார் தங்களிட பஞ்சவர்ணகிளிபோலே
கோலங்களாட குழைகளசைந்தாட
கொத்துஸ்தனங்கள்ரெண்டுங் குலுங்கக்குழவியர்கள்
கன்னியர்ஸ்தனங்கள்ரெண்டுங் கனக்கவேவிம்மிடவே
அன்னநடைமாதரெல்லாம் ஆடினாரம்மானை
அம்மானையாடி அணியிழைமார்வீற்றிருந்தார்
அந்த-தோராவடிவழகி துரோபதைநாயகியும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்றாள் ஆனந்தவாழ்மாரி

தாதிகள் சமையல் செய்தது

அந்தமொழிகேட்டு ஆரணங்குதாதியர்கள்
அடிசில்சமைக்கவென்று அல்லவருந்தாமெழுந்து
அடுப்புமெழுகுவார்கள் அட்சதைக்காப்பிடுவார்
எங்குமலங்கரித்து எத்திசையும்நீர்தெளித்து
பானைகழுவி பனிநீருலைவார்த்து
பாலுலைவார்த்து பண்பானமேல்மூடியிட்டு
வடகடலில்முத்தை வாரியெடுத்தாற்போல்
தென்கடலில்முத்தை திரட்டியெடுத்தாப்போல்
சின்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டார்
அரிசியலம்பி அமுதுசமைத்தார்கள்
செம்பொன் அருவாமணை தீட்டிப்பதம்படுத்தி
வாழைக்காய்கொய்வார்கள் வழுதலங்காய்காம்பரிவார்
ஈழப்பலாக்காயை இளமுள்ளுபோக்கடிப்பார்
கனிக்கிறமாங்காயும் கருணைக்கிழங்கெடுத்து

பொற்பதமாகவே பொரிக்கறிக்குத்தானறிவார்
நந்தியென்னும்பூசனிக்காய் நான்காய்ப்பகுந்திடுவார்
கோதையர்கள்பூசனிக்காய் கொய்வார்குழம்பிடுவார்
பாவற்காய்கொய்வாரும் பயிற்றியங்காய்நாருரிப்பார்
பொரிக்கரிக்காகவே புடலங்காய்கொய்திடுவார்
வாழக்காய்வாழைத்தண்டு வாழைப்பூவாழைக்கூட்டை
அவரைக்காய்பாக்கங்காய் ஆய்வார் அரிந்திடுவார்
செய்பொன் அம்மியை தெல்கிழக்காய்தான் திருப்பி
சாய்பாரங்கூட்டுவர்க்கம் தானரைத்துவைப்பார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நல்லபொறிக்கறியும் இராசாக்கள்போசனமும்
வடகப்பொடிபோட்டு மணிசீரகப்போட்டு
காருவிநெய்வார்த்து கறிவேப்பிலைபோட்டு
தாளித்துஇறக்கினர் சகலபதார்த்தங்களை
மணங்கள்குமுகுமென்ன மாதர்கள்புறைக்கேற
செம்பொன் பரியணைமேல் சேர இறக்கிடுவார்
காய்ச்சியபாலும் கச்சாயமுப்பழமும்
அடிசில்சமைத்துவைத்து அனைநடைமாதரெலாம்
அடிசில்சமைத்ததென்று அருஞ்சின்னமூதிவைத்தாள்
ஊதிவசின்னத் தொனிகேட்டுஉத்தமியாள்
சிங்காதனத்தைவிட்டு திகழக்குதித்திறங்கி
முத்துமிதியடியைத் தொட்டுநடந்தசைந்து
அருச்சுனனாதேவயர்கள் அவர்களிடத்தில்வந்து
தோருவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
மெத்தப்பசியோடே மெல்லியமேயிருந்தீர்கள்
போசனமுண்ணுதற்குப் போதவெழுந்தருள்வாய்

அருச்சுனன் தேவிகள் போஜனமுண்ணது

என்றதுகேட்டு எழுந்தார்களெல்லவரும்
அருச்சுனனார்தேவயர்கள் அனைவருந்தானெழுந்தார்
கொம்பனைகளெல்லாங் கூடியொன்றுய்கைகொடுத்து
தேன்மொழிமாதரெல்லாம் சிரித்துவிளையாடி
ஆரணங்குமாதரெலாம் அரண்மனையிற்போய்புகுந்து
கடடியசைந்து துலங்குவளைகுலுங்க
வாசங்கள்மிஞ்சும் மலர்க்குழலில்பூவுதிர
காலோடுங்கையும் கனிவாயுங்கொப்பளித்து

வாயோடுபல் லும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
ஆரவிளமுலையாள் அரண்மனையிற்போய்புகுந்தார்
தாமக்கருங்குழலார் தாதிகளோடிவந்து
மங்கையர்கள் தானிருக்க வட்டமணைபோட்டார்கள்
பாவையர்கள் தான்வரவே பஞ்சவர்ணப்பாய்போட்டார்
இருவர்க்கொருதண்டிகையும் வைத்தாரிளங்கொடியும்
தலைவாழையிலைபோட்டு தண்ணீர்தெளித்தார்கள்
மல்லிகைமொக்குபோல் மாற்றுவெள்ளிநிறம்போலே
தும்பைமலர்போலே சொரிந்தார்கள்போசனத்தை
பொன்போல்பருப்பைவைத்துபுத்துருக்குநெய்சொரிந் [தார்
ஆசைப்படைச்சலுடன் அன்பானபோசனமும்
எடுத்துப்படைத்தார்கள் இளங்கொடிமாதருக்கு
போசனங்களுண்டார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
காய்ச்சியபாலும் கனிவர்க்கமுப்பழமும்
வடைதோசைபாயசம் வகையறவேயுண்டார்கள்
போசனங்களுண்டவர்கள் பொடியிட்டுக்கைதிமிறி
கனிவாயுங்கொப்புளித்து கைகாலுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அனைவரும்வந்தார்கள்
அப்போதுமின்னொளியாள் ஆனருசியுண்டறியாள்
எல்லாரும்போலே எழுந்துவந்துதான்காத்தாள்
தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலந்தானெடுத்து
காச்சாக்களிபாக்கு கம்மாறுவெற்றிலையும்
மோரங்கிப்பாக்கு முத்துசுட்டசுண்ணாம்பும்
பந்நீருஞ்சந்தனமும் பரிமளமும்பூமலரும்
தாதிகள்கொண்டுவந்து தையலர்மார்முன்வைத்தார்
அன்னநடைதுரோபதையாள் அள்ளிக்கொடுத்தாளே
தாம்பூலந்தான்வாங்கி சந்தோஷமானார்கள்

அருச்சுனன் தேவியர்கள் அவரவர்கள்
அரண்மனை சென்றது

அத்தண்டபெண்களும் அனைவோருந்தானெழுந்தார்
அவரவர்கள்தோழிகளும் அவரவர்கள்பாங்கிகளும்
அனலிற்பிறந்தாட்கும் அல்லிப்பெருமாட்கும்
போய்வாருமென பொனனடிக்கீழ்தெண்டனிட்டார்
இருவருக்குந்தெண்டனிட்டு ஏறினார்தண்டிகைமேல்
விடைபெற்றுபெண்கள் வெளிப்பட்டார்மாதரெல்லாம்

மின்னேரிடையாளும் முகங்கருகி தூள்படிந்து
கோதிமுடியாத கூந்தல்சடைப்பற்றினதால்
எங்கிமனந்தளந்து யேறினாள்தண்டிகைமேல்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போய்ச்சேர்ந்தார்

அல்லியும் துரோபதையும் ஆலோசனை செய்தது

அனைவரும்போனபின்பு அல்லிமலர்நாயகியும்
தோருவடிவழகி துரோபதையாள்தன்னுடனே
இருவருமாக யேகாந்தமாயிருக்க
துரோபதையைத்தான்பார்த்துசொல்லுகிறாளல்லியம் [மாள்
அனலிற்பிறந்தவளே ஆச்சியரே நீர்கேளும்
என்மனதிற்கவலையொன்று யிருக்கிறதுவடிவுடையே
பொறுக்கமுடியவில்லை பொற்றணலிற்பிறந்தவளே
சொல்லவிடைகொடுத்தால் சொல்லுகிறேனாச்சியரே
திருவாய்மலர்ந்தருளி திருவுளப்பற்றினால்
மனதில்நினைத்தவரம் மயிலனையேசொல்லுகிறேன்
உத்தரவோவென்றாள் உலகத்தையாண்டகன்னி
என்றதுகேட்டு ஏதுசொல்வாள்துரௌபதையும்
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாள்கிறோமென்றுசொல்லி மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாய்
வீரானசெங்கோலும் மெல்லியரே நீசெலுத்த
மன்னன்விசையனவர் மருவுகின்றமாதேவி
பொன்னணிந்தமார்பன் புலந்திரனைப்பெற்றவளே
வம்பலர்ந்தகோவே வடிவுசூடாமணியே
அம்பலர்ந்தபெண்ணே அருக்காணிபெண்மயிலே
மணம்பொருந்துஞ்சீருலகில் மற்றொருவரில்லாதே
வந்திருந்துவாளெடுத்து வையகத்தையாண்டவளே
தன்பெயருஞ்செல்வம் தையலுடையவளே
உன்பெயருக்கொப்பானார் உலகத்தில்யாருமில்லை
மங்களமுகமுங் கனிமுறுவல்செவ்வாயும்
திலர்தமிடுதலும் செங்கரும்புபோல்விழியும்
உன்னழகுக்கொப்பாவார் வுலகுதனில்யாருமில்லை
ஒத்தணைந்துபுல்கி ஒளிமுகத்தைமுத்தமிட்டு
கட்டழகிநீநினைத்த காரியத்தைச்சொல்லுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்

அருச்சுனர்தேவிமார் ஆரணங்குமாதர்களில்
வாள்விஜயன்தேவிமார் மங்கையர்கள்பெண்களிலே
நம்முடனேயொத்தவொரு நாயகியார்சக்களத்தி
அனைவரும்வாழ்ந்து அதிகசுகமாயிருக்க
அதிலேயொருத்தி அதிகதுக்கமாவதென்ன
வாழாதபெண்ணாகி மடந்தைசிறைகாப்பதென்ன
புருஷனைப்பறிகொடுத்தார் பெருஞ்சிறைகாப்பார்கள்
புருஷனிருக்கையிலே பெருஞ்சிறைகாப்பதென்ன
கணவனைப்பறிகொடுத்தார் கைம்பெண்டாயிருப்பார்கள்
கணவனிருக்கையிலே கைம்பெண்டாயிருப்பதென்ன
மஞ்சளிழந்து மணமிழந்துபோவானேன்
இப்படிக்குமுண்டோ யிரக்கமுள்ள ஆச்சியரே
காவேரிநாடன் கட்டழகன்பயின்றெடுத்த [ள்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மெல்லிநல்லா
மாதரிளங்கொடியாள் வாழாதிருப்பதென்ன
குடியில்பெண்வாழாமல் கொம்பனையேயிருந்தாலும்
மாலையிட்டகன்னியவள் மனஞ்சலித்தாளாமாகில்
பழுதல்லோதன்குடிக்கு பாஞ்சாலன்சீர்மகளே
முந்தாணிதான்போட்டு முடக்கினல்தோஷமல்லோ
நாயகிசுபத்திரைக்கு நாலுமுறையாவானேன்
சுவாமியுடதங்கை சுபத்திரையாள்தன்முறையை [க்கு
அதை-பாதிபங்களிப்போம்பைங்கிளியாள்மின்னொளி
உந்தன்திருவுளத்துக் கொக்குமோ ஆச்சியென்றாள்
தோருவடிவழகி துரோபதையாள்தான்கேட்டு
என்மனமெண்ணினதுபோல் யிருந்ததேயுன்மனதில்
ஆனபடியால்சீமை ஆள்வதும்வெல்வதும்
உந்தனிடபுத்திக்கு வொப்பானவரொருவரில்லை
மற்றொருவர்தந்தமக்கு மதிவருமோதங்கையரே
ஆச்சியரேபெண்பெருமா ளருச்சுனனார் செய்தபிழை
என்னென்றுசொல்வேனெழில்விஜயன்செய்தபிழை
அவள்-சிவபூசைவேளையிலே சென்றாராம்தோர்விஜயன்
சரசங்கள்செய்து தையல்கொங்கைதான்பிடித்து
அவள்கையைபிடித்து அழும்புபண்ணும்வேளையிலே
அவளறிவழிந்துமெய்சோர்ந்து தவர்முகத்தைபார்த்து
சிவபூஜைதான்குலைந்து சிந்தைமுகமவேறுபட்டு
கோபித்துக்கண்சிவந்து கொம்பனையுங்கூறிவிட்டாள்

மின்னொளிக்குவேண்டாதவேம்பெனவூதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனெனவூதிவைத்தாள்
ஆகையினாலே அசந்தார்காணருச்சுனரும்
என்றுமிவளுரைக்க எந்திழையாளல்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
துரும்பசைந்தேன்சொரியும் சோழனதிருமடந்தை
தாழம்பூவாலே மடைதிறந்துநீர்குடித்து
தாமரைப்பூவாலே மடைதிறந்துபாய்கிறது
சேற்றால்மடைதிறந்தால் செல்வங்குறையுமென்று
பணத்தால்மடைதிறந்தால் பாசுபிடிக்குமென்று
சோற்றால்மடைதிறக்கும் சோழன்திருமடந்தை
அப்படிக்கொத்த அழகுள்ளநாயகியும்
வாழாதிருக்கவந்த காரியமேனேந்திழையே
ஆரணங்குசிறையிருக்க காரியமேன்வாழ்வாசி
தேனின்குழலாளும் சிறையிருக்கலாகாது
என்றுஉரைத்தாள் ஏந்திழையாளல்லியரும்
அவ்வார்த்தைதான்கேட்டு அனலிற்பிறந்தவளும்
தோகையந்தஅல்லியற்கு துரோபதைஏதுசொல்வாள்
பிறவாமிடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
மயிலனையாள்மின்னொளியை வாழ்க்கைநிசமானால்
ஆரண்மனைக்குப்போகாமல் ஆச்சியரேயிங்கிருந்து
பொற்கொடிமாதே பூங்காவனமிருந்து
அருச்சுனரையிங்கே அழைத்துவரச்சொல்லி
அருச்சுனரைக்குறவேடம் ஆகவேதான்போட்டு
குறக்குலத்தில்வாழுகிற குலமாதரைப்போல
மின்னொளியால்வாசலிலே வேண்டுங்குறிசொன்னால்
வலியஅழைப்பாள் மாதுகருங்குழலும்
மின்னொளியாள்வாசலிலே வேண்டுங்குறிசொல்ல
இதங்கியந்தமின்னொளியாளிளவிசயன்சேதிகேட்டால்
கூடிசுகப்படுவாள் குறைதீர்ந்துவாழ்ந்திருப்பாள்
இந்தட்சணத்தி லிப்பொழுதேசெய்வோமென்றாள்
அப்படியேசெய்யுமென்றாள் ஆரணங்குவல்லியரும்

அல்லியரும் திரௌபதையும் அருச்சுனனை
அழைத்துவரச் சொன்னது

அல்லிப்பெருமாளும் அகங்காரநாயகியாள்
தன்னருகேநிறை தாதியைத்தானழைத்து

நான்குபேர் தாதிகளை நாயகியாள் தானழைத்து
கூறுவாள்கொம்பனையாள் கொஞ்சுங்கிளிபோல
ஆணுலழகுமன்ன னருச்சுனராஜாவை
பரமசிவனிடத்தில் பாசுபதப்பெற்ற
பாசுபதப்பெற்ற பார்த்தாருச்சுனரை
எங்கேயிருந்தாலும் எவ்விடத்திற்சென்ருலும்
சந்தனவடிவழகர் தருமரண்டையிருந்தாலும்
சிங்கக்கொடிபடைத்த ஜெயமுடையவீமரவர்
வெற்றிமதயானை வீமரண்டையிருந்தாலும்
நாமக்கொடியுடைய தருமரண்டையிருந்தாலும்
சாஸ்திரத்தில்வல்லதொரு சகாதேவராஜரண்டை
அங்கேயிருப்பாரோ அருச்சுனவீரியரும்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவிடமிருந்தாலும்
ஸ்ரீராமர்தங்கையிடம் சேர்ந்துயிருந்தாலும்
விலைமாதர்வீதியிலே வேந்தர்ருந்தாலும்
தேவடியாள்வீதியிலே தெருக்களெல்லாமாராய்ந்து
ஆலயங்கடோறும் ஆராய்ந்துபாருமென்ருள்
கண்டதேயுண்டானல் கைப்பிடியாய்த்தான்பிடித்து
ஏதொன்றுஞ்சொல்லாம லழைத்துவாதியென்ருள்
நானழைத்தேனென்று நீயழைத்துவாருமென்ருள்
என்றதுசொற்கேட்டு எழுந்தார்கள்தாதியர்கள்
வீசுங்கவரியை மிகவொருத்திகைபிடித்து
நான்குபேர்தாதிமார்கள் நடந்தார்விசையுடனே
அருச்சுனரைத்தேடி அரிவையர்கள்போருர்கள்
வீதிதெருவெங்கும் மெல்லியர்கள்தேடுகிருர்
தருமர்கொலுவிலும் தம்பிமார்வீதியிலும்
வீமர்கொலுவிலும் விலைமாதர்வீதியிலும்
குந்திகொலுவிருக்கும் கொம்பனைமார்வீதியிலும்
ஆலயம்வீதியிலும் ஆரிழைமார்வீதியிலும்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்து
ஸ்ரீராமன்தங்கை சிற்றிடையாள்வீதியிலும்
தேடிவருகிருர்கள் தேர்விஜயனருச்சுனர்
சுபத்திரையாள்வீதியிலே சுந்தரவாழ்மார்பர்
மூத்தானவாழ்மார்பன் முறையிட்டுத்தானெழுந்து
வாசமுமிழந்து மலர்குழலில்பூவுதிர
கைகாலுஞ்சுத்திபண்ணி கனிவாயுங்கொப்பளித்து

வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திபண்ணி
ஆணழகன்வாழ்மார்பில் ஆடைவிரித்துடுத்தி
ஆலகாலவிஷமுண்டா ருளியவெண்ணீறு
சிவனுடையவெண்ணீறு திருநீற்றுகாப்பணிந்து
தருமரடிவணங்க தனஞ்சயன்வேண்டுமென்று
அம்புவில்லுங்கைப்பிடித்து ஆனந்தவாழ்மார்பன்
தங்கமிதியடிபோல் தானசைந்துமன்னவனும்
வேந்தர்பெருமாளும் வீதிபுறப்பட்டார்
தோளிலிடும்பச்சைவடம் துப்பட்டிதொங்கிவர
காயாரக்காய்ந்ததொரு கமுகினிளம்பாக்கும்
வாயாரத்தின்று வலதுகையில்சுருள்பிடித்து
தென்றற்பெருமாளும் தெருவிலேபுறப்பட்டார்

தாதியர்கள் அருச்சுனரையழைத்துவருதல்

கட்டழகிதோழிமார் கண்டார்களருச்சுனரை
விஜயர்க்கெதிராக மெல்லியர்கள்தானடந்து
பார்த்தன்திருவடிக்குப் பாவையர்கள்தானடந்து
வந்துபணிந்தவரை வாழ்மார்பன்கண்ணிற்கண்டு
யார்பணிதாதிநீ அறியவுரையுமென்றார்
நான்யார்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
தீயிற்பிறந்தவளும் தென்னுடன்பாவையரும்
மலரிற்பிறந்தவளும் வைகைவாழ்நாட்டாளும்
இருவருங்கூடி இணைகாவல்வந்திருந்து
மலர்க்காவில்வந்திருந்து வண்டார்க்கருங்குழல்மார்
உம்மை-ஏதோதெரியாது இட்டுவரச்சொன்னார்கள்
பிடித்தபிடியுடனே அழைத்துவாருமென்றார்கள்
இருவர்பணிதாங்களென இரங்கியேதெண்டனிட்டார்

அருச்சுனன் பூங்காவனம் வந்தது

இருவர்பணியென்றுலுமே எழில்விஜயனுளமகிழ்ந்து
சந்தோஷப்பட்டாரே தாமந்தவாழ்மார்பன்
உள்ளங்குளிர்ந்தாரே உடம்பெங்கும்பூரித்து
சரீரங்குளிர்ந்தாரே சருவாங்கம்பூரித்து
தருமர்கொலுவை தனஞ்செயனுந்தான்மறந்து
வீமர்கொலுவை விஜயனுர்தான்மறந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து

பூங்காவனந்தாண்டி போரானேவாழ்விஜயன்
தூரவருகையிலே தேன்மொழிமார்கண்டார்கள்
சுந்தரப்பூமுடியை தூரமேகண்டார்கள்
துலங்குமதிமுகமுஞ் சுந்தரப்போழகும்
வடிவழகுமொப்பனையும் வாழ்மயிலாள்கண்டாளே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
தோராவடிவழகி துரோபதைக்குயேதுசொல்வாள்
பார்த்தீரோவாச்சியரே பார்த்தீபன்வடிவழகை
அழித்தழியாச்சந்தனமு மஸ்தகிரிபொட்டழகும்
பிரிந்தபுரிநூலழகும் பொருந்தவிரியழகும்
தோளில்துளசிமாலை தொங்கிவருகிறதும்
பச்சைநிறமும் பவழம்போல்பல்லொளியும்
மொச்சைகருங்குழலு முறுவல்கனிவாயும்
மனையவளோட்டிய மஞ்சள்துவணியும்
மஞ்சள்துவணியும் மையற்றவாசங்களும்
காவியங்களோதும் கனிவாயுங்கண்மலரும்
இணையொத்தமங்கையரை இணைகின்றவாழ்மார்பும்
தேவேந்திரன்மகன் செம்பட்டுடையழகும்
கண்டீரோயாச்சியரே கட்டழகன்தன்வடிவை
வாழஅதிஷ்டமில்லாள் மின்னொரிடையாளும்
ஏழைஎன்றமின்னிடையா லிளங்கொடிவேண்டேனெ
ஸ்ரீராமன்றங்கையவள் செய்தவதிஷ்டமிது [ன்றூர்
மாயவர்தங்கையவள் வல்லாண்மைகண்டீரே
மண்ணளந்தான்தங்கையிட மாயமிதுகண்டீரே
இவர்தோளில்சார்வதற்கு என்னதவஞ்செய்தாளோ
மன்னர்விஜயாது மதிமுகத்தைபார்த்திருந்தாள்
அவ்வளவில்பார்த்தீபன் ஆரணங்குமுன்னேவந்தார்
இருளடைந்தசாலையிலே எழுந்திருந்தசூரியன்போல்
நடந்துவந்தாருச்சுனரும் நான்குதிசைநடுங்கி
தீயிற்பிறந்ததொரு தேன்மொழியாளருகில்வந்தார்
அல்லிப்பெருமாளி னருகாகவந்துநின்றூர்
பாண்டிப்பெருமாளும் பராமுகமாய்த்தானிருந்தாள்
நாமிவரைப்பார்த்து நகைத்தோமேயானல்
மிகவுமிலேசாக வீரியத்தைப்பேசிடுவார்
காரியமல்லவென்று கண்சாயலாயிருந்தாள்
பாதச்சிலம்பழகை பார்த்துநகைத்திருந்தாள்

காண்டாவனமெரித்த காளையவர்கண்சிவந்து
கோபித்துகண்சிவந்து கோபாலன்மைத்துனரும்
கச்சுப்புறைதனிலே கைபோட்டான்காவலனும்
பரிசைமேல்கைப்போட்டு பாங்குஉறுவினனே
கரணங்கள்போடுகிருன் கைலாகுபோடுகிருன்
முன்கந்துபின்கந்தாய் முனைவீர்ன்பாயுகிருன்
கண்டந்ததாதிமார் கடுகியேயோடலுற்ருர்
சூரியனைக்கண்ட பனிபோலவிலகினர்
கண்டாளேயல்லியரும் காத்தசைந்தார்போல்குதித்து
மச்சத்தைவிச்சுளி வநதொருக்கால்பாய்ந்தார்போல்
வாளுக்கேனென்றுசொல்லி வாழ்பாண்டிநாட்டாளும்
கைவாளைப்பிடிங்கிக்கொண்டு கலுக்கென்றுநகைத்தா
கண்டீரோ ஆச்சியரே கட்டழகன்சேவகத்தை [ளே
பார்த்தீரோ ஆச்சியரே பார்த்திபன்சவுரியத்தை
இன்றேயறிந்தேனே எழில்விஜயன்சவுரியத்தை
அன்றேயறிந்தேனே அருச்சுனராண்மைகளை
பாஞ்சாலன்பந்தலிலே பிராமணனைப்போலேவந்து
வில்லைவளைத்தது முடுக்குந்தளுக்குகளும்
முன்னேவரவொட்டாமல் வெட்கியிருந்ததுவும்
எனக்காகவில்வளைத்து எந்தனைமாலையிட்டு
தானுளமாட்டாமல் சவுரியராஜதுரை
ஐவருக்குப்பெண்ணுகி அமர்த்திவைத்தவண்மைகளை
அன்றேயறிந்தேனே ஆணழகன்சவுரியத்தை
என்றுநகைத்தாளே இளங்கொடியாள் துரோபதையும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளே துசொல்வாள்
அதுவேயல்லாமல் ஆயிரப்பாண்டியர்முன் [த்தார்
அன்றுமொருஆண்டியைப்போல் ஆணழகன்வடிவெடு
கையில்மடல்பிடித்து கண்கெட்டான்போலிருந்தார்
அன்றேயறிந்தேனே அருச்சுனர்வீரியத்தை
அன்றுநகைத்தாளே ஏலப்பசுங்கிளியும்
அப்போதுஅர்ச்சுனரும் ஆணழகரேதுசொல்வார்
அன்னமேதேனே அமுதேபசுங்கிளியே
இருவருமாய்நீங்க ளிந்தவனத்தில்வந்து
என்னையழைத்தது ஏதுகருமமடி
ஏதுக்குமாதே நீங்கள் இட்டுவரச்சொன்னீர்கள் -
வரவழைத்தகாரியத்தை வாய்திறந்துசொல்லென்ருர்

அப்போது அல்லியவள் ஆரணங்குமேதுசொல்வாள்
உன் மச்சினியாள்வாழ்வை பறிக்கவென்று நினைக்கவில்
சுபத்திரையாள்வாழ்வை பறிக்கவந்தாராருமில்லை [லை
கோபங்களேங்காணுங் கொத்துப்போர்வீரியரே
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
மச்சினியாள்வாழ்வை பறிக்கவந்தோம்வாள்விஜயா
சுபத்திரையாள்வாழ்வை சுகம்பறிக்கவந்தோமே
அத்தைமகளென்றுசொல்லி ஆதரித்தகன்னியரை
மயல்கொண்டகன்னியரை வாழவிடோம்வாள்விஜயா
செப்பிடுங்காரியத்தை செய்கிறோமென்றுசொன்னால்
கொற்றவனே நீரும் குருவாணையிட்டாக்கால்
அப்போது நாங்களுரைப்போங்கானருச்சுனரே
இல்லாமல் நாங்களுரையோங்காணழகா
என்றதுகேட்டுமவர் ஏதுரைப்பாரருச்சுனரும்
தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
அனலிற்பிறந்தவளே ஆரணங்குதுரோபதையே
அல்லியிற்பிறந்தவளே அல்லிமலர் நாயகியே
வையைவளநாட்டாளே வாழ்வரசியல்லியரே
அரிவையரே நீங்களருளியகாரியத்தை
மீறிநடந்ததுண்டோ வேல்பொருதுங்கண்ணாளே
தருமர் திருவாணை தம்பிமார் தன்னாணை
வீமர் திருவாணை விமலனார் தன்னாணை
குந்தியம்மாள் தன்னாணை குருக்கள் திருவாணை
சங்கவதி தன்னாணை சுவாமியார் தன்னாணை
தென்னாட்டிற்தன்னானை தீயில்வந்தாள் தன்னாணை
பெருமாள் திருவாணை பிள்ளையுமறிவேனே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
ஆணைபெரிதுகண்டீர் அமையுமமையுமென்றாள்
ஆணையிட்டோந்தோஷமில்லை அருச்சுனரேகேளுமெ
கொம்பிலிருந்து குதித்தகிளிபோலே [ன்றாள்
அன்னம்போல்வாய்திறந்து ஆரணங்குமேதுசொல்
எங்களோடொத்த ஏந்திழையாள்பொற்பாவை [வாள்
காவேரிநாடன் பயின்றெடுத்தகட்டழகி
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைமெல்லி நல்லாள்
அணியிழையாள்வாழா திருப்பதென்ன ஆணழகா
குடியில்பெண்வாழாதே கொற்றவரேயிருந்தாலும்

முந்தாணிபோட்டு முடங்கினளாலே
பழிப்பல்லோ தன்குடிக்கு பார்த்தர்பெருமாளே
அதையெண்ணி நாங்களும்மை யழைத்தோங்காணை
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார் [முகா
என்னாலேவாழா திருந்தாளோஏந்திழையாள்
தன்னாலேவந்த வசமல்லோதையலற்கு
வாயாலேயல்லோ வாழ்விழந்தாள்மின்னிடையாள்
தோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
குடியாள்சிறையிருந்தால் குற்றங்கள்வந்துவிடும்
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
பொற்கொடியாள்கோயிலுக்கு போகாதநேரமுண்டோ
மின்னொளிக்குவேண்டா கணவனென்றூதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனென்றூதிவைத்தாள்
ஊதிவைத்தாள்கோயிலுக்குஉத்தமியேநான்போகேன்
மணமாலைசூட்டலையோ மண்டலங்கள்தானறிய
மதியாமல்ஊதிவைத்தாள் வையகங்கள்தானறிய
இதுவொருகாரியம்போல் என்னையிங்கேவரவழைத்து
ஆணையிடவைத்து அரிவையரேகாரியமேன்
என்றுமிகச்சீறி எழுந்திருந்தாரருச்சுனரும்
சீறியெறிபறந்து சிங்கக்குட்டிபோலெழுந்தான்
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
விஜயரைகையமர்த்தி மெல்லியவளேதுரைப்பாள்
ஆதிசிவன்பூசையிலே அருச்சுனரேசென்றீரோ
சங்கரன்பூசையிலே போய்சென்றுதார்வேந்தா
பூசைசெய்யும்வேளையிலே போயவளையகந்தைசெய்து
வாடியென்றுபோடியென்றும் வம்புசெய்ய நியாயமுண்
அதனால்மின்னிடையும் ஆகாதவம்பனென்றாள் [டோ
மங்கைமாரெல்லவரு மாளிகைக்குவந்தார்கள்
தட்டிலேபாக்கும் தனிக்கையிலேவெற்றிலையும்
அள்ளியளித்தேன்யான் ஆரணங்குபாவையற்கு
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியுந்தீண்டேனென்
வடிவழகிமேனியிலே மஞ்சளும்பூசாமல் [றாள்
அஞ்சனமுந்தீண்டாதே அலர்தாமரைக்கண்ணாள்
பவளச்செவ்வாயில் பாக்குத்தரியாமல்
சலவையுடுக்காமல் சந்தனங்கள்பூசாமல்

மனதுகலங்கியே வந்திருந்தாள்சபைநடுவே
இது-ஆகாதுகாணும் அரசர்பெருமாளே
பழுதுகள்வந்திடுமோ பார்த்தீபராஜாவே
எண்ணறக்கற்றும் எழுத்தறப்படித்தாலும்
பெண்மதியாலல்லவோ பிழைமோசமாகிறது
பெண்ணின்பிழையை பொறுத்தவர்புண்ணியர்காண்
பெண்சாதிசெய்தகுற்றம் பெரிதென்றுபார்ப்பாரோ
எங்களைப்பற்றி இளவிஜயாபோய்வாரும்
கூடியணைந்து குறைதீர்த்துவாருமையா
அவள்சிறையைத்தீர்த்து ஆணழகாவாருமென்றார்
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
உங்களிடசொற்படிக்கு உத்தமியேநாடிசென்றால்
மாதரிடகோட்டையிலே வலியநான்போனக்கால்
இன்னமொருதரம் வம்பனென்றாலென்னசெய்வேன்
ஆகாதவம்பனென்றால் ஆரணங்கேயேதுசெய்வேன்
நான்போவதில்லையென்று நகைத்தவருங்கூறினார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
கண்டீரோ ஆச்சியரே கட்டழகன்தருக்கத்தை
பார்த்தீரோ ஆச்சியரே பார்த்தீபன்தருக்கத்தை
இன்றேயறிந்தேனே எழில்விஜயன்தருக்கத்தை
ஆறாயிரவர் அடிவணங்கும்வாசலிலே
வையகத்துமன்னவர்கள் வந்தேறும்வாசலிலே
தேசத்துமன்னவர்கள் சென்றேறும்வாசலிலே
அரசிலைத்தோரணம் ஆர்க்கும்தலைவாசலிலே
சீதேவிநின்று திறைகொள்ளும்வாசலிலே
செம்பொன்னும்முத்தும் திருவுமரசிலையும்
அம்பொன்னும்முத்தும் ஆர்க்குந்தலைவாசலிலே
காற்றடித்தால்மின்னும் காந்தாரிவாசலிலே
தந்தையுந்தாராவும் தன்னிற்பசுங்கிளியும்
ஒக்கவிளையாடும் உத்தமியாள்வாசலிலே
ஆறாயிரக்காதம் அகலமுள்ளவாசலிலே
அலைகடல்சூழ்வையகத்து அரையர்கள்வந்திருக்க
எல்லையுள்ளராஜாக்கள் இளவரையர்வந்திருக்க
முத்தினமுடிதரித்த முடிமன்னர்வந்திருக்க
வச்சிரமுடிதரித்த மகாமன்னர்வந்திருக்க
மாணிக்கமுடிதரித்த மகாராஜர்வந்திருக்க

ஐந்நூறுகோடி அரசமன்னர்வந்திருக்க
எழுநூறுகோடி இளவரையர்வந்திருக்க
எள்ளுபோட்டாஎள்ளுவிழா இளவரையர்வந்திருக்க
அப்பெரியமண்டபத்தில் ஆருயிரவர்முன்னே
வெட்கங்களில்லாமல் வேந்தர்பெருமாளும்
அன்றும்ஒருஆண்டியைப்போல் அதிதிப்ரதேசியைப்
பரமசிவன்பேகலே பார்த்தன்வடிவெடுத்து [போல்
கையில்மடல்பிடித்து கண்கெட்டோர்போலிருந்தார்
எனக்குமையல்கொடுத்து என்னொட்டங்கண்டிருந்தார்
அன்றேயறிந்தேனே அருச்சுனராண்மைகளே.
என்றுபரியாசம் இயலுடனே தானுரைத்து
வாருங்காணருச்சுனரே வாள்விஜயராஜாவே
வையகத்தில்வாழுகிற மாதர்குறத்திபோலே
குறவேஷம்போடுகிறோம் கொம்பனையாள்வீடுசென்று
வலியஅழைப்பாள் மாதர்கருங்குயிலும்
கட்டழகிமின்னிடைக்கு கைபார்த்துகுறியுரைத்து
கூடிக்கலந்துவாரும் கொம்பனையாள் மின்னொளியை
வணங்கியந்தமின்னொளியும் மாதுகலந்திருப்பாள்
கட்டழகிமின்னொளியின் காதலைத்தீர்த்தருள்வீர்
என்னாணைவாள்விஜயா எனக்காகநடந்தருள்வீர்
போய்வாருமென்றாளே பொற்கொடியாள்மங்கையரும்
காண்டாவனமெரித்த காளையருந்தான்கேட்டு
அவளாணைபெரிதென்று ஆனந்தவாழ்மார்பன்
நீசொன்னபடியேநான் நேரிழையேபோகிறேனுன்
ஆணைவிடுமென்றார் அரையர்பெருமாளும்
விட்டேன்காணாணையென்றாள் மெல்லியருமப்போது
என்றதுகேட்டு இசைந்தாரேவாள்விஜயன்
சந்தோஷப்பட்டாரே தாமந்தவாழ்மார்பன்
அல்லியற்கும்துரோபதைக்கும் ஆரணங்குயிருவரிலே
நடுவாகவந்தமர்ந்தார் ஞாயறுதித்தாப்போல்
இருவர்நடுவாக இளவிஜயன்வந்தமர்ந்தார்
அப்போதுதாதிமார் ஆரணங்குமோடிவந்தார்
நாற்காலிபோட்டார்கள் நல்லமணையுமிட்டார்
முக்காலிபோட்டார்கள் முன்னேயணையுமிட்டார்
வட்டமணைமேலே வந்தமர்ந்தானருச்சுனரும்
அருச்சுனருக்குப்பின்னால் அல்லியரும்வந்தமர்ந்தாள்

அருச்சுனனார்பின்னழகும் ஆபரணந்தன்னழகும்
முதுகழகுந்தோளழகும் முதுகில்மச்சரேகைகளும்
மீசைகறுக்கழகும் விழிநல்லபார்வைகளும்
கச்சுகட்டுமுன்னழகும் கத்திசுருக்கழகும்
இடையழகும்நடையழகும் இசைந்தவடிவழகும்
கூந்தலழகுகளும் கொண்டசகதாழ்களும்
கண்டுமயங்கினாள் கட்டழகிமூர்ச்சையானாள்
கண்டார்கள்தோழிமார் கடுகிப்பயந்தெழுந்து
வெண்சாமரைகொண்டு வீசினாளல்லியரும்
வீசக்கலைதெளிந்தாள் மெல்லியிளங்கொடியாள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இராசாத்தியாயிருந்து நாயகியேபெண்மயிலே
வையகத்தையாண்டிருந்த வாழ்வரசிராசாத்தி
கண்டுமயங்குவரோ கட்டழகன்ராசாவை
பார்த்துமயங்குவரோ பார்த்தீபராசாவை
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனமகிழ்ந்து
அருச்சுனனார்கூந்தலை அவிழ்த்தாள்செகத்தாடை
ஆணலழகுமன்னன் அருச்சுனருமேதுசொல்வார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுகிறார்
சோர்ந்துவிழுந்தீரோ சுந்திரப்பூமுடியே
மதுரைவளநாட்டாள் மச்சினியேசோர்ந்தீரோ
இராச்சியத்தையாளுகிற இராஜாக்கள்சோர்வாரோ
நல்மகுடம்பூண்ட இராஜாத்திசோர்வாரோ
திக்கரசையாண்டவர்கள் சீர்குழலேசோர்வாரோ
ஆறுயிரவர்கள் அணிதிரளாம்பாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் பேரெழுதியண்ணருக்கு
தலையிரக்கங்கொண்டுவந்து தார்குழலேவந்தீரோ
வடிவில்லாவம்சத்தில் வடிவுதந்தீர்நாயகரே
இப்படிபரியாச மியலுடனேதானுரைத்தார்
குங்குமத்தின்டோளன் குலுங்கநகைத்தார்கள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
ஆர்காணுமருச்சுனரே அதிசயமாயெண்ணாதே
தானேயழகென்று நலமுடனேபார்த்தீரே
சோர்ந்துவிழுந்தாளென்று சொல்லுகிறீருச்சுனரே
கொத்தார்குழலியவள் கொலுவிருக்குங்கண்களுக்கு
தூக்கங்களில்லாதே துன்னுங்கருங்குழலும்

துய்யகருங்குழலாள் தூங்கிவிழுந்தாள்காண்
ஆகடியம்பேசுகின்றீர் ஆணழகாருச்சுனரே
ஆஆஆவென்று அலைந்துயலைத்துகிறீர்
உம்முடையதோல்வாயை யுள்ளடக்குமருச்சுனரே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
காளைதன்னை குறத்தியாகக் காணச்சமைக்கவேண்டும்
ஏழல்லோதாரனே இந்திரனார்புத்திரனே
கொற்றவரைமாதுகன்னி குறக்கோலமமர்த்தவென்று
மயிரவிழ்த்துபின்போட்டு வாரிமுடிக்கலுற்றார்
ஏத்தமஞ்சள் நின்று உருமெத்தபூங்குழலே
வண்டுமுதுகோடுபோலே மயிரை நிறமாக்கி
விட்டுவிரித்தாற்போல் விடுதுய்பைபூத்தாற்போல்
வந்துவிழுந்தது மன்னவனார்தோள்மேலே
எல்லாத்தலைமயிரும் ஒருசாணிருசாணு
எல்லார்த்தலையயிரும் ஒருமுழமிருமுழம்
அருச்சுனனார்கூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வந்துவிழுந்தது மன்னனுடசேஷயங்கள்
காவேரிவந்து கரைசேர்ந்துநின்றாப்போல்
தழுவுக்கடங்காத தனிகொண்டசேஷயங்கள்
கீறிவகுத்தாளே கிளிபவளச்செவ்வாயால்
முடியைவகுத்தாளே முதுகெங்குநதோன்றுதே
கைகளசைந்தாலே காண்டீபன்தோள்சேர்ந்தால்
சிற்றிடையாள்மாது சிறுவிரல்நோகுதென்று
மற்றுமசைந்தாலே மயிராற்றவொண்ணுதே
மாதந்தஅல்லியற்கு மதிமுகத்தில்வேர்வையிட
கண்டார்கள்தாதிமார் கடுகியேயோடிவந்து
வெண்சாமரையெடுத்து வீசுகிறாளல்லியர்க்கு !
தாமக்கருங்குழல்மார் தாதிகளேதுசொல்வார் !
அருச்சுனனார்கூந்தலை யலங்காரஞ்செய்வதற்கு !
அகத்தினதுள்ளாக அடியார்களாலாகாதோ
எங்களாலாகாதோ என்றுசிலரோடிவந்தார் !
யானடியேனடியேன் என்றுபலரோடிவந்தார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
வண்டார்குழலாள் மலர்க்கரங்கள்நோகுதென்று
உண்டானதாதிமார் ஓடியிங்கேவரலாமே
இவர்-ஏழுபிராயத்தில் எதிர்த்துவந்தநீள்முகனை

வாளெடுத்துவேலெடுத்து வளைச்சக்கரந்தானெடுத்து
கத்தியெடுத்து கனத்தவில்லுங்கைபிடித்து
ஈட்டியெடுத்து எரிபாணந்தானெடுத்து
அப்பெரியசேனைகளும் ஆனைகுதிரைகளும்
வந்தெதிர்த்தராசாக்கள் மந்திரிகளுள்ளவரை
கண்டதுண்டமாகக் கண்டித்தாள்பாணத்தினால்
நீன்முகனை மயிர்பிடித்து நேரிழையாளப்போது
தன்னுடையதேரின்கீழே நீன்முகனையிரடினளே
இத்தனைசேனைகளை எதாய்செயித்தாள்காண்
மயிர்முடிக்கநோகுதே மாதரிடைகைத்தலங்கள்
பச்சைபசப்போ பசப்பறியீர்பைங்கிளியே
மற்றொருவர்வந்து மயிர்வகுக்கலாகாது
சிற்றிடையாள்வீடு தேன்மொழியேநான்போகேன்
அல்லியேயுன்னுணை அனலில்வந்தாள் தன்னுணை
என்றதுகேட்டு எதுசொல்வாள் துரோபதையும்
வீணனவார்த்தைகளை வேண்டாங்காண்வாள்விஜயா
எங்களுக்காகவே இத்தனையுஞ்செய்கிறது
எங்களிடகாரியத்தை நிறைவேற்றப்போகிறீரோ
நீரேசுகப்படுவீர் நேரிழையாள்வீடுசென்றால்
பாராளமைந்தன் பாக்கியந்தான்பெறுவீர்
தருமத்தைதானினைந்தோம் தாமந்தவாழ்மார்பா
மற்றொருவர்வந்து மயிராற்றக்கூடாதோ
பின்னொருவாசலுக்குப் போகிறவரல்லவே
நானேநானென்று நடந்தீர்குறியாக
ஆனழகாஉந்தனுக்கு ஆகாதோமற்றொருவர்
நானேவருகிறேன் நல்விஜயாஉந்தனுக்கு

அருச்சுனரை குறவேஷந்தரித்து அலங்கரித்தது

என்றந்தமாதரும் இளவிசயன்மயிராற்றி
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபொன்னிதழும்
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபூவிதழும்
பொன்னிதழும்பூவிதழும் பூட்டியலங்கரித்து
வாரிமுடித்தாளே வாள்சவுரிவுள்ளேவைத்தாள்
மல்லிகைத்தாழை மணமுள்ளசெண்பகமும்
இருவாட்சிமல்லிகையும் உவர்க்குமதிசெண்பகமும்
கொன்றைகுடமல்லிகையும் கொத்தலரிமந்தாரை

வைத்துமுடித்தாளே மயிருக்கழகாக
குச்சுகளுங்கட்டியே குப்பியலங்கரித்தாள்
செம்பொன்சரட்டாலே சேர்ந்ததிருமணியும்
கொங்குமதயானை நெருங்கக்குழல்முடித்து
மங்கையரைப்போலாகச் சொருகினாள்மன்னனுக்கு
மாதரைப்போலாக மங்கைநல்லாள்தாள்முடித்தாள்
வயிரக்கடுக்கனை வாங்கியவர்காதிலிட்டு
காதுக்குப்பொன்னோலை கட்டழகிசாத்தினாள்
கொந்தளஓலையிட்டாள் கொப்பியிட்டார்வாளியிட்டார்
பக்கப்புகடிகளும் பச்சைக்கல்முறுகுமிட்டாள்
முத்தணிந்தமார்பில் முத்துரவிக்கைபோட்டாள்
நாய்க்காரைப்பொன்னோலை நடுக்கழுத்தில்சாத்தினாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுறமாம்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இரத்தினபொன்தாலி
முத்துமணித்தாழ்வடமும் மார்நிறைந்ததாழ்வடமும்
வட்டப்பதக்கமும் மார்நிறைந்ததாழ்வடமும்
மூன்றும்பிறைபோலே முத்துகண்டிதாழ்வடமும்
ஐந்தாம்பிறைபோலே அழகானதாழ்வடமும்
சந்திரகாரஞ்சரப்பளியும் தரித்தாளேவிஜயருக்கு
மூக்குத்திசிந்தாக்கு முன்கையிலமுதாரிகளும்
பத்துவிரலுக்குப் பதிந்தகணையாழிகளும்
காலாயிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
பாவாடையுள்ளுடுத்தி பட்டாடைமேல்சாத்தி
முத்துசுருள்விட்டு முந்தாணிதொங்கவிட்டு,
அக்குமணிகொக்குமணி அழகானபவழமணி
பச்சைமணிபாலமணி பாங்காய்கழுத்திலிட்டு
வையத்தில்வாழுகிற மாதுகுறத்தியைப்போல்
சிங்காரக்குறத்தியைப்போல் சீராகச்சோடித்தாள்
நாமந்தரித்து நற்சாந்துபொட்டுமிட்டாள்
தாதியையழைத்து தையலருமேதுசொல்வாள்
குறக்கூடைகொண்டுவா கொம்பனையேதேன்மொழியே
அப்போதுதாதியரும் ஆரணங்குதானெழுந்து
முத்துபச்சையிலே முழுவயிரந்தன்னாலே
மாணிக்கக்குறக்கூடை மாதர்கள்சொப்பனிட்டு
குறக்கூடைதன்னிலே குள்ளநரிக்கொம்புவைத்தார்
எண்ணைதடுக்கையென்று இயலுடனேவைத்தார்கள்

குழந்தைகள்விளையாட கிலிகிலிப்பைவைத்தார்
கூத்திகளுக்காகவே கூடையில்மருந்துவைத்தார்
நரைபோயிளமைவர நல்லமருந்துவைத்தார்
வேசிக்குமருந்துகள் விதமுடனேவைத்தார்கள்
குமாரருக்கேற்ற மருந்துவைத்தார்கூடையிலே
உரிக்கயிறுதாம்புக்கயிறு உஞ்சல்கயிறுவைத்தார்
வக்காமணியும் மலைவேப்பங்கொட்டைகளும் [தாள்
சித்துருண்டைவைத்தாள் சிறுநரியின்கொம்புவைத்
இந்திரரும்வானவரும் இசைந்ததொருகூடையிலே
சந்திரரும்சூரியரும் சந்தித்தகூடைபோலே
மூவுலகந்தான்மதிக்கும் மூத்துரத்தினகூடைபோலே
செம்பொன்குறக்கூடைதேன்மொழியாள்முன்னேவை
அல்லிபெருமாளும்ஆரணங்கேதுசொல்வாள்[த்தாள்
வாடிமலைக்குறத்தி மலையாளகட்டுவச்சி
விண்ணின்குறத்தி வீரானகட்டுவச்சி
என்னகுறக்கூடை யென்றாளேயல்லியரும்
வாள்விஜயனருச்சுனரும் வாங்கிக்குறக்கூடைதன்னை
குறமாதுபோலக் கூடையிடுக்கினர்
தாங்கிக்குறக்கூடை தன்மருங்கிலேபிடுங்கி
ஒற்றையிட்டகைதலத்தில் பொற்பிரம்புகோல்பிடித்து
கடுகிநடந்தாளே கட்டழகிகட்டுவச்சி
வஞ்சியிடைதுவள ம்மாதுஸ்தனங்குலுங்க
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
ஆச்சிதுரோபதையே அருச்சுனரைப்பாருமென்றாள்
ஒக்குமோகாலமிது உத்தமியேசீரழகும்
கட்டழகிமாதரைக் கண்ணிட்டுப்பாருமென்றாள்
விஜயனார்தன்னழகை மெல்லியருந்தான்பார்த்து
சரிய்விளமுலைமேல் சன்னல்பின்னல்தாழ்வடமும்
கட்டழகன்கைதலத்தில் கரிவளையல்தன்னழகும்
கடைக்கண்ணிலஞ்சனமும் கட்டழகன்கருங்குழலும்
அஞ்சனப்பொட்டுகளும் அழகானநாமங்களும்
வாள்விஜயன்பெண்கோல மானதொருதன்மைகளும்
தென்னாடிவாவென்று திருமுகத்தைத்தான்பார்த்து
வளநாடிவாவென்று மதிமுகத்தைதான்பார்த்து
கன்றிற்றேகன்றிற்றே காண்டீபனர்ச்சுனர்க்கு
அல்லியற்குமர்ச்சுனற்கும் ஆலாத்திசுற்றுமென்றாள்

தாமக்கருங்குழல்மார் தாதியர்கள் தான்கேட்டு
ஆயிரம்பெண்களவர் ஆலாத்திகழுப்பெடுத்தார்
சீரானபொற்கலத்தில் செஞ்சோறும்வெண்சோறும்
காட்டிச்சுழற்றியே கதிரோன்முன்விட்டெறிந்தார்
திக்குச்சுழற்றியே திசைநான்கும்விட்டெறிந்தார்
கற்பூரமுத்துதிரக் காராவிநெய்சேர்த்து
குத்துவிளக்குதனைக் கொழுந்துபடவேற்றினர்கள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
இந்திரக்கட்டுவச்சி ஏற்றமுள்ளபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
எங்கள்குறக்கூடை தருவீரிளங்கொடியே
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
அம்பொன்சிங்காதனத்தை ஆர்க்கக்குதித்திறங்கி
குறக்கூடைதான்பரித்துக் குலுங்கநகைநகைத்தார்
குறகூடைதான்பரித்து கொம்பனைமாரேதுசொல்வார்
வாருங்காணர்ச்சுனரே வார்த்தையொன்று நீர்கேளும்
பரமசிவன்தன்கையிலே பாசுபதம்பெற்றேனென்றீர்
ஆதிசிவனிடத்தில் அதிகவரம் பெற்றேனென்றீர்
நாங்களறிந்ததில்லை இராஜாவே அந்நடக்கை
இப்பே-ஆதிசிவனைநோக்கி அடிபணிந்துவாள்விஜயா
சிவனையடிபணிந்து குறக்கூடைவாங்குமென்றார்
அப்போதுவாள்விஜயன் அருச்சுனரேதுசொல்வார்
அல்லியிற்பிறந்தவளே அரசாளும்நாயகியே
தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
நீங்களிருவரு மருளியகாரியத்தை
நான்மீறிநடந்ததுண்டோ வேல்புருவங்கண்ணாளே
அப்படியேயாகுதென்று அருச்சுனரும்போய்நடந்தார்
கோவிற்புறமாகக் கொற்றவனும்வந்துநின்று
ஈஸ்வரர்கோவிலண்டை எழில்விஜயன்வந்துநின்று
ஆண்டவரைதானினைந்துயருச்சுனனேதுசொல்வான்
சிவனைத்தானினைந்து தேர்விசயனேதுரைப்பான்
அத்திமுகத்தோனே ஐங்கரனேவிக்கினரே
சத்தியருள்புத்திரனே சரிந்தவயிற்றோனே
ஆரணியும்வேணி அரனார்திருமகனே
நீரணியுங்கங்கை நீள்சடையோன்புத்திரனே
வேழமுகமுடைய விநாயகரேநான்சரணம்

கந்தாகடம்பா கதிர்வேலா நான்சரணம்
வள்ளிதெய்வானைபங்கா வடிவேலா நான்சரணம்
அற்புதனேசோதி அகிலாண்டநாயகியே
சாம்பசிவனுரே சங்கரனே நான்சரணம்
உம்பர்கள்போற்றும் உமையவளே நான்சரணம்
இலட்சுமிமனோகரனே நாயகனே நான்சரணம்
கொம்பனை மாதர்கள் குறக்கூடைதந்தார்கள்
கொடுத்தாப்போல்தான்கொடுத்து கூடைபறித்தார்கள்
அற்புதமானதொரு அம்மன்குறக்கூடை
உற்பனமாயெனக்கு உகந்துடனே தாருமென்றான்

அருச்சுனன் குறக்கூடை வாங்கின குறம்

தினதெந்தினுதினதெந்தினுதினதெந்தினுதினனு
தென்னுதினுதெந்தினு தினதெந்தினதினனு

மகாதேவராயனே மதிசூடுஞ்சிவனே
மலைகளையொருபுறத்தில் வைத்தமகாதேவா
திசையெட்டுமாண்டவரே திக்கெங்கு நீரே
தீராதவினை தீர்க்கும் சிவனுரும் நீரே
ஆராருமளவிடுமோ அரனுரேயும்மை
ஐயனேயுன்பாதம் போற்றியென்றுதொழுவேன்
பூராயமாகவே குறக்கோலந்தனக்கு
புகழானகுறக்கூடை தரவேணுமையா
இந்திரனுர்லோகத்து ஊர்வசியாள்கூடை
இமையவரும்முனிவர்களும் நிறைந்திருக்குங்கூடை
ஈஸ்வரரும்ஈஸ்வரியும் நிறைந்திருக்குங்கூடை
இயலான நான்முகனும் இசைந்திருக்குங்கூடை
இந்திரரும்வானவரும் நிறைந்திருக்குங்கூடை
இடைதனக்கும்நடைதனக்கும் இசைந்திருக்குங்கூடை
நினைத்தாற்போற்குறியுரைக்க நிச்சயமாங்கூடை
நீலமயில்வாகனரே வள்ளியருளவேணும்
குறித்தாற்போல்குறியுரைக்க கூடவருளவேணும்
குமரரருளாலெனக்குக் கூடைதரவேணும்
அப்பர்மலை ஆதிமலை பொன்மலையிற்குறத்தி
அரனேயுன்பொன்மனையில் அடியிணை நான்சரணம்
அன்றுமகக்குறிகள்சொன்னேன் ஐயமில்லைகுறத்தி
அரனேயுன் திருவடிக்கீழ் அருச்சுனன் நான்சரணம்

திருவேங்கியமாயனுக்குச் சிந்தையுள்ளகுறத்தி
செங்கழுநீர்மாலைபூணும் தெய்வநல்லகுறத்தி
சீரானவிஜயனுக்கு கூடைதரவேணும்
சிவசங்கராவென்றுசொல்லி தேர்விசயன்தானும்
பார்த்தனுக்குப்பாசுபதம் கொடுத்தாற்போலெனக்கு
பரிதானகுறக்கூடை தரவேணுமையா
விஜயனார்முறையிடவே விமலருந்தாமும்
வீரானகுறக்கூடை அருளினார்மிகவே

வேறு

பார்த்தனதுகைக்கொடென்று பரமசிவன்தானனுப்ப
கொண்டுவந்துகொடுத்தாற் கொப்பெனவேதூதர்கள்
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
ஆனாலழகுமன்னன் அருச்சுனனுரேதுசொல்வார்

குறம்

அரகரசிவமகாதேவா ஆண்டவனேசரணம்
அற்புதனேயுன்திருவடிக்கீழ் அருச்சுனனுன்சரணம்
திரிபுரத்தைக்கைத்தெரிந்த சிவனேயுந்தன்சரணம்
திங்கள்பிறைதரித்ததொரு தேவாயுந்தன்சரணம்
மங்கையுடன்தங்கையுமாய் மதிசூடுஞ்சிவனே
மான்மழுவுந்தரித்ததொரு மகாதேவாசரணம்
காமனைக்கண்ணாலெரித்த கைலங்கிரிவாசா
கண்மூன்றுடையவரே கர்த்தனேநான்சரணம்
அர்ச்சுனர்க்குப்பாசுபதம் தந்தாற்போலெனக்கு
அன்புவைத்துகுறக்கூடை இன்பமுடன்தந்தீர்
கூடைதனைதானிடுக்கிக் குறிகள்மிகவுரைக்க
குறித்தாப்போல்குறியோட குமராருளவேணும்
என்றவனுங்கூடைதனை இடுக்கினான்விஜயன்
இயலானதுரோபதையாள் அருகேவந்துநின்றாள்

வேறு

தீயிற்பிறந்தவளே தென்னாடன்பாவையரே
அல்லியிற்பிறந்தவளே அல்லிமலர்நாயகியே
கொடுத்தாற்போல்கூடைவந்து கூடைபறித்தீர்கள்
கூடையிதோவாங்கிவந்தேன் என்றானேகொற்றவரும்
அப்போதுரோபதை அல்லியருமேதுசொல்வாள்

வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
இந்திரக்கட்டுவச்சி இயலானபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
எங்கிருந்துவந்தாய் இளங்குறத்திகூறுமென்றார்
மின்னிடைக்குச்சொல்லி உரைக்குங்குறிகளொன்று
எங்களுக்குச்சொல்லி உரைப்பாயிளங்குறத்தி
காண்டாபுரமெரித்த காளைமனமகிழ்ந்து
உங்களுக்குக்குறியுரைத்தால் ஏதுதரப்போறீர்கள்
மார்பில்தரித்ததொரு மணிப்பதக்கந்தருவீரோ
முத்துமணித்தாழ்வடத்தை தருவீரோமொய்குழலே
அப்படிசெய்கின்றோம் ஆனந்தவாழ்மார்பா
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
அங்கவன்காலை மடித்துப்புரந்தணிந்து
வண்ணக்குறக்கூடை வைத்துவொருபுறமாய்
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் பூங்குறத்திவந்தார்கள்
பெண்ணணங்குசேரவே பொற்கொடியாள்வீற்றிருந்து
வாடைக்கிளிபோலே வண்ணமயில்போலே
தென்றற்கிளிபோலே தீவில்மயில்போலே
சற்றேநகைத்தவனும் கனிவாயைத்தான்திறந்து
கூறுவான்பார்த்தவன் குறமாதரைப்போலே
ஏற்றகுறிதானுரைப்பான் இயலானஅருச்சுனனார்

பெண்களுக்குக் குறி சொல்லுகிற குறம்

(தின) எந்தனதுதிருநாடு கேட்கிறையோபெண்ணே
ஏற்றமுள்ளயிந்திரனு ராளுமந்தநாடு
நாகத்திலேஅரியுரையும் எந்தனதுநாடு
நான்மறைகளோதுவதும் எந்தனதுநாடு
பொற்கவளைவளநாடு எந்தனதுநாடு
பொங்குகடல்திரைசூழும் எந்தனதுநாடு
இந்திரனுர்லோகமும் எந்தனதுநாடு
ஏற்றமுள்ளபாஞ்சாலனுளுமெந்தநாடு
பச்சைமலைபவழமலை எந்தனதுநாடு
பாண்டியர்களாள்கிறது எந்தனதுநாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களதுநாடு
கொற்றவர்கள்ஆள்கிறது யெந்தனதுநாடு
வெள்ளிமலைபொன்மலைகள் எநதனதுநாடு

விண்ணவர்களாள்கிறதும் எந்தனது நாடு
பாய்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
பாண்டவர்களாள்கிறதும் எந்தனது நாடு
தோற்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
துரியோதிரனுள்கிறதும் எந்தனது நாடு
அலையடித்தால்முத்தொதுங்கும் எந்தனது நாடு
அல்லியுடதிருநாடும் எந்தனது நாடு
எட்டெழுத்தாயுட்பொருளா யோதுமந்தநாடு
ஏற்றமுள்ள தீவுகளும் எந்தனது நாடு
ஐந்தெழுத்தையுட்பொருளா யோதுமந்தநாடு
அரியுடனே அயனுறையும் எந்தனது நாடு
திக்குசெயங்கொண்டுவரும் எந்தனது நாடு
சிலைவிஜயன்பெயர்கொண்ட குறத்தி நான்பெண்ணே
பஞ்சவர்களைவருட நாடுமெந்தநாடு
பார்த்தனதுபெயர்கொண்ட குறத்தி நான்பெண்ணே

வேறு

தோராவடிவழகி துரோபதையாளே துசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
விண்ணின்குறத்தியரே வீறுடையகட்டுவச்சி
நாட்டுவளப்பமெல்லாம் நன்ருயுரைத்தாயே
சீமைவளப்பமெல்லாம் சீராயுரைத்தாயே
உன்பெயரும்ஊர்பெயரும் உச்சிதமாய்த்தோன்றுதடி.
தெய்வக்குறத்தி நீ தெளிவானகட்டுவச்சி
எந்தனதுகைபார்த்து இன்பக்குறியுரையும்
கண்டதுகண்டாற்போல கட்டுவச்சிகூறுமென்ருள்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தே துசொல்வாள்

துரோபதைக்குக் குறி சொல்லுகிறது

(தின) வட்டமதிமுகத்தாளே தீயில்வந்தபெண்ணே
வலக்காரத்தைநீகேட்டால் நான்குறிகள்சொல்வேன்
எழில்விஜயனதேவியரை பாஞ்சாலன்பெண்ணே
இடக்காரத்தை நீகேட்டால் இசைந்தகுறிசொல்ல
செங்கமலக்கைதலத்தைத் தீண்டியேநான்பிடித்தால்
திருவினையே அதனலே குடிப்பழுதுமுண்டோ
மங்கையர்க்கும்மங்கையர்கள் கைகள் தனைப்பிடித்தால்

வாழ்பாஞ்சாலன்மகளாரே குலப்பழுதுமுண்டோ
பங்கயஞ்சேர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையுடன்முகம்நோக்கிப் பலகாலுஞ்சிரித்தான்
கட்டழகிகைதலத்தை கண்ணிலொத்திக்கொண்டான்
கண்மலரோபெண்மலரோ கைத்தலங்களென்பான்
சங்குசெறிகைநலது உன்குலமும்நலது
ஸ்தனத்தில்மிகுமறுநலது தழைத்துமிகவாழ்வாய்
அருச்சுனரைமாலையிட அருந்தணலிலுதித்தாய்
அழகுடையபாஞ்சாலன் உனைவளர்த்தான்பெண்ணே
பார்த்தனைதான்மாலையிட பத்தரையில்வளர்ந்தாய்
நலமுடன்நீவளர்ந்த நாளையிலேபெண்ணே
அருச்சுனனுடைந்துபோராம் அரசாண்டதுரைகள்
அரக்குமாமாளிகையில் ஐவரிறந்தாரென்று
வில்லைவளைத்தபேர்களுக்கு மெல்லியரைக்கொடுக்க
வீரமுரசுதிவந்து விருதுபறையறைந்தாள்
அவ்வார்த்தைமிகவறிந்து அருச்சுனனுர்தாமும்
அன்றொருபார்ப்பான்போல் அந்தசபையில்வந்தான்
இராசாதிராசாக்கள் நாணிதலைசாய்க்க
நலமுடனேவில்வளைத்து உனைமணந்தான்பெண்ணே
எட்டாதவில்வளைத்து எழில்விஜயன்றனக்கு
இணைபிரியாதேவியராய் நீயிருந்தாய்பெண்ணே
மங்கிலியம்விஜயனுர் தரித்தநாள்முதலாய்
மன்னவர்களைவருக்கும் தேவியருமானுய்
தருமர்பெருந்தேவியென்று தனிமாலைசூட்டி
தன்சொல்லேமேலாக தனித்திருந்தாய்பெண்ணே
ஒருவருடம்ஓராண்டு உனைப்பிரியான்விஜயன்
உண்மையடியென்குறிகள் தன்மையடிபெண்ணே
தயவுள்ளபெண்ணரசே சகலகுணரதியே
சம்பத்துமென்னுளும் தவருமல்வாழ்வாய்
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

வேறு

வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வக்குறத்திகண்டாய் தெளிவானகட்டுவச்சி
பார்த்ததுபார்த்ததுபோல் பட்சமாநீயுரைத்தாய்

கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிகூறிவிட்டாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில் நானறியேன்
என் தங்கையல்லியற்கு ஏற்றகுறிசொல்லுமென்றாள்
பரிகலத்திற்சோறிடுவாள் பாலுமிகபூரிப்பாள்
மதுரைவளநாட்டிற்கு வகைபுரிவாய்மலைக்குறத்தி
அழகியபூமாது அல்லியரைத்தான்பார்த்து
காண்டாவனமெரித்த காளையவர்கூறலுற்றார்

அல்லிக்குக் குறி சொல்லுகிற விதம்

(தின) ஆயிரம்பாண்டியர்கள் அரியதவஞ்செய்ய
அன்றலர்ந்ததாமரையில் வந்துதித்ததிருவே
ஆண்மலடாய்பெண்மலடாய் அரியதவஞ்செய்ய
ஆணழியப்பெண்பிறந்து அவர்கள்வினைதீர்த்தாய்
சிறந்தகுலபாண்டியற்குச் செங்கோலுஞ்செலுத்தி
தென்னாடைதிறமையுடன் ஆளவந்தாய்பெண்ணே
ஏழாம்பிராயத்திலே இளவயதாய் நீயும்
எதிர்த்துவந்த நீன்முகனை தலையறுத்துப்போட்டாய்
தேர்வண்டிக்காலிலே நீன்முகனைஇரடி
செங்கோலரசாண்டாய் திறமையுள்ளபெண்ணே
மதிப்புடனேதென்மதுரை வளநாட்டையாள
வாள்விஜயனுன்னழகை கண்டேமடலூர்ந்தான்
மற்றொருவன்தன்திறமோ எழுதிமடலூர்ந்தான்
அச்சுதனார்கிருபையினால் விஜயரும்தாமும்
அல்லியரேஎழுதிமட லூர்ந்தமணஞ்செய்தான்
சொக்கருடகிருபையினால் செங்கோலுஞ்செலுத்தி
திறமையுடனிராச்சியத்தை யாளுகிறாய்பெண்ணே
பரிவுடனேபாண்டியர்கள் பயின்றெடுத்ததிருவே
பார்த்தனுக்குமயிலனையே பண்புள்ளரதியே
உன்னழகையொருவரா லெழுதவல்லாருண்டோ
ஒருவரும்உன்மனையில் உனைப்பிரியான்விஜயன்
அடியளந்தமைத்துனனா ரானபடியாலே
அதிசயமாயுன்வடிவை எழுதிகளைதீர்த்தான்
கும்பமுலைஸ்தனத்தாளே கோகநகையாளே
குவலயத்தோர்கொண்டாடும் குஞ்சரமேபெண்ணே
அமிர்தமென்னுங்குணத்தாளே அன்னநடையாளே
அரசமுடிதானணிந்த அமுர்தபசுங்கிளியே

கொங்கைரெண்டுந்தளும்ப செங்கரத்தால்பிடித்து
சேர்ந்தணையவிசயனிப்போ வருவானடிபெண்ணே
என்குறிகளொருநாளும் பொய்யாயிதுபின்னே
எழில்விசயனொருநாளு முனைப்பிரியான்மயிலே
கொம்பனையேயென்குறிகள் பொய்யல்லடியென்று
கொங்கியம்மையாணைஎன்று கூடையின்மேலடித்தாள்
இக்குறிகள்பொய்யாமோ அல்லியரேயென்று
என்னாணைஉன்னாணை என்றவளுஞ்சிரித்தாள்

வேறு

நீலக்கருங்குழலி நிகரில்லாப்பெண்பெருமாள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வகுறத்தி தெளிவானகட்டுவச்சி
நீசொன்னகுறியாலே ஒன்றும்பழுதுமில்லை
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாள்
பார்த்ததுபார்த்தாற்போல் பட்சமாய்நீயுரைத்தாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில்நானறியேன்
எங்களுக்குச்சொன்ன இசைந்தகுறிகளைப்போல்
எங்களதுபுத்திரர்க் கிசைந்தகுறிசொல்லுமென்றாள்
மைந்தன்மேல்பாடுமென்றாள் மாலைக்குறத்தியரை
பிள்ளைகள்மேற்பாடுமென்றாள் பூங்குறத்திநாயகமே

மைந்தர்கள்மேல் பாடுகிற குறம்

(தின) வையைபெரும்பாண்டியர்கள் செய்தபெருந்தவ [த்தால்
வாடாததாமரையில் வந்துதித்ததிருவே
பொய்யாதவில்மாரி சொரியவல்லாற்புதல்வன்
போர்விஜயன்பயின்றெடுத்த புதல்வனுந்தன்பிள்ளை
துதிமுகனையாள்வாண்டி உந்தனிடபுதல்வன்
திக்குசெயங்கொள்வாண்டி தேர்விஜயன்புதல்வன்
ஜெயவீரபாண்டியர்கள் தம்முடையபேரன்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிமருமகன்
பெருமையுள்ளபஞ்சவர்க்கு புத்திரனுமவனே
பேர்பெரியபுகழான புலந்திரனார்பெண்ணே
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
அல்லியரைக்கொண்டாடி யாடியேதான்பார்த்து

சிற்றிடையேசெந்தணலில் வந்துதித்ததிருவே
ஜெகமேழுமாள்வார்கள் உந்தனிடபுதல்வர்
அழகுடையபாஞ்சால வைவர்களதுபேரர்
அன்னமேவுன்கலியைத் தீர்க்கவந்தபுதல்வர்
பாடிவந்தேனுங்களை நான் பாஞ்சாலன்மகளே
பட்டாடை நீதருவாய் பலமணியுந்தருவாய்
பாஞ்சாலன்மகளே நீ பைங்கொடியேசீதாய்
பந்துஸ்தனமேலிருக்கும் பதக்கமு நீதருவாய்
சிற்றுடை நீதருவாய் சிறுமணிகள்தருவாய்
செந்தனலில்வந்துதித்த சேயிழைநல்லாளே
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவள நடந்தாள்

வேறு

தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அமையுமமையும் ஆணழகிசொன்னகுறி
உன்பொருட்டினுலே பிழைப்பாண்டியுன்கணவன்
குங்குமத்தின்டோளன் குலுங்கநகைநகைத்து
போதனையும்போதாச்சு பொழுதெலாம்போகுதுகாண்
மின்னிடையாள்வாசலுக்கு விஜயரேபோங்காணும்
அடியார்கள்சாயநல்ல வருச்சுனரேதுசொல்வார்
நீங்கள்-அன்னமுந்தாராவும் அழகுமல்லரேவிருக்க
உங்கள்-இருவரையும்விட்டு பிரியமனம்வருமோ
உங்களைப்பார்க்கிலு மதிசயமோமின்னிடையாள்
எப்படிபோவேன்கா ணிளங்கொடியேயுன்னைவிட்டு
போவென்றுசொல்லி பொற்கைப்பிரம்பெடுத்து
பொற்கைப்பிரம்பெடுத்து போர்விஜயனையடித்தாள்
அடிபட்டருச்சுனனும் ஆலித்தெழுந்திருந்து
சிறுமுறுவலுற்றுன்தன் தேவிமுகம்நோக்கி
சீறியடித்தீரே தீயில்வந்ததெள்ளமுதே
சீறியடித்தீரே தெய்வகுலநாயகமே
சீறியடித்தீரே சிங்கவரிப்புலியே
ஆறிற்றேகோபம் என்றுன்சிலைவிஜயன்
தேறிற்றேகோபம் என்றுன்சிலைவிஜயன்
தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
எய்யுமதனம்புபோல மெய்யாகவாள்விஜயா

மைக்கலந்தகண்ணாலே மயக்காதேவாள்விஜயா
எங்கள்கவையை நீர் உத்தரிக்கப்போகிறீரோ
ஆர்க்காகப்போகிறீர் ஆரணங்குவாசலுக்கு
எனக்காகப்போகிறீரோ இந்திரனார்புத்திரனே
நீரேசுகப்படுவீர் நேரிழையாள்வாழ்ந்திடுங்கள்
நீர்-மதப்பட்டயானையைப்போல் நின்றுமயங்காதே
அக்கமாரேகேட்டீரோ ஆரணங்குகுறத்தியவள்
முத்தைநிகர்த்தபல்லும் மூக்கணிந்தசெவ்வாயும்
ஒற்றையிடைமருங்கும் ஒல்வியஞ்சீர்பட்டுடையும்
பொற்கொடியாள்பேரழகும் பொற்பிரப்பங்கோலழகும்
பார்த்தார்குறத்தியரைப் பங்கயஞ்சீர்கண்ணாளே
மன்னவனார்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாள்விஜயன்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாள்விஜயராஜாவை வாருமென்றுதானழைத்து
மற்றொருவர்வாசலுக்கு போகாதேமன்னவனே
பின்னொருவர்வாசலுக்கு போகாதேசுந்தரனே
சிந்தையான்றங்கையந்த சிறிக்கிமனைபோகாதே
மின்னிடையாள்வாசலுக்கு விஜயரேபோயிருந்து
ஓராசனத்திற்கு உடனாகநீயிருந்து
முத்தானமின்னிடைக்கு மூன்றுதிங்களானபின்பு
ஸ்ரீமந்தமென்றுசொல்லி வாருங்காண்தேர்விஜயா
கலியாணமென்றுசொல்லி காவலனே நீவாரும்
என்றதுகேட்டுமவ ரேதுசொல்வாருச்சுனரும்
அனலிற்பிறந்தவளே அரசாளும்பத்தினியே
நீங்களிருவரும் அணிந்திருந்தபொற்பதக்கம்
கூடப்பிறந்ததொரு பதக்கம்கொடுத்தீரானால்
கட்டாயம்போய்வாரேன் கட்டழகிமாதர்களே
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாள்துரோபதையும்
கொடுத்தோமேயாமாகில் கொற்றவனேபோகிறீரோ
என்று-கழற்றிக்கொடுத்தாளே கட்டழகிபொற்பதக்கம்
அவள்பிறந்தபோதே கொம்பனையாள்பொற்பதக்கம்
கூடப்பிறந்ததே கொம்பனையாள்பொற்பதக்கம்
கழட்டிக்கொடுத்தாளே கட்டழகிபொற்பதக்கம்
மின்னொளியாள்வாசலுக்கு விஜயரேபோங்காணும்
மற்றொருவர்வாசலிலே மன்னவரேசென்றீரானால்
பின்னொருவர்வாசலிலே மன்னவரேசென்றீரானால்

வேட்டையிலேகண்டாலே வெட்டியேபோட்டிடுவேன்
என்சமர்த்துஞ்சேவகமும் எல்லாந்தெரியுமே
போய்வாவிஜயாவென்று பொற்கொடியுங்கூறினளே

குறத்தி தனித்துப் போகிறது

மாணிக்கப்பொற்பதக்கம் வாங்கிகழுத்திலிட்டு
மாதர்குறத்தியைப்போல் வாள்விஜயன்தானடந்தான்
தங்கக்குறக்கூடை தன்னிடுப்பில்வைந்ததுவும்
முழங்கையால்தானிடுக்கி மூக்குமேல்கையைவைத்து
அசைந்துநடந்தாள்காண் ஆரணங்குகுறத்தியரும்
பொற்பிரப்பங்கோல்பிடித்து புறப்பட்டாள்கட்டுவச்சி
கண்டவர்கள்சோர்த்துவிழச் கட்டுவச்சிதானடந்தாள்
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
தெத்துகடந்தாளே தெருவீதிபோகலுற்றாள்
அன்னநடை துரோபதையும் அரசாளும்நாயகியும்
அருச்சுனன்போனபின்பு அலங்காரநாயகியும்
தாதியிருவர்களைத் தையல்மார்தாமழைத்து
அருச்சுனனார்பின்னாலே ஆரணங்கேபோங்களடி
அவர்-எங்கேபோனாலும் எத்திசையிற்சென்றாலும்
எவ்வாசல்போய்நுழைவார் என்றறிந்துவாங்களடி
மின்னிடையாள்வாசலுக்கு விஜயனார்போனபின்பு
அருச்சுனரையறியாமல் அறிந்துவாதாதியென்றாள்
அவ்வார்த்தைகேட்டுமே ஆரணங்குபோகலுற்றாள்
அறியாதுபோலாக ஆணழகன்பின்றொடர்ந்தார்

குறத்தி பெண்கள் வீதி வருகிறது

அப்போமலைக்குறத்தி அத்தெருவுத்தான்கடந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
பவளக்கொடிமாது பத்தினியாள்வீதிவாறாள்
அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்றாள்
போகவதிமாது பொற்கொடியாள்வீதிவாறாள்
நாகமடந்தையந்த நறுநுதலாள்வீதிவாறாள்
அந்தத்தெருகடந்து அப்புறம்போகலுற்றாள்
அத்தெருவுந்தான்கடந்து மற்றொருவீதிவாறாள்
சோரவளமாது சுபத்திரையாள்வீதிவாறாள்
அன்னம்போல்நடந்து அவ்வீதிவாறாளாம்

வாடைக்கிளிபோல வாருளே அக்குறத்தி
வஞ்சியிடை துவள மாதுஸ்தனங்குலுங்க
மின்னற்கொடிபோலே மெல்லிவருகிருளே
அழகு துலங்குது ஆனந்தங்கொஞ்சுது
வடிவுங்குலுங்குது மாணிக்கங்கொஞ்சுது
மயில்போல்தலைவளைத்து மாதுவருகிருளே
சுபத்திரைவாசலிலே தோழிமார்பார்த்திருந்தார்
இந்தக்குறத்தியரை எங்கிலுங்கண்டதில்லை
தெய்வக்குறத்தியோ திக்கெட்டில்கண்டதில்லை
மின்னிற்பிறந்தவளோ மேகவர்ணன்மச்சினியோ
கன்னித்திருப்பாற்கடலில் வந்தகருவில்லோ
மாதுகுறத்தியரைக் கண்டதில்லைவையகத்தில்
அடி–வாடிமலைகுறத்தி மாதருக்குக்கைபார்க்க
சுவாமியுடதங்கையவள் சுபத்திரைக்குக்கைபார்க்க
உண்மைக்குறியுரைத்தால் உச்சிதம்தான்கொடுப்பேன்
ஆடைகள்முத்துரத்னம் ஆபரணந்தான்கொடுப்பேன்
வாடிகுறத்தியென்று வருந்தினர் தாதியர்கள்
போகமனமுண்டோ பொற்கொடியாள்வாசலுக்கு
அல்லிப்பெருமாளும் அறிந்தாளேயாமாகுல்
மின்னிடையாளானபடி வம்பனென்றுமூதிவைப்பாள்
அப்படிக்கேளாலே அல்லிமலர்நாயகியாள்
நீன்முகனைக்கொன்று நீலிபட்டபெண்பெருமாள்
வெட்டத்துணிவாளே வீரியத்தைச்செய்வாளே
கணவனென்றுபாராளே கண்டித்துப்போட்டிடுவாள்
யாரென்றும்பாராளே அல்லிப்பெருமாளும்
சேர்ந்தவுடல்பிடிப்பாள் சேவகத்தைக்காட்டுவாளே
வரிந்துவுடல்பிடிப்பாள் வல்லமையைக்காட்டுவாளே
உயிரிருந்தாலுக்கால் உப்புவிற்றுவுண்ணலாம்
பொற்கொடியாள்வாசலுக்கு போவதுநல்லதல்ல
நாளைவருவோமென்று நாயகியும்போய்நடந்தாள்

சகாதேவன் வீதி வருதல்

அத்தெருவைத்தான்விட்டு மற்றொருவீதிவாருள்
தாமமுடியானுஞ் சகாதேவன்வீதிவாருள்
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்பார்த்தார்கள்
மின்னிற்பிறந்தவளோ மேகவர்னர்மச்சினியோ

கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமோ
எழுதவொண்ணுவடிவழகி இவ்வீதிவந்தாள்காண்
இவளைப்போல்கட்டுவச்சி இவ்வுலகில்கண்டதில்லை
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டுங்காலமவள்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்பிராயங்கண்டீர் கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்
பாதிவயதுகண்டீர் பக்கமெல்லாம்பிஞ்சுகண்டீர் [டீர்
மையல்பெருகியே மயங்கியேயோடிவந்தார்
சுத்திவளைத்தார்கள் சூழ்ந்தார்கள்குறத்தியரை
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோருேம்
மெத்தைமேல்வைக்கிருேம் வெண்பணிபூட்டுகிருேம்
வருவீரோகட்டுவச்சி என்றுவளைத்தார்கள்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேதுசொல்வாள்
மயில்போல்தலையசைத்து மங்கையருமேதுசொல்வாள்
வண்ணக்கிளிபோலே வாய்திறந்தேதுசொல்வாள்

சகாதேவன் வீதியில் குறம்

(தின) தருமர்பெரும்நாட்டுக்குள் தழைத்தோங்கிவாழ்ந்
தனிவழியேபோறயென்னை வழிமறிக்கலாமோ [தோம்
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்குப்போரேன்
இஷ்டமுடனோடிவந்து இச்சைசெய்யலாமோ
ஐவரிடசீமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குக்கைபார்க்குங் கானகக்குறத்தி
கண்டவர்க்குப்பெண்டாக பெண்டுகளாசொன்னீர்
வண்டாடுகொண்டையின்மேல் கண்டாசைப்பட்டு
மயங்கியேவிழுந்தாளே மனப்பழுதுவருமே
மிண்டுகளைப்பேசாமல் விரைந்தோடிப்போங்கள்
கொண்டவனறிந்தாலே குடிகேடுவருமே
வம்பருமாய்தும்பருமாய் வழிமறித்துஎன்னை
மனையாட்டியாகவே வழிமறிக்கலாமோ
சாத்திரத்தில்மிகுந்ததொரு சகாதேவருகில்
சூத்திரமாய்போயுரைத்து தெண்டனைகள்செய்வேன்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவளநகைத்தாள்

வே று

வந்தவந்தமன்னரெல்லா மையல்பெரிதாகி
காமவிகாரமது கலைகள்பெரிதாகி
சகாதேவராஜாவும் சற்றேயறிந்தாலே
பழுதல்லோ நமக்கு பார்வேந்தமன்னவனே
ஆக்கினைசெய்வார்காண் அழும்புவருமன்னவரே
என்றவரவர்மாளிகையி லசைந்தாற்போல்போனார்கள்

நகுலன் வீதி வருவது

அந்தத்தெருகடந்து ஆரணங்குகட்டுவச்சி
மற்றொருவீதியிலே வாராளேகட்டுவச்சி
நகுலராதுவீதியிலே நடந்தாளேகட்டுவச்சி
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்மன்னவர்கள்
கண்டார்குறத்தியரைக் கட்டுவச்சிதன்னழகை
பார்த்தார்குறத்தியரைப் பங்கயஞ்சீர்கண்ணாலே
இதுபுதுமைஇதுபுதுமை இதுநெடுநாள்கண்டதில்லை
கண்டுமறியோமே கதையிலுங்கேட்டறியோம்
பார்த்துமறியோமே படத்திலுங்கண்டறியோம்
இவள்போல்வடிவழகி எங்கிலும்நாமறியோம்
இந்தக்குறத்தியரை எங்கிலுங்கண்டதில்லை
என்று-வம்பருந்தும்பருமாய் வந்துவளைத்தார்கள்
மையல்பெருகியே மயங்குயேவந்தார்கள்
வாடிமலைக்குறத்தி எங்களுக்குகைபார்க்க
வீதிவீதியாகவே விரும்பித்திரிவானேன்
கானலிலும்வெய்யலிலும் கடுகித்திரிவானேன்
உள்ளங்கால்கொப்பளிக்க உச்சிவெடித்துவிட
வேண்டிவிடாய்த்து வெளியில்திரிவானேன்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குகொண்டுபோறேம்
என்றதுகேட்டு ஏதுசொல்வாளக்குறத்தி

நகுலன் வீதியில் குறம்

(தின) நகுலராஜர்வீதியிலே வாழுகின்றமன்னோர்
நகுலத்தகுணமுடைய ராஜாக்களேவாரீர்
இலகுமதிசடையணிந்த ஈஸ்வரனாருளால்
இத்தெருவில்குறம்பாட நத்தியிங்கேவந்தேன்
வித்தகராய்வந்துயென்னைச் சுத்திக்கொண்டீர் நீங்கள்

மெத்தவேவருந்துகிறீர் உத்தமரே நீங்கள்
தேவியின்மேலாசைகொண்டீர் ஆவியெல்லாமுருகி
உங்களுக்கும்பெண்களோ உமக்குக்கூத்தியாரோ
உகமையுள்ளமன்னவரே அகமகிழ்ந்துகேளீர்
என்னைவந்து ஆதரிக்கும் இராஜமன்னராளுல்
இயல்புறவேமனங்களித்து அரண்மனையில்போவீர்
சிற்றிடையாள்வாழுகிற தெருக்களெல்லாந்திரிந்து
சீருடனேகுறப்பாடி பேர்கேட்டுவருவேன்
இலகுபுகழ்வீதியிலே எனைமறுத்தீராளுல்
நகுலனதுசபைதனிலே தானுரைப்பேன்பாராய்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநடந்தாள்

வேறு

அப்போதுமன்னவர்கள் அனைவருந்தான்பார்த்து
குறத்தியிவள்தன்னாலே குற்றங்கள்நேருமென்று
நகுலறிந்தாலே நமக்குவருமோசமென்று
மெத்தப்பயந்தவர்கள் வீட்டுக்குள்போய்நுழைந்தார்
அவரவர்மாளிகையில் அப்படியேபோய்ச்சேர்ந்தார்

அருச்சுனன் வீதி வருதல்

அப்போதுகுறத்தியரும் அலங்காரங்கட்டுவச்சி
அந்தத்தெருகடந்து மற்றொருவீதிவாருள்
அருச்சுனனார்வீதியிலே அழகாய்நடக்கலுற்றாள்
அந்தத்தெருவிலே அனந்தமானபெண்களெல்லாம்
வண்ணக்குறத்தியரைக் கண்டார்கள்மன்னரெல்லாம்
முத்துநிகர்பல்லும் முறுக்கணிந்தசெவ்வாயும்
புருவச்சிலையழகும் பொருந்தும்விழியழகும்
காமன்கடைந்ததுபோற் கலசத்திளமுலையாள்
ஈழத்துதச்சனவன் எழுதிவரவிட்டானோ
தானேசமைந்தாளோ தையலிளங்கொடியாள்
இவள்போல்வடிவழகி எங்கிலும்நாமறியோம்
என்று-வண்ணப்பசுங்கிளியை வந்துவளைத்தார்கள்
சுத்திநின்றபார்ப்பார் சுரூபங்குறத்தியென்போர்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோமோரும்

மெத்தைமேல்வைக்கிறண்டி வேணபணிபூட்டுறண்டி
என்றுசிலபேர்கள் இளமாதைசூழ்ந்துகொண்டார்
வாடிமலைக்குறத்தி என்றுவழிமறித்தார்
அப்போதுகுறத்தியரும் ஆரணங்குமேதுசொல்வாள்
மயில்போல்களைகளைத்து வாய்திறந்தேதுசொல்வாள்

அருச்சுனன் வீதியில் குறம்

(தின) சிறுநுதலாள்மலர்விழியாள் தேர்விஜயன்தாமு
சூழ்ந்துவந்தமன்னருக்கு சொல்வாள்ஒருவார்த்தை [ம்
பாதிசடையணிந்த பரமசிவனருகில்
பாசுபதம்பேருபெற்ற பார்த்தன்வடிவுடையோன்
இனியேசகாலர்களை இராட்சதரைக்கொன்று
இந்திரலோகம்பட்டங்கட்டி யிருந்தரசையாண்டார்
அச்சுதனார்தோழனவ னருச்சுனமகாராஜன்
அவருடையவீதியிலே அழும்புசெய்வாருண்டோ
சத்தியந்தவருத தருமர்தம்பிவிஜயன்
தாக்குடையாள்வீதியிலே வாக்குதப்பாமல்
ஐயமென்றுபாடவந்தேன் வையங்கள்மீது
அருச்சுனனார்வீதியிலே அழும்புசொல்வாருண்டோ
பொதுவாகநானுங்களுக்குப் பெண்டுகளாமென்று
புண்ணியனாருச்சுனர்க்குப் போயுரைப்பேன்கண்டீர்
புண்ணியனார்குந்திமகன் போர்விஜயனருளால்
பெண்டாளவந்தீர்களோ பூங்குறத்திதன்னை
மண்டலத்துவீதியெல்லாம் பாடிவந்துமென்னை
மலையாளக்குறத்தியென்று மனதில் நினையாமல்
கொச்சக்குறத்தியென்று சற்று நினையாமல்
கூடுகைக்குஆசைமனம் தோன்றுதடாஉனக்கு
என்கணவன்பொல்லாதவன் எழும்பும்புலிகொல்வான்
எதிர்த்தவரைதலையறுப்பான் மலைகுறவன்பொல்லான்
காட்டானைசிங்கங்களுங் கரடிபுலியானை
கண்டகண்டமிருகங்களைத் துண்டிடவேசெய்வான்
அண்டையிலேநில்லாதே அகலப்போங்களென்று
அலங்கார‌க்குறத்தியவள் மிகநோக்கிவந்தாள்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியாள்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவளநடந்தாள்

வேறு

வந்து நின்றமன்னரெல்லா மையல்பெரிதாகி
ஏக்கத்துப்பார்த்து யிருந்தார்களெல்லோரும்
கையறுந்தயானையைப்போல் கலங்கியே நின்றூர்கள்
சிறகுபறிகொடுத்த செம்பருந்துபோலானூர்கள்
கொண்டைபறிகொடுத்த கோழிபோலானூர்கள்
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாப்போல்
மத்தங்காய்தின்றூற்போல் மயங்கியே நின்றூர்கள்
காமக்கணையாலே களைதாங்கி நின்றூர்கள்

வீமன் வீதியில் வருதல்

அப்போமலைக்குறத்தி அந்தத்தெருகடந்து
மற்றொருவீதியிலே வாராளேகட்டுவச்சி
மன்னன்மதகரியான் மகாராஜன்வீதிவநதாள்
மதகரிவீமனது மாடத்தெருவில்வந்தாள்
வெற்றிமதயானை வீமனதுவீதியிலே
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்கூடினூர்கள்
வம்பராய்க்கூடினூர்கள் வல்லார்சிறுவர்களும்
தும்பராய்க்கூடியே சூழ்ந்தார்கள்குறத்தியரும்
ஒருவயதாய்க்கூடினூர் ஒருகோடிராஜாக்கள்
இளவயதாய்க்கூடினூ ரிராஜாக்களுள்ளவர்கள்
வந்துவளைத்தார்கள் மாதுகுறத்தியரை
இந்தக்குறத்தியரை எங்கிலுங்கண்டறியோம்
திக்கெட்டில்கண்டதில்லை தெய்வக்குறத்தியரை
இவள்-கட்டுவச்சியல்லவடா காமன்ரதியென்பாரும்
இளநிலவரைப்போல ஏந்திழையாள்வடிவழகும்
மின்னற்கொடியாளோ மேகவர்னன்றங்கையரோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமோ
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்
வாரூய்குறத்தியரே மாளிகையிற்கொண்டுபோரூேம்
கானலிலும்வெய்யலிலும் கடிகித்திரிவானேன்
வெய்யலிலேதிரிந்து மெத்தவிடாயாவானேன்
சிங்காதனத்தில்வைத்து சேவித்துப்பார்க்கிறண்டி
மெத்தைமேல்வைக்கிறண்டி வேவைபணிபூட்டுறண்டி
பெண்களுள்ளபேரை பேணிதொழில்செய்யுவிப்பேன்
ஆண்பிள்ளைகளுள்ளவரையடப்பம்பிடிக்கவைப்போம்

வாருய்குறத்தியென்று மாதரைச்சூழ்ந்துகொண்டார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
கொம்பிலிருந்து கூவுங்கிளிபோல
கிளிபோலவாய்திறந்து கூவுவாள்கட்டுவச்சி

வீமனது வீதியில் குறம்

(தின) சிறந்தகுலபஞ்சவர்கள் செங்கோலைசெலுத்தி
ஸ்ரீராமர்கிருபையினுல் ஜெகமேழுமாண்டார்
ஏழுபிராயத்திலே இடும்பன்றனைக்கொன்று
எதிர்த்துவந்தயிராட்சதரை சங்கரித்தவீமன்
பத்துபிராயத்திலே பகாசூரன்றன்னை
பதறவேகிழித்தெறிந்த பாரமதகரியான்
மதத்தானை சங்கரிக்கும் மதவீமாசன்
வாழும்பெருவீதியிலே வம்பர்களுமுண்டோ
கொச்சைக்குறத்திநான் பிச்சைக்குவந்தால்
கூடிமயலாகியென்மே லாசைபடுவாரோ
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்கிப்போறேன்
இஷ்டமுடனோடிவந்து இலச்சைசெய்யலாமோ
ஐயரதுசீமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குக்கைபார்க்குங் கானக்குறத்தி
கண்டவர்க்குப்பெண்டாக மிண்டுகளாசொன்னீர்
வண்டாடுகொண்டையின்மேல் கண்டாசைப்பட்டு
மயங்கிவிழுந்தாலே மனப்பழுதுவருமே
கொண்டவரறிந்தாலே குடிகேடுவருமே
வம்பர்களுந்தும்பர்களும் வந்துவழிமறைத்து
மனையாளாய்வாருமென்று யெனையழைக்கலாமோ
இங்கிதமாய்வீமருடன் யானுரைத்தேனுனல்
மயங்கிவிழஉங்களைத்தான் வதைத்திடுவார்போடா
இப்போதுபோயுரைப்பே னப்புறம்போறீரோ
என்றவரைத்தான்பார்த்து யிணைவிழியாள்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவளநகைத்தாள்

வேறு

அத்தண்டமன்னரெல்லாம் அசைந்தாற்போல்நின்று
மையல்பெரிதாகி மயங்கியேநின்றுவிட்டார் [விட்டார்

மாணிக்கப்பொற்பதக்கம் மார்பிலசைந்தாட
ஏக்கற்ருர்போல யிருந்துவிட்டார்மன்னரெல்லாம்

தருமர் வீதி வருதல்

அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்ருள்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
சந்தனவடிவழகர் தருமரதுவீதிவந்தாள்
மின்னற்கொடிபோலே மெல்லியருந்தான்வருவாள்
காமரூபவடிவழகி கட்டுவச்சிதன்னழகை
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்கண்டார்கள்
சுத்திவந்துபார்ப்பார் சொரூபக்குறத்தியென்பார்
கட்டுவச்சியல்லவடா காமன்ரதியென்பாரும்
சாய்ந்தநடையழகும் தாழ்வடத்தின்முத்தழகும்
குறத்திவடிவழகை கொற்றவர்கள்தான்பார்த்து
பார்த்துமனமிரங்கி பல்லைத்திறப்பாரும்
மல்கட்டுங்கொங்கையின்மேல் மனங்களித்துபார்ப்பாரு[ம்
பின்னழகைக்கண்டு பிர்மித்துநிற்பாரும்
முன்னழகைக்கண்டு மூர்ச்சையாய்விழுவாரும்
வாடிகுறத்தியரே மதன்கலையைத்தீராயோ
முத்துநிகர்பல்லும் முறுக்கணிந்தசெவ்வாயும்[போல்
இருண்டெழுந்தசோலையிலே சிவந்தெழுந்தசந்திரன்
அந்தக்குறத்தியரை அனந்தம்பேர்பார்த்திருந்தார்
கட்டுவச்சிநாயகியை கண்டுமயலானர்
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்
வாடிமலைக்குறத்தி மாளிகையில்விட்டுபோரும்
மெத்தைமேல்வைக்கிரும் வேணபணிபூட்டுகிரும்
சிங்காசனத்தில்வைத்துச் சேவித்துபார்க்கிரும்
பொன்னடிக்கீழ்தெண்டனிட்டு புட்பமலங்கரிப்போம்
மன்மதபாணமது மார்புருகிப்போகுதடி
கூடியணைந்தாலே குறைதீருங்கட்டுவச்சி
மெத்தையுண்டுமேடையுண்டு வீற்றிருக்கசோலையுண்டு
சுத்தியுலாவுதற்குச் சிங்காரச்சோலையுண்டு
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
படுக்கவிடமுண்டு பள்ளிகொள்ளத்தாவுமுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செம்பொன்னனேகமுண்டு
அணியப்பரிமளமும் அள்ளிதரப்புனுகுமுண்டு

வாராயோகட்டுவச்சி மாளிகைக்கழைத்துப்போரும்
என்றுதுடர்ந்தார்கள் இயலானகுறத்தியரை
மாதுகுறத்தி மலைக்குறத்தியேதுசொல்வாள்
குறமாதர்போலாக கொம்பனையாளேதுசொல்வாள்

தருமர் வீதியில் குறம்

(தின) கொன்றைமல்லிமுல்லைசூடுங் குமரேசர்நாட்டில்
கொங்குவங்காளமதில் குடியிருக்குங்குறத்தி
கொச்சிமலைகுடகுமலை வாழுகின்றநாங்கள்
குமரேசர்வள்ளியற்குங் குறியுரைக்குங்குறத்தி
பச்சைமலைபவழமலை வாழுகின்றநாங்கள்
பசிகாலமானாலே பழங்கூறிவருவோம்
சந்திரகுலம்விளங்கவந்த தருமர்பெருநாட்டில்
தாரணியில்குறமாட தனித்துவந்தேனிங்கு
பிச்சைகுறத்தியர்மேல் யிச்சைபட்டீர் நீங்கள்
புண்ணியனார்தருமருடன் போயுரைப்பேன்பாராய்
தருமர்பெரும்வீதியிலே அதர்மங்களுண்டாச்சோ
சற்றெனவேயுரைத்துத் தலைதரிப்பேன்பாராய்
பொன்முழுகுந்துறைதனில் போய்முழுகுவார்தருமர்
பொய்வசனமுரையாத புகழ்வேந்தராசன்
உண்மையுடனவருக்கு வுரைத்தமதிதானே
உன்னுண்மையாலேவந்து வின்னுண்மைசொன்னீர்
வம்பர்களோ தும்பர்களோ வழிமறிக்கவுன்னை
மனையிடத்துசமுசாரி யென்றுமறியலாச்சே
என்குறவன்பொல்லாதா னிதுவறிந்தானானால்
உங்களிடநாவறிந்து வுயிர்வதைகள்செய்வான்
உத்தமற்குப்பிறந்ததொரு புத்திரருமானால்
பரிந்துவந்துயெனை மறிக்க நியாயமுண்டோசொல்வீர்
தேவதாசிமக்கள் நீங்க ளானபடியாலே
தெருவில்போகுங்கன்னியரைந் தீண்டியழைத்தீர்கள்
அச்சமறநாட்டுக்குள்ளே சற்றுபயமில்லையோ
அப்புறம்போமென்றவளு மஞ்சிநடைநடந்தாள்

வேறு

மாதர்குறத்தியுட வார்த்தைதனைக்கேட்டவர்கள்
மெத்தப்பயந்தார்கள் விடவிடென்றுதானடுங்கி

ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்
ஒருகாலொடிந்து ஓடிவந்தமுடவனைப்போல்
மையல்பெரிதாகி மயங்கியே நின்றுவிட்டார்
ஏக்கற்றூர்போல யிருந்துவிட்டாரெல்லோரும்
மத்தங்காய்தின்ருற்போல் மயங்கி நின்றுவிட்டார்

பள்ளிக்கூடத்துவீதி வருதல்

அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்ருள்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
ஓதிவைக்கும்வீதியிலே உத்தமியாள்வாராளே
பள்ளிக்கூடத்திலே வருகின்றபாதையிலே
வாத்தியார்வீதியிலே வருகின்றபாதையிலே
அப்போகடோற்கஜனும் அபிமன்னராசாவும்
இந்திரராஜனவன் யிளவரையன்கோமான்
அரவானுந்தொந்திசெட்டி ஐவரிளம்பாண்டவர்கள்
இளம்பஞ்சபாண்டவர்கள் இயலானசிறுவருடன்
அண்டையயல்பிள்ளைகள் ஆயிரஞ்சிறுவருடன்
சிறுவயதுபிள்ளைகள் தோழர்மார்தன்னுடனே
பள்ளிக்கூடத்திலே பகல்பாடமொப்பிவைத்து
கணக்குத்தொகைகளுடன் வாசங்களோம்பிவைத்து
பார்த்தன்புதல்வரெல்லாம் பாலமுதவுண்ணவென்று
ஐயர்சிலவருளால் அரண்மனைக்குவாருர்கள்
மக்கள்வருகிறதை வாழ்குறத்திகண்டுவிட்டாள்
செண்டுபந்துவிளையாடி தெருவீதிவாருர்கள்
புத்திரர்வரவைக் கண்டாளேபூங்குறத்தி
பிள்ளைகள்தன்வரவைக் கண்டவளும்பூரித்தாள்
உள்ளங்குளிர்ந்தவளும் உடம்பெங்கும்பூரித்து
சரீரங்குளிர்ந்தாளே சர்வாங்கம்பூரித்தாள்
அபிமன்னறிந்தால் ஆச்சியுடன்போயுரைப்பான்
ஆயனுடன்பிறந்தாள் அரிவையாள்தானறிந்தால்
சித்தசன்றங்கையவள் சுபத்திரையாள்தானறிந்தால்
காரியங்களல்லவென்று கடுகநடக்கலுற்ருள்
தெரியாமற்போவோமென்று மிஞ்சியவள்நடந்தாள்
விளையாடிவாரபிள்ளை மெல்லியரைக்கண்டுவிட்டார்
பாலர்சிறுவரெல்லாம் பார்த்துவிட்டார்குறத்தியரை
தூரவருகையிலே துரைமக்கள்கண்டார்கள்

போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
அண்ணாவேகண்டீரோ அதிசயமானகதை
நம்மூரில்சூரியன் எங்குமயமாவான்காண்
ஆதித்தன்சூரியன் அவருதயமானக்கால்
கிழக்குதயமாயல்லோ மேற்கேயடைந்திடுவான்
மேற்குதயமானப்போல் விந்தையாய்தோன்றுகுது
வருகிறகுறத்திதன் வடிவழகைபார்த்திடுங்கள்
குன்றின்மேல்சந்திரன் குதித்தெழுந்தபாவனைப்போல்
இவளழகும்பாவனையும் எங்கிலும்கண்டதில்லை
மின்னற்கொடியோதான் மேகவருணன்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் கருவிளமாய்வந்தவளோ
மூத்துநிகர்பல்லும் முறுக்கணிந்தசெவ்வாயும்
வண்டாடுங்கொண்டையது மயிரழகும்பாவனையும்
புருவச்சிலையழகும் பொருந்தும்விழியழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகமழகும்
கன்னன்கடைந்தாற்போல் கலசத்திளமுலையும்
இடையழகும்நடையழகும் இடைக்கிசைந்தபட்டுடையு
ஆபரணமின்னு மலங்காரச்சோதிகளும் [ம்
ஈழத்துதச்சன் எழுதிவரவிட்டானோ
சித்திராதிபோலே தெருவீதிவாராளே
பட்டணத்துவீதியிலே பார்த்தீபன்காண்கிலையோ
அஞ்சனம்போல்வாரவளை அருச்சுனர்காண்கிலையோ
கண்டால்விடுவாரோ காண்டீபாருச்சுனரும்
ஐயாருகாக அழைத்துப்போய்விடுவோமா
என்றதுகேட்டுமவனேதுசொல்வானல்லரவான்
தம்பிகெடுத்தாயே தாழ்வானவார்த்தைசொன்னாய்
அருச்சுனனார்தம்மருகே அழைத்துப்போய்விட்டாலே
இந்தக்குறத்தியண்டை எந்நேரவாசமதாய்
விட்டுப்பிரியாமல் வீற்றிருப்பாருச்சுனரும்
நமது-ஆச்சிமார்பாடெல்லாம் பட்டல்லோ ஆணழகா
மூலைசிறைகாப்பார்கள் மொய்குழல்மார்தாயார்காண் !
அந்நேரம்நம்மைவைத்து பிடியும்படையுமாகும்
என்னமதிசொன்னீர்காண் என்னுடையதம்பியரே !
இத்தையறியேன்காண் என்பிறப்பேயண்ணாவே
அய்யாகுணமறிவோ மவர்நடத்தைநாமறியோம்
நம்முடையஆச்சிமார் நாயகிமாரெல்லோரும்

அவரவர்கள்தன்வீட்டி லனைவரையும்போகவிட்டு
குறத்தியருகாக குடியிருப்பார்நம்தகப்பன்
என்றிவர்கள்பேசி இசைந்துவருகையிலே
மாதுகுறத்தியிட மார்பில்பதக்கமது
தோராவடிவழகி துரோபதைநாயகியாள்
அல்லிப்பெருமா ளரசாளும்நாயகியாள்
இவ்விருவர்பொற்பதக்க மிவள்கழுத்திற்கண்டார்கள்
கண்டுபுலந்திரனுங் கட்டழகனேதுசொல்வான்
அண்ணாவேகண்டீரோ ஆச்சிமார்பொற்பதக்கம்
ஆச்சிமார்பொற்பதக்கம் ஆரந்திருடிவந்தாள்
கன்னமிட்டுவந்தாள்காண் கட்டுவச்சிநாயகியாள்
விஷமக்குறத்தியரை வந்துவளைத்தார்கள்
சில்லுபில்லென்று சிறுவரெல்லாங்கூடினார்கள்
வல்லக்குறத்தியரை வந்துவளைத்தார்கள்
கூடைசிலரிழுப்பார் கூடிவிளையாடிடுவார்
ஆடைபிடித்திழுப்பார் ஆபரணஞ்சிலர்கொள்வார்
கொண்டைபிடித்திழுப்பார் கூடைபறித்திழுப்பார்
பொற்பிரம்புகோல்பறிப்பார் பூவாடைவலித்திழுப்பார்
குள்ளக்குறத்தியரை குட்டுங்களென்பாரும்
கள்ளக்குறத்தியரை காதறுப்போமென்பாரும்
முல்லைக்குறத்தியரை மூக்கறுப்போமென்பாரும்
சில்லுபில்லென்று சிறுவராய்க்கூடினார்கள்
மலங்கமலங்கவே மடியைப்பிடித்திழுப்பார்
மாலைக்குறத்தி மலைக்குறத்தியேதுசொல்வாள்
வண்ணமலைக்குறத்தி வாய்திறந்தங்கேதுசொல்வாள்

பிள்ளைகள் இழுக்கிற குறம்

(தின) வம்பியல்லதும்பியல்ல விலைமாதரல்ல
வழிமறித்துமுனை குலைத்தல் பண்ணவோவந்தீர்
நம்பிவந்தேன்பாண்டவர்கள் நாடுதனிலிரக்க
நடுவழியிலென்னைமறித்து புடவைதனையிழுத்தீர்
அம்புவிழியால்மிரட்டி மறுபடியும்பிடித்திழுத்தீர்
அறியாதபயல்களென்று நானும்மனம்பொறுத்தேன்
அல்லியிடதிருமகனே அசடியிடம்கனே
அல்லாதுஎந்தனது வல்லாண்மைபாராய்
பயல்களென்றுகைத்தாழ்ந்தாள் நெறிமுறைமையாக

பரியாசம்செய்யவந்தீர் பாலரெல்லாம்கூடி
அருச்சுனனார் தன்மகனே ஐவர் திருமகனே
அறியாமல்மடிபிடித்தா யபராதம்வருமே
வல்லிடும்பிதன்மகனார் வளநாடுதன்மகனே
மதியாமல்மடிபிடித்தாய் குடிப்பழுதுவருமே
அக்கினிநானுங்களுக்கு அணுகாமற்போடா
அல்லிதிருமகனே ஆண்மைகளுமறிவேன்
சொல்வசனமறியாத தருமரிதையறிந்தால்
தாறுவருமுங்களுக்கு வேறுபடப்போறீர்
இடபமதிலேறிவரும் ஈஸ்வரனார்மைந்தர்
ஈராறுகரமுடையான் யேழைபங்காளன்
திருத்தணிகைகந்தருக்கும் பாடியிடுங்குறத்தி
தெய்வலோககுறத்தியென்று தேசமெங்குமறியும்
மற்றொருத்திபோலவென்னை மடிபிடிக்கவந்தீர்
வரிசையெனக்குடன்பிறந்தார் நால்வருண்டுபொல்லார்
என்மடியைப்பிடித்திழுத்த வார்த்தைகளைக்கேட்டால்
இயலானவுன்மனது திரௌபதையாள்தன்னை
இந்நேரம்பிடித்திழுத்து பெண்டுவைத்துக்கொள்வார்
இடங்கெட்டபுத்திபெற்ற மகனே நீபோடா

பிள்ளைகள் கோபித்து சண்டை செய்கிறது

வேறு

இந்திரராஜனவன் இளவரையனேதுசொல்வான்
அண்ணவேகண்டீரோ ஆகடியவார்த்தைசொன்னாள்
வாயிடும்புபேசினாள் மன்னவரேகண்டீரோ
சொல்லாதசொல்லையிவள் சொல்லினாள்கண்டீரோ [து
கொம்பனையாள் திரௌபதியை குறவர்பெண்டாயிகழ்வ
பத்தியாளென்றுசொல்லி சற்றுமதியாமற்சொன்னாள்
வாயைக்கிழிப்பேன் மணிமுடியைநானறுப்பேன்
நாக்கையறுத்திடுவேன் நர்ணங்குலைத்திடுவேன்
எட்டிப்பழம்போல இருகண்ணுந்தான்சிவந்து
சவுரிப்பழம்போலே தன்னிருகண்சிவந்து
உருகியசெம்பொனது உதிரம்போல்கண்சிவந்து
இடதுபக்கஞ்சதைகளது ஈட்டிப்பழம்போலேதுடிக்க
வலதுபக்கஞ்சதைகளது வல்லயம்போலேதுடிக்க
வாங்கினான் தன்சதையை மண்ணுவிண்ணுந்தானதிர

வில்வளைத்து நாரிபூட்டி விசையுடனேபாணந்தொட்
எடுத்தானே அம்பு ஏற்றிஞறுணியிலே [டான்
நாணிபிகுவெடுக்க நாஞேசைபேதமிட
அண்டஞ்செவிடுபட ஆகாயந்தானதிர
தேவர் நடுங்கவே திக்குகளுந்தானடுங்க
சந்திராள்கெதிகலங்க சமுத்திரம் நீர்கள்வற்ற
பிரயோகம்பண் ணுகிருன் பெரிதான அஸ்திரத்தை
ஒன்பது நூறு ஓராயிரம்கோடி
ஏற்றிஞன் நாணிதன்னை இராஜாக்கள் தானடுங்க
நகரத்தரசர்கள் திடுக்கிட்டுநாவுலர
சொர்னகிளாஞ்சியது சுந்தரமாய்செவிடுபட
கெற்பங்கலங்கவேதான் கிளிகள்சரமாரிகொள்ள
கொற்றவனுமங்கே குணத்தொனிபண்ணிஞர்
அம்பைதொடுத்தானே ஆரணங்கைக்கொல்லவென்று
விட்டான்சரபாணம் மேனியெல்லாம்நீருக
அம்புமேலம்பு ஆயுதமாய்பொழிந்தானே
அஸ்திரம்வரும்விதங்கள் ஆர்க்கமுடிபோகாது
பாணம்வரும்விதங்கள் பாக்கமுடிபோகாது
ஐப்பசிமாதத்திலே அடர்ந்தமழைவந்ததுபோல்
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
சங்கோபசாங்கமாய்ச் சரமாரித்தான்பொழிந்தார்
அஸ்திரம்வருகிற அதிவேகத்திறமையிலே [ைப்பார்
திக்கிலுள்ளசனங்களெல்லாந் திகிலெடுத்துப்பார்த்து
மாண்டாள்குறத்தியென்று வையகத்தார்சொல்லலுற்
இந்திரபாணமது எப்படியுங்கொன்றுவிடும் [ருர்
ஐயையோவென்றுசொல்லி அழுவார்சிறிதுபேர்கள்
அல்லிமகன்தொடுத்த அனந்தமானபாணமெல்லாம்
இந்திரன்விட்டதொரு பாணங்கள் தானெழும்பி
கொல்லவேவந்தது கோடானகோடிபாணம்
அருச்சுனரென்றுசொல்லி அஞ்சிப்பயந்தது.
வாள்விஜயனென்றுசொல்லி மனதில் நினைத்தது
ஆரென்றுசொல்லிவிட்டான் அல்லிமகனிந்திரனும்
தகப்பனைக்கொல்லவோ தான்தொடுத்தார்பாணமது
யாராலேயாகுமிந்த அருச்சுனரைக்கொல்லுகைக்கு
பரமசிவன்கையிலே பாசுபதம்பெற்றவரை
நம்மாலேயாகுமோ ராஜாவைக்கொல்லுகைக்கு

என்றுபயந்ததுவும் இறங்கியடிபணியும்
தாளியிலையறுக்கும் தாமரைப்பூவோரிதழும்
அட்சதையும்புஷ்பமும் அழகுகெந்தந்தன்னுடனே
மாலைகளாய்வந்து வணங்குதவள்பாதம்
கண்டான்புலந்திரனும் கண்கொள்ளாக்கோபமுடன்
அண்ணுவேகண்டீரோ அம்பைவணங்கவைத்தாள்
பாணத்தைதான்மயங்க மருந்தறியாள்பாவியிவள்
சொக்குபொடிமருந்து தூவும்வித்தைகற்றவள்
வானஞ்சுழலவே மருந்தறிவாள்பாவியிவள்
பூமிசுழலவே பொடியறிவாள்தோஷியிவள்
கண்கட்டுவித்தைகளும் காரணமுந்தானறிவாள்
மாயப்பொடிமருந்து மாபாவிதானறிவாள்
மலையாளந்திரிந்தவள்தான் மந்திரமுங்கற்றவள்தான்
ஆனதால்ஆச்சியுட ஆரந்திருடிவந்தாள்
இந்தக்குறத்தியரை என்னசெய்வேன்அண்ணுவே
தெண்டாயுதத்தாலே சீவன்வதைபண்ணுகிறேன்
தெண்டாயுதமெடுத்து சுழட்டியறைகிறேன்
கைபறித்துதெண்டெடுத்தான் கனகமணிச்சிதைய
வெற்றிமதயானை வீமன்பயின்றெடுத்த
காளைகடோற்கஜனும் கனகோபங்கொண்டானே
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனே
நீ-அம்புக்குவல்லவன்தான் அருச்சுனனார்புத்திரனே
அம்பைத்தொடுத்தீரே அனைவோரும்பார்த்திருக்க
தெண்டுடையான்வீமன்பெற்ற திறமையுள்ளானிருக்க
மிஞ்சாதேதம்பியரே மெல்லியரைக்கொன்றிடுவேன்
என்றுயெழுந்தானே இயல்வீமன்பெற்றமகன்
காளைகடோற்கஜனும் கடுகியேதெண்டெடுத்தான்
எட்டுதிசைநடுங்க இராசாக்கள்குலையதிர
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துவிழுந்திடவே
மந்திரதூபமிட்டு வாங்கிச்சுழட்டிவிட்டான்
கண்டந்தமன்னரெல்லாம் கடுகப்பயந்தார்கள்
மாண்டாள்குறத்தியென்று மண்டலத்தார்தான்புலம்ப
வருகிறகோதண்டம் வாள்விஜயனைக்கண்டு
ஆரென்றுகொல்லுதற்கு அனுப்பினன்வாள்வீரன்
பார்த்தன்வடிவுடையான் பாசுபதம்பெற்றவனே
நம்மாலேயாகுமோ ராஜாவைக்கொல்லுதற்கு

என்றுபயந்துமே இறங்கியடியில்விழும்
தாளியிலேபயக்குந் தாமரைப்பூவோரிதழாம்
மாலையாய்வந்தல்லோ வணங்கிற்றவள்பாதம்
கண்டான்கடோற்கஜனுங் கண்சிவந்துகோபமுடன்
சத்திராதிபகையாளியைச் சங்கரிக்குங்கோபதெண்டு
வச்சிரகோபதெண்டு வணங்கவைத்தாளிக்குறத்தி
மாயமறிவாள் மருந்தறிவாள்கட்டுவச்சி
இந்தக்குறத்தியரை என்னசெய்யவேணுமென்றான்
இந்த-மந்திரவாளாலே இம்மாதரைவெட்டவேண்டும்
என்றுபதைத்தவனும் எடுத்தானேவாள்தன்னை
கண்டானே நல்வீமன் கடுகிவந்துதான்மறித்தான்
அபிமன்னன்வாளுக்கு ஆருமெதிருமல்ல
கனமோசம்வருகுதென்று கடுகியவனோடிவந்து
இந்திரஜாலவித்தையால்எழும்பிவந்துவாள்பிடித்தார்
வாளை பிமன்னு மதியில்லாத்தம்பியே
தூதரைக்கொன்றாலும் சூல்பசுவைக்கொன்றாலும்
வேதியரைக்கொன்றாலும்விண்ணவரைக்கொன்றாலும்
நம்பினேனென்றவரை தாமவரைக்கொன்றாலும்
ஆதரித்துவந்தவரை அவரைநாம்கொன்றாலும்
மாதரைக்கொல்வதற்கு வாள்தானெடுப்பாரோ
எதிரிபகையாளியல்ல நம்மையெதிர்த்தசத்துருவல்ல
ஆரென்று ஆயுதத்தை அபிமன்னு நீயெடுத்தாய்
ஆரந்திருடிவந்த அதிசயத்தைநாம்கேட்போம்
தருமருகாகத் தள்ளிப்போய்விட்டிடுவோம்
கோபத்தையாற்றிவிடு குறத்தியைநாம்கேட்போம்
என்று-அவனை விலக்கியே மன்னவனல்லரவான்
மாதுகுறத்தியுடன் வாய்திறந்தங்கேதுசொல்வான்
வாடிமலைக்குறத்தி வாள்பெரியதருமரண்டை
தருமருகாகத் தள்ளடாவென்பாரும்
கூடைபிடித்திழுப்பார் பின்னாலேதள்ளிடுவார்
புடவைபிடித்திழுப்பார் பின்னாலேதள்ளிடுவார்
கண்ணால்கருகுவார் கையால்சிலரிழுப்பார்
கட்டுமடாவென்பாரும் காதறுப்போமென்மாரும்
நாக்கரிவோம்மூக்கரிவோம் நல்லஸ்தனமரிவோம்
என்று-மலங்கமலங்கவே மடியைப்பிடித்திழுத்தார்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்திகூறுவாள்

குறத்தி புலம்புகிற குறம்

(தின) கூடையைப்பிடித்திழுத்தீர் கூ-கூ-கு
கொல்லப்போருனென்கணவன் கூ-கூ-கு
தாடையிலேசாம்பவாரீர் கூ-கூ-கு
தலைமயிரைப்பிடித்திழுத்தீர் கூ-கூ-கு
பின்முன்னேயெண்ணுமலே கூ-கூ-கு
கையைப்பிடித்திழுக்கவாரீர் கூ-கூ-கு
நன்றி நடுவில்லையோ கூ-கூ-கு
நீங்கள் நாடாளும்ராஜாக்கள் கூ-கூ-கு
அண்ணர்பொல்லார் நால்வருண்டு கூ-கூ-கு
அறிந்தால்முறைவருமே கூ-கூ-கு
மண்ணளந்தான் தன்மதியோ கூ-கூ-கு
மடியைப்பிடித்திழுக்கவாரீர் கூ-கூ-கு
குண்டெடுத்த தின்மதியோ கூ-கூ-கு
கூடைதனைப்பறிக்கவாரீர் கூ-கூ-கு
தருமரிட தன்மதியோ கூ-கூ-கு
தாடையிலேசாம்பவாரீர் கூ-கூ-கு
வீமரிட தன்மதியோ கூ-கூ-கு
விழியால்மிரட்டுகிறீர் கூ-கூ-கு
அருச்சுனஞர் தன்மதியோ கூ-கூ-கு
அடிக்கவாரீர்பிடிக்கவாரீர் கூ-கூ-கு
இரட்டையர்கள் தன்மதியோ கூ-கூ-கு
நெட்டியெனைத்தள்ளுகிறீர் கூ-கூ-கு
மிஞ்சிமிஞ்சியோடிவாரீர் கூ-கூ-கு
மேல்விழுந்துதள்ளுகிறீர் கூ-கூ-கு
ஆளன்குலைக்காரன்கண்டீர் கூ-கூ-கு
அறிந்தால்குறைவருமே கூ-கூ-கு
அதோவாரானென்கணவர் கூ-கூ-கு
அயல்நாட்டுக்கோடிப்போங்கள் கூ-கூ-கு
அதோவாரானென்கணவர் கூ-கூ-கு
எங்கேயாலோடிப்போங்கள் கூ-கூ-கு
அம்பலத்தாரே நீங்கள்சாட்சி கூ-கூ-கு
நான்பண்ணினபாவமிதோ கூ-கூ-கு
பசங்களெனைமறிக்கிறீர்கள் கூ-கூ-கு
பறியாதேகூடைதனை கூ-கூ-கு

வேறு

பஞ்சவர்மேலாணையென்ன பயந்துநடுங்கினார்கள்
காளையரவானுங் கட்டழகனேதுசொல்வான்
தள்ளாதேகுறத்தியரைத் தம்பியரே நில்லுமென்றான்
வாடிமலைக்குறத்தி வார்த்தையொன்று நீர்கேளும்
அன்னையவள்கழுத்தி லாலித்தஆபரணம்
எப்படிக்குவாங்கிவந்தா யிளங்குறத்திசொல்லென்றான்
திருடியேவந்தாயோ செம்பொன்மணிப்பதக்கம்
கன்னமிட்டுக்கொண்டாயோ களவுசெய்துவந்தாயோ
மருந்துமயக்கத்தாலே வாங்கியேவந்தாயோ
எப்படிவந்தாய்நீ இளங்குறத்திசொல்லுமென்றான்
வண்ணநடைகட்டுவச்சி வாய்திறந்தேதுசொல்வாள்
அனலிற்பிறந்தாட்கும் அல்லியிற்பிறந்தாட்கும்
இருவருக்குக்கைபார்த்து பெற்றேனேயிப்பதக்கம்
உண்மைகுறிசொல்லி பெற்றேன்காணுத்தமனே
அப்படிப்பட்ட சாமர்த்தியோ நீகுறத்தி
ஆச்சியிடபொற்பதக்கம் ஆருக்குங்கொடுப்பதில்லை
ஆலைவாய்சொக்கரவ ரையரேவந்தாலும்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரேவந்தாலும்
நரியைப்பரியாக்கும் நாதரேவந்தாலும்
உரியில்வெண்ணெய்திருடியுண்ட உலகளந்தார்வந்தா
உரலோடுகட்டுண்ட மாயனார்வந்தாலும் [லும்
ஆயிரங்கண்படைத்த தேவேந்திரர்வந்தாலும்
எழுதும்பிரமனும் எமன்கூடவந்தாலும்
ஏமனவர்வந்தாலும் எக்காலமானாலும்
வாங்காரொருநாளு மாணிக்கப்பொற்பதக்கம்
உனக்குக்கொடுத்தாளோ உத்தமியாளென்தாயார்
அவள்பிறந்தவன்றே யழுத்தியசீராபரணம்
கூடப்பிறந்தது கொம்பனையாள்பொற்பதக்கம்
எப்படிவாங்கிவந்தா யெங்களுக்குச்செல்லுமென்றார்
எங்கள் ஆச்சிக்குசொன்னகுறி எங்களுக்குசொல்லடி நீ
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வாள்கட்டுவச்சி
உங்கள்குணத்திற்குக் குறிசொல்லவேணுமடா
கூடையைப்பற்றி யிழுத்தீரேகொற்றவரே
கூடையின்சேகமது கொடாமல்விடுவேனோ

பிள்ளைகளுக்குக் குறஞ் சொன்னது

(தின) கூடையெனுங்கூடைகண்டாய் கொந்தளப்பொ
குமரேசர்வள்ளியற்கு குறிசொல்லுங்கூடை [ன்கூடை
சந்திரருஞ்சூரியருஞ் சந்தித்தகூடை
தவமுனிகள்ரிஷிகளெல்லாம் நிறைந்திருக்குங்கூடை
குறித்தாற்போல்குறியுரைக்கும் கூடையதுகூடை
கோபாலலட்சுமிக்குங் குறிகள்சொல்லுங்கூடை
ஆணியில்லா நல்வச்சிர மழுந்திருக்குங்கூடை
கொந்தளப்பெண்ணிட்டமன்னு கூடைதனையிழுத்தீர்
தயவுவந்ததுமேலேகுறியுரைப்பேனோடா
என்குறவன்பொல்லாதவ னெனைத்தேடிவருவான்
உங்களிடமாளிகைக்கு ளொதுங்கிநடப்பீரே
அந்திபடும்வேளையாச்சு சந்தடிகள்வேண்டாம்
அரண்மனைபோங்களென்று மிகவுரைத்தாள்குறத்தி

வேறு

இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வான் நல்லரவான்
வாரும்மலைக்குறத்தி வார்த்தையொன்று நீர்கேளும்
ஆச்சிக்குச்சொன்ன குறியிலொன்றுயெங்களுக்கு
சொன்னாலேயல்லாது சுந்தரியேபோகவிடோம்
குறிசொன்னாலல்லாது கொம்பனையேபோகவிடோம்
தருமரிடமிப்போது தானிழுத்துப்போவோமென்றார்
எட்டுநாள்சென்றாலு மிளங்கொடியேயுன்னைவிடோம்
இவ்வார்த்தைகேட்டுமவ ளேதுசொல்வாள்கட்டுவச்சி
உங்களுக்குக்குறிசொன்னா லேதுதரப்போறீர்கள்
தெய்வகுறத்தியென்று சிந்தையிலேயெண்ணாதே
வீண்குறிகள்சொல்லியே வெறுமையாய்ப்போவேனோ
ஏற்றகுறியுரைத்தால் உச்சிதங்கள்தாரோமடி
அல்லாதேயானால் அடங்கலும்பறிப்போமடி
பாலகர்வார்த்தைக்கு பார்த்தாள்மிகமகிழ்ந்து
சந்தோஷமாகியே தையலருமேதுசொல்வாள்

குறம்

(தின) குறத்தியைவழிமறித்தீர்கூத்தாட்டங்கொண்டீர்
கொஞ்சமல்லவுங்களுக்குக் குரோகிதரேகேளீர்
பிரத்தியல்லநானுனக்கு பேர்மிகுந்தவிஜயன்

பேர்கொண்டபூங்குறத்தி பேசாதேபோடா
கைபார்க்கவேணுமென்ருல் கரமதை நீகாட்டாய்
காரியங்களுள்ளபடி வீரியமாயுரைப்பேன் [வாள்
கைத்தலத்தைத்தான்பிடித்துகண்ணிலொற்றிக்கொள்
கண்மலரோபொன்மலரோ கைத்தலங்களென்பாள்
குமாரனிடகைத்தலத்தைக் கூடையின்மேலடித்து
கொச்சியம்மையை நினைத்துக் குலமார்பில்வைத்தாள்
மலையாளத்தஞ்சியே வந்துகுறிசொல்லும்
வள்ளிமலைநாயகியே யுள்ளகுறிசொல்லும்
வடவாசல்காக்கும்நல்ல மண்ணுப்பிடாரி
மனையிடத்துதேவதையே வந்துகுறிசொல்லும்
மஞ்சளழகிகளா மடிச்சீலைகாரிகளா
மகாபூசைவாங்கியுண்ணும் வனத்துநயினரே
பிரியமுடன்குறிகளந்த புத்திரர்க்கருளும்
அலர்மேலுமங்கையம்மாள் அன்புகுறிசொல்லும்
இச்சையுள்ளதேவதைக ளனைவோருமாக
கொச்சைக்குறத்தியிட கூடைதனிலமர்ந்து
குறிக்கோலைமுன்னடத்தி குறிகள்மிகவுரைக்க
குமாரரிடநெஞ்சமது மிகமகிழவேதான்
தெய்வங்களை நினைத்தாலே சிலிர்த்துகொள்ளுதுடம்பு
திரேகமெல்லாமயிர்க்கூச்சிடுகுதடாதம்பி
வாடைமணம்வீசுதடா மயில்வந்தாப்போலே
மயக்குதடாஎன்னுடம்பு சன்னதங்கொண்டாற்போல்
அசல்விழிதுடிக்குதடா குறிகளுரைப்பேன்கேளும்
அருச்சுனனுடைவருக்கும் புத்திரரும்நீரே
அல்லியரசாணியிட பிள்ளைகளும்நீரே
தனஞ்செயற்கும்இரட்டையற்கும் புத்திரரும்நீரே
மனதில்வந்தபெண்கொடிக்கு மைந்தரும்நீரே
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன்கேளும்
மாயவனாருகில் துரியோதிரனும்வந்து
அபிமருக்குயென்றிருந்த ஆயன்மகளாரை
அன்பானலக்குணற்குச் சுந்தரியைக்கேட்டு
எம்பெருமாள்மகளாரைப் பரியமதுபொருந்த
எழுநூறும்வொட்டகம்பொன் யீந்தானே துரியன்
அந்தப்பொன்னையவர்கள் பதரெனவேதூற்றி
அளவிலாதிரவியத்தை அவரெடுத்துக்கொண்டார்

உபாயமுகூர்த்தமிட்டு உலகளந்தமாயன்
இன்றெட்டாதாளையிலே இசைந்துவரச்சொல்லி
இயல்வீமராஜரண்டைத் தூதுநடந்தாரே
பார்ப்பானைப்போல்வந்து அபிமனுடன்சொல்லி
படைபொருந்திமணங்கள்செய்யவகைகள் நினைத்தாரே
அரவானுந்தொந்திசெட்டி கடோற்கஜனபிமன்னன்
அரசன் துரியோதிரனார் அவர்தளத்தில்புகுந்தார்
ஒருநொடியில் துரியோதிரன் சபையில்மன்னர்மடிய
புரவிகாந்திரர்மடிய ரதமொடியப்பொடியாய்
சிலைமுறியவரை நடங்க துரியோதிரனுடனே
வந்துன்னைவதைகள்செய்து சக்கரகிரியையுருள
துரிதமுடன்வீற்றிருக்குஞ் சுந்தரியையருள
குறிகளதுபொய்யோடா கொற்றவனேயென்று
கொச்சியம்மையாணையென்றுகூடையின்மேலடித்தாள்
பொய்யோடாயென்குறிகள் மெய்யோயிதுபுகல்வீர்
புண்ணியனே அல்லியிட புத்திரனேயென்றாள்
என்றவனைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவளநகைத்தாள்

பிள்ளைகள் குறத்தி சொன்ன குறிக்குச் சந்தோஷித்துத்
தாங்க ளணிந்திருந்த ஆபரணத்தைக் கொடுத்தது

வேறு

வாடிமலைக்குறத்தி வண்ணநடைகட்டுவச்சி
ஆச்சியர்தன்னுடைய ஆபரணமானதெல்லாம்
திருடிவந்தாயென்றுசொல்லி திட்டினோம்வைதோமே
தெய்வக்குறத்தியம்மா தெளிவானகட்டுவச்சி [ன்றோம்
கன்னமிட்டாளென்றுசொல்லி கட்டென்றோம்வெட்டெ
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாற்போல் பாங்காய்குறியுரைத்தாய்
அறியாமற்செய்தகுற்றம் ஆச்சிமனம்பொறுக்க
தெரியாமற்செய்தகுற்றம் சிந்தையிலேவையாதே
என்றுபாதம்பணிந்தார்கள் பாலர்சிறுவரெல்லாம்
அவரவர்களிட்டிருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
ஆரஞ்சரப்பளியும் அழகுமுத்துத்தாழ்வடமும்
முத்தின்கடுக்கனும் முருகுடனேமோதிரமும்
கழற்றியேமுன்னேவைத்துக் காலில் விழுந்தார்கள்

எடுத்துப்போமாச்சியெனஎல்லாருந்தெண்டனிட்டார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
வாருங்களென்மகனே வார்த்தையொன்றுநீர்கேளும்
நீங்கள்-திட்டினதும்வைததும் தெத்தில்லாலெய்த
அத்தனையுமெந்தனுக்கு அதிபிரியங்காணுமடா [தும்
பார்த்தன்துரையாலே படைமன்னு நீங்களெல்லாம்
வாய்த்தான்மகன்காணும் என்றுள்மலைக்குறத்தி
ஆபரணந்தானெடுத்து அனைவர்க்குந்தான்கொடுத்து
பதியோடிருங்களென்று பாலக்ரேபோங்களென்று
அந்தத்தெருக்கடந்து அப்பாலேலபோகலுற்றாள்

குறத்தி வரும்போது பிராமணாள் இச்சித்தது

மற்றொருவீதியிலே வாறுள்மலைக்குறத்தி
பிராமணர்வீதியிலே போகலுற்றாள்கட்டுவச்சி
மாடப்புறுபோலே மயில்போலேதானடந்தாள்
அந்தப்பிராமணர்கள் அவளழகைக்கண்டார்கள்
வந்தபிராமணர்கள் மெல்லியரைக்கண்டார்கள்
மையல்பெரிதாகி மயங்கியவரோடிவந்தார்
சிவத்தைமறந்தார்கள் சிவத்தொழிலைத்தான்மறந்தார்
பூசைத்தொழில்மறந்தார் புட்பமெடுக்கசைந்தார்
தவத்தைமறந்தார்கள் தவத்தொழிலைத்தான்மறந்தார்
ஞானமறந்தார்கள் நற்பூசையும்மறந்தார்
கிழங்கள்பழங்களெல்லாங் கிட்டிவந்துபல்திறந்தார்
குடுமிவிடுவித்தவர்கள் கொப்பெனவேவோடிவந்தார்
கண்ணுக்குத்தெண்டமென்பார்காலுக்கடிமைஎன்பார்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோறோம்
மெத்தைமேல்வைக்கிறோம் வேணபணிபூட்டுகிறோம்
ஆபரணந்தரித்து அலங்கரித்துப்பார்த்திருப்போம்
பெண்டுகளுள்ளவரைபேணிதொழில்செய்யவைப்போ
ஆணப்பிறந்தவர்கள் அடிமைதொழில்செய்வோம் [ம்
ஊழியங்கள்செய்திடுவோம் உத்தமியேவாரீரோ
கண்ணுக்குதெண்டமென்பார் காலுக்கடிமையென்பார்
வாடிக்குறத்தியென்பார் மையல்பெரிதாகுதென்பார்
காமக்கணையாலே கனைத்தாங்கிபோகுதென்பார்
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதென்பார்
மோகனசிங்கமது முகத்தையழிக்குதென்பார்

ஆறுருகுபாணமது மாருருகிப்போகுதென்பார்
அரைநாழிஎங்களுட னணைந்திருந்துபோடிஎன்பார்
சுத்தினார்மாதரைச் சூழ்ந்தார்குறத்தியரை
வண்ணக்குறத்தியவள்வாய்ந்திறந்தங்கேதுசொல்வாள்

குறத்தி பிராமணனுக்குச் சொல்லும் குறம்

(தின) கொச்சிமலைகுடகுமலை குடியிருக்குங்குறத்தி
கொக்குவக்காவுகளும் குட்டிகறிசமைப்போம்
பச்சைமலைபவழமலை குடியிருக்குங்குறத்தி
பன்றிகளுமானுகளுங் கறியாக்கித்தின்போம் [வோம்
காக்காய்தின்போங்கழுகுதின்போம்காட்டோணுஞ்சுடு
கள்ளுவைத்தால்குடங்குடிப்போம் கானகத்துசாதி
காட்டானைசிங்கங்களும் கரடிபுலிதின்போம்
காட்டிலேகுடியிருப்போம் கள்ளக்குறச்சாதி
ஏச்சானசாதியல்லோ எங்கள்குலசாதி [வோம்
ஆமைதின்போம்கீரிதின்போம் அணிலடித்துச்சுடு
பூனைகுத்திவிருந்திடுவோம் புனக்குறவர்நாங்கள்
நுழைநரியும்மரநரியும் வெள்ளையெலிதின்போம்
குறச்சாதியானதெல்லாம் அரைச்சாதிநீகண்டாய்
கொச்சைக்குறநாற்றமது குமட்டலையோவுனக்கு
என்னை-கூடியணையமனந் தோணுதேவேதியரே
என்றவனைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

வேறு

வாருங்கள்பிராமணரே வார்த்தையொன்றுநீர்கேளும்
என்னைவைத்துஆதரிக்கும் வேதியருமானாலே
சிற்றிடைமார்வீதியிது தெருக்களெல்லாந்திரிந்து
கொம்பனைமார்வீதியெல்லாங் குறிகள்சொல்லிவாரே
பாடிவருகிறேன் பத்தினியாள்வீதியெலலாம் [னையா
நாளைவருகிறேன் நாயகரேநம்புமென்றாள்
அத்தெருவுவீதிவிட்டு அப்பாலேபோகலுற்றாள்
ஏக்கத்தாற்போலே யிருந்தார்பிராமணர்கள்
மையல்பெரிதாகி மதிமயங்கிநின்றுவிட்டார்
அப்போகுறத்தியவள் அலங்காரக்கட்டுவச்சி
வீதியும்வீதி தெருவும்பலகடந்து

குறத்தி மின்னொளி வீதி வந்தது

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாள்வீதியிலே
பாடிவருகிருள் பத்தினியாள்வீதியிலே
கூறிவருகிருள் குறமாதரைப்போல [கொள்வீர்
உறிகொள்வீர்தாம்புகொள்வீர் கோரோசனை உண்டை
குழந்தைகள்விளையாடக் கிலுகிலுப்பைக்கொள்வீர்
பச்சைமணிகொள்வீரோ பருஞ்சிலங்கைகொள்வீரோ
நரைபோயிளமைவர நல்லமருந்துண்டைகொள்வீர்
வாழாதபெண்களுக்கு வாழ்மருந்துண்டைகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேரமருந்துண்டைகொள்வீர்
கூத்திகளுக்காக மருந்துகொள்வீர்கொற்றவரே
வேசிக்கிடுமருந்து கொள்வீரோவேந்தர்களே
கைபார்ப்பேன்குறியுரைப்பேன் காரியங்களுள்ளபடி
கூடைமூறங்கட்டுகிறேன் குறிகள்மிகவுரைப்பேன்
பச்சைபொட்டுக்குத்தலேயோ பைங்கொடிமாதர்களே
என்று-பாடிவருகிருள் பத்தினிமார்வீதியெல்லாம்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைவாசலிலே
காத்திருக்குந்தோழிமார் கன்னியர்கள்கேட்டுவிட்டார்
ஆச்சி-வாழாதிருக்கிருள் மாதுநெடுநாளாக
கூடாதிருக்கிருளே கோதுநெடுநாளாக [தி
அவள்-மன்னன்வருங்குறியைச்சொல்வாள்மலைக்குறத்
பிச்சைகுறிபொய்யாது மெய்யாகுமாச்சியரே [வந்தாள்
நம்மிட-ஆச்சியற்குசொல்வோமென் ருரணங்குமோடி
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைக்குத்தெண்டனிட்
ஆச்சியரேகேளீர் அடியேன்வாய்விண்ணப்பம் [டார்
காணுவதிசயங்கள் கண்டேனுன்வீதியிலே
தெய்வக்குறத்தியவள் தெளிவானகட்டுவச்சி
மின்னிற்பிறந்தவளோ மேகவர்னர்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்துதித்தகருவிளமோ
எழுதவொண்ணுவடிவழகி யிவ்வீதிபாடிவந்தாள்
கைபார்த்துகுறிசொல்வாள் கட்டுவச்சிநாயகியாள்
மன்னன்வருங்குறியைச் சொல்வாள்மலைக்குறத்தி
பிச்சைக்குறத்திகுறி பொய்யாதுமெய்யாகும்
அகத்தினுள்ளாக அமைக்கத்திருவுளமோ
இவ்வசனங்கேட்டு ஏதுசொல்வாள்மின்னிடையாள்

புதுமைபுதுமையிது பொற்கொடியேயுன்பேச்சு
இதுபுதுமைகாணும் இளங்கொடியேயுன்பேச்சு
நானும்மனுஷியோ நாட்டிலுங்கூட்டுறவோ
என்மனதில்குறைகளென்ன வாடிமயங்குவதேன்
துக்கத்துயரமென்ன சிறையிருக்குந்தன்மையென்ன
நான்-நாலுபேரைப்போல நலமாகவாழ்கிறேனே [லே
அத்தனையும்போட்டுவைத்து கைபார்த்துக்கொண்டா
நகையாரோ நம்மையிந்த நாட்டிலுள்ளபெண்களெல்
வாழ்கின்றபெண்களெல்லாம் மாதேநகையாரோ [லாம்
மனங்களித்தபெண்களெல்லாம் தாழ்வுகளைச்சொல்லா
எழுத்துப்படியுனக்கு யிட்டுமிருந்தாலே [ரோ
கட்டுவச்சிஎன்செய்வாள் காரிழையேபோடியென்றாள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்கூறுவாள்
இப்புவியில்வந்தவொரு இளங்குறத்திதானுமல்ல
தெய்வக்குறத்தியவள் செப்பொன்மலைக்குறத்தி
மந்திரமுந்தந்திரமும் வண்ணமருந்துண்டைகளும்
இந்திரஜாலவித்தை யெல்லாமறிந்தவள்காண்
அவள்வந்துகைபார்த்தால் மனதில்குறைதீரும்
பார்த்தர்வரும்படி பகரவல்லாள்பைங்கிளியாள் [லாள்
வாள்விஜயனிங்கேதான் வருங்குறியைச்சொல்லவல்
ஆச்சிகுறத்தியரை அழைக்கச்செலவருளும்

மின்னொளியாள் வீட்டுக்குக் குறத்தி வந்தது

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
வாழாதார்வாசலுக்கு வருவாளோகட்டுவச்சி
ஆனாலழையுமென்று அன்னநடைமாது
சிறைச்சாலைமண்டபத்தைதேன்மொழியாள்விட்டெழு
அலங்காரமண்டபத்தி லாரணங்குவந்தமர்ந்தாள் [ந்து
அப்போதுதாதிமா ராரணங்குமோடிவந்து
வாடிகுறத்தியெங்கள் மாதுவழைக்கிறாள்
எங்களாச்சிக்குகைபார்க்க ஆரணங்கேவாருமென்றாள்
தாதியழைக்கையிலே சந்தோஷமாயவளும்
வந்தேன்வந்தேனென்றுசொல்லிமலைக்குறத்திவுள்ளே
இந்திரகட்டுவச்சி ஏத்தமுள்ளபூங்குறத்தி [சென்றாள்
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்திவுள்நுழைந்தாள்

ஓடமலர்க்கண்ணாளும் உள்வாசல்போய்நுழைந்தாள்
அல்லியிற்பிறந்தாளும் அனலிற்பிறந்தாளும்
இருவராளுப்பிவைத்த இளங்கொடிதாதியரும்
மின்னிடையாள்வாசலுக்கு விசையனார்போனபின்பு
அன்னநடைமாதர் அவர்திரும்பியோடிவந்தார் [ட்டு
அல்லியற்குந்துரோபதைக்கும் ஆரணங்குதெண்டனி
பார்த்தன்பிறகாகப் போனேமேபைங்கொடியே
கண்டமுடிமன்னர் கனத்தமயலானார்
தெண்டனிட்டுப்பார்ப்பாரும் சேவித்துநிற்பாரும்
சுபத்திரையாள்வாசலிலே தாதியழைத்ததுவும்
பள்ளிக்கூடத்துப் பசங்களிழுத்ததுவும்
பண்ணாதும்பண்ணியவர் பங்கமழித்ததுவும்
கொன்றைக்குறத்தியைப்போல் குறிகளுரைத்ததுவும்
மின்னிடையாள்வாசலுக்கு விசையனார்போனதுவும்
ஒன்றுமொளியாம லுரைத்தார்கள்தாதியர்கள்
இருவருங்கேட்டார்க ளின்பங்கரைபுரண்டு
சந்தோஷமானார்கள் சரீரமதுபூரித்தார்
அன்னநடைமின்னிடைக்கு அனந்தஞ்சிறைதீர
எத்தனை நாட்சென்றது இளங்கொடிமின்னிடைக்கு
இத்தனை நாளு மிருந்தகுறைதீர
மன்னவனை நன்றாய் மனமுவந்தணையவல்லாள்
கூடியணைந்திடுவாள் குறைகளைத்தீர்த்திடுவாள்
அன்று-குங்குமத்திண்டோளன்குலுங்கநகைநகைத்து
சிவிகையின்மீதேறி தேன்மொழிமார்போகலுற்றார்
மையெழுதாக்கண்ணும் மலர்ச்சொருகாக்கேஷமும்
பாக்குத்தின்னாவாயும் பத்தினியாள்தன்முகமும்
வெற்றிலைதின்னாள் விரும்பாய்விடாமுகமும்
மஞ்சளணுகாத வடிவுடையாள்மார்பழகும்
என்தேவியாயிருந்து இவள்சிறையாவானேன்
இவள்பொன்னனமேனியது புழுதிபடக்காரணமேன்
தங்கத்திருமேனி தழும்புபடக்காரணமேன் [கன்னி
இவள்-வாய்மதத்திலைல்லோ வாழ்விழந்தாள்மாது
என்று-பொங்காரமெல்லாம் அடக்கியொருபுறமாய்
சிங்காரக்கட்டுவச்சி போலேசிரித்துவந்தாள்
மங்கையரைப்பார்த்து உரைப்பாள்மலைக்குறத்தி

மின்னொளியைப் பார்த்துச் சொல்லுங் குறம்

(இன) திருந்தமதிமுகத்தாளே மின்னொளியேகேளும்
உன்-செம்பொன்மாளிகைக்கு சேரவரலாச்சே
தலைப்புறத்தில்கெவுளி நின்று சொல்லுதடிபெண்ணே
மணக்குறியான்வாள்விஜயன் வருவாண்டிபெண்ணே
மணக்குறியான்வாள்விஜயன் வருவாரேயானால்
எனக்குநல்லசோறு இடுவாயடிபெண்ணே
ஆக்கினசோறுகறி பாக்குமெனக்கருள்வாய்
அருகட்டுச்சேலைமுழம் பழந்துணியுந்தருவாய்
அருளுஞ்செல்வமுண்டு உன்மணாளன்வரப்போறான்
அறுமுகவன்றிருவருளா லாளன்வருவாண்டி
பேருமுண்டுபெருமையுண்டு பெண்மயிலேகேளாய்
பெருவயிறன்திருவருளால் புருஷன்வருவாண்டி
இந்திரன்குமாரனவன் சந்திரமுகத்தாண்டி
இந்நேரம்வரப்போறான் இளமயிலேகேளும்
நல்லமருந்துகுளிசமிது நாயன்முடிபெண்ணே
கைமருந்துகடுவுமெத்த கரையுமோடிபெண்ணே
விற்பொருதும்விழியாளே மின்னொளியேகேளாய்
அக்குமணிகொக்குமணி கொள்வாயடிபெண்ணே
கந்தருக்கும்வள்ளியற்கு முகந்தகுறிசொன்ன
ஏத்தகுலசோழவள நாட்டுக்குறத்தியைப்போல்
இச்சைகொள்ளவகையறியேன் ஈஸ்வரனாறிய
வக்காவுங்கொக்காவும் தின்கிறவளல்ல
வம்புபேசிமனைதோறும் போரவளுமல்ல
கைபார்ப்பேன்குறியுரைப்பேன் கடுகிவனம்போவேன்
கறிசோறுதுகிலாடை கடுகிவனப்போலே
மெய்க்குறிகள்நானுரைப்பேன் மின்னிடையேகேளாய்
கைகுழந்தைவுச்சிக்கெண்ணை குத்துளிவார்ப்பார்
இந்தநாட்டில்வாழுகிற குறத்தியல்லபெண்ணே
எப்போதும்இந்திரற்கு கைபார்க்குங்குறத்தி
இந்நாடுயெங்களுக்குப் பொன்னுடுகண்டாய்
என்னாணைஉன்னாணை யென்றவளுமுரைத்தாள்
அல்லியற்கும்துரோபதைக்கு மன்புகுறிசொன்னேன்
அவர்கள்மெச்சியெந்தனுக்கு ஆபரணங்கொடுத்தார்
உச்சிதமாய்குறியுரைத்தேன் மெச்சியவரெனக்கு

அவர்பிறந்தநாளையிலே அழுத்தியதோர்பதக்கம்
ஆபரணந்தான்கொடுத்து அனுப்பினார்பெண்ணே
மின்னிடையாளெந்தனுக்கு மிகவுங்குறியுரைத்து
மிகவுமவர்குறத்தியென்று மிகவெனக்குமுரைத்தார்
நன்றாகயுன்மனைக்கு நான்வரும்போது
நல்முகூர்த்தஞ்சொல்கிறது எண்ணத்தொலையாது
வாசல்பல்லிபளபளென்று நேசத்துடன்சொல்ல
வருவானடியுன்கணவன் வள்ளையம்மையருளால்
குவிமுலையாளேயென் குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்று கூடைமேலடித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
ஏதடிகட்டுவச்சி எந்தநாடுந்தனது
எந்தவூருங்களது எனக்கறியச்சொல்லுமென்றாள்

மலைக்குறத்தி தன் வரலாறு சொன்ன குறம்

(தின) எந்தனது திருநாடு கேட்கிறையோபெண்ணே
ஏத்தமுள்ளயிந்திரனார் ஆளுமந்தநாடு
கொங்குவங்காளமது எங்களிடநாடு
வுங்காளம்சிங்காளம் மராட்டியமெங்கள் நாடு
வாள்விஜயன்பெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே
எங்களிடதிருநாடு கேட்டையோபெண்ணே
மேனகைக்குப்ஊர்வசிக்கும் அதிகமுள்ளபெண்ணே
சந்திரர்கள்சூரியர்களுதிக்குமெங்கள் நாடு
தானதருமப்புரியுந் தவமுள்ளநாடு
அன்னக்கொடி நின்றிசையும் எந்தனிடநாடு
அதிசயமாய்வாழ்கிறதும் எந்தனிடநாடு
அதில்-துரும்பசையத்தேன்சொரியு மெந்தனிடநாடு
கரும்புவிளாசோலைசூழு மெந்தனிடநாடு
விரும்புமுல்லைமணஞ்சூழு மெந்தனிடநாடு
வேலருடன்வள்ளியம்மை வாழுமெங்கள் நாடு
பச்சைமலைபவழமலை எந்தனிடநாடு
பசிகாலமானதே பழங்கூறிவருவோம்
கொச்சிமலைகுடகுமலை எந்தனிடநாடு
குளிர்காலமானதே குறம்பாடிவருவோம்

பஞ்சவர்களாளுவது மெந்தனிட நாடு
பார்த்தனென்றுபேர்கொண்ட குறத்திநான்பெண்ணே
கச்சணியுமுலையாளே கனகரதியாளே
கைத்தலத்தை நீர்காட்டாய் கனத்தகுறிசொல்ல
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவள நகைத்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையேதுசொல்வாள்
திருமாலவர்பொருட்டால் திருமாதோபூமாதோ
நகர்சோதனைக்காக வந்தநறுமுதலோ
கட்டுவச்சிவீற்றிருக்க வட்டமணையிடுங்கள்
பொற்கொடியாள்வீற்றிருக்கப் பூம்பலகைபோடுங்கள்
வட்டமணைபோட்டார் மணிதடுக்குதான்போட்டார்
வாடிமலைக்குறத்தி வட்டமணைமேலே
வள்நாடிகைகாட்ட வனக்குறத்திஉளமகிழ்ந்தாள்
இட்டமுகூர்த்தமது லட்சணமென்றுசொல்லி
இட்டமணைமேலே வந்திருந்தாள்பூங்குறத்தி
ஒருகால்மடித்தாளே ஒருகால்புறத்தணித்தாள்
கூடைஒருபக்கம்வைத்து கொம்பனைதானிருந்தாள்
கூறுவாள்கொம்பினது மரத்தின்கிளிபோலே

குறத்தி மின்னொளியாளுக்கு
கைபார்க்கும் குறம்

தின-கனத்ததொருவஸ்தனத்தாளே கைதலத்தைகாட்டு
உன்கணவனிப்போவருங்குறியைக்கண்டுநான்சொல்ல
பங்கயஞ்சீர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையிடமுகம்நோக்கிப் பலகாலுஞ்சிரித்தாள்
இடக்கரத்தைப்பிடித்து இளங்கொடியேயென்பாள்
இளங்கொடிகையதனைக் கண்ணிலொத்திக்கொள்வாள்
கண்மலரோபெண்மலரோ கைத்தலங்களென்பாள்
மங்கிலியம்வரம்பெறுவாய் மைந்தர்களைப்பெறுவாய்
மனமகிழகணவனிப்போ வருவாண்டிபெண்ணே
உண்மையெந்தன்குறிகளது உண்மையிதுபெண்ணே
வண்மையுள்ளசோழனிட மனுநீதியாலே

மதியாமலரசர்களும் மன்னன்மகளாரே
வாள்விஜயன்மேலாசை தோணுதடிவுனக்கு
கூரானவிழியாளே கொம்பனேயேகேளாய்
கூடுதற்குஆசைமனந் தோணுதடியுனக்கு
பார்த்தேண்டிவுண்மையி லட்சணங்களிப்போ
புவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே
தகதகெனகைவளையல் கைபிடிக்கநானும்
தயவுள்ளபுருஷனிப்போ வருவாண்டிபெண்ணே
மயலாகிமனதுருகி வடிவுள்ளபெண்ணே
நீர்-செயலாகிசெய்தகுறை சொல்லுகின்றேன்கேளாய்
சங்கமரைப்பூசைசெய்யும் வேளைவந்தாரென்று-
தனஞ்செயனார்வருகிறதை தள்ளிவிட்டாய்பெண்ணே
ஈஸ்வரனைப்பூசைசெய்யும் வேளைவந்தாரென்று
எண்ணுமல்விஜயனைத்தான் தள்ளிவிட்டாய்பெண்ணே
அன்றுமுதல்நெடுநாளாய் வாராதவிஜயன்
அறுமுகவன்திருவருளால் வருவானேடிபெண்ணே
என்றவளைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவளநகைத்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
முத்தணிந்தபல்லோன் முறுக்கணிந்தசெவ்வாயோன்
உந்திசுழியழகன் உரோமத்தின்பேரழகன்
கூரியமூக்கழகன் குளிர்ந்தமுகத்தழகன்
தொந்தமிடு ஆலிலைபோல் துய்யவயிரழகும்
நடையும்நடையழகன் நடைக்கிசைந்தஇடையழகன்
காய்க்கும்பிராயமடி கன்னிகட்டுங்காலமடி
பூக்கும்பிராயமடி பிஞ்சுவிடுங்காலமடி
கொஞ்சும்வயதலவோ கொழுந்தெல்லாம்பிஞ்சலவோ
சுவரிலெழுதலாஞ் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோல்பார்க்கலாம்
இத்தனையழகான இளங்குறத்திகட்டுவச்சி
சித்திராதிபோலே தெருவீதிவந்தாயே
கொண்டகுறவனுன்னைக் குறிசொல்லவிட்டானே
மதிகெட்டுவிட்டானே பங்கையரேயுன்கணவன்
விட்டுப்பிரிந்தானே வெறியனேயுன்கணவன்

கண்டால்விடுவாரோ காண்டீபங்கொண்டவரும்
அடங்காதழகையெல்லாம் கண்டாலழையாரோ
மானேயுனேக்கண்டால் மற்ஞெருதேவியரை
மற்றுமொருதேவியரை நத்தியேபோவாரோ
தேன்மொழிமாதர்களேத் திருஷ்டித்துப்போவாரோ
என்-வாணுளேவாங்குகைக்கு வந்தாய்மலேக்குறத்தி
என்றதுசொல்லி உரைத்தாரிளங்கொடியாள்
மாலேக்குயிலாள் மலேக்குறத்திகூறுவாள்

குறம்

(தின) எந்தனிடகுவளமதி கெட்டவனேயென்ருய்
எப்படியுனக்குக்குறி சொல்வேண்டிநன்ருய்
எங்களிடசாதிகளி லேர்வையிதுதாண்டி
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
சந்திரனேடொத்ததொரு திருமுகத்தினழகன்
தாளம்போலொத்ததொரு தவளம்பூவழகன்
திருக்கண்களொளியழகன் செங்கனிவாய்சிகப்பன்
இத்தனேக்குமழகான இளங்கொடியேயுன்னே
இதுநெடுநாளுன்கணவன் ஏன்பிரிந்தான்சொல்வாய்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
இளங்கொடியேயுன்கணவர் ஏன்பிரிந்தார்சொல்வாய்
உங்களிடகுலந்தனிலே ஏர்வையிதுதானே
உன்னேப்போல்வாழாதார் உலகத்திலுண்டோ
இக்காலஞ்சிறையிருக்க மிக்கவமைதன்னில்
இளங்கொடியேவாழாம லிருந்ததென்னசொல்வாய்
எங்களிடகுறக்குலத்தில் ஏர்வையல்லகண்டாய்
இதனுலேபழுதுமில்லே கைபார்க்கநீவா
பங்கயஞ்சீர்முகத்தாளே கைதாராயென்று
பைங்கிளியாள்கையைக் கண்ணிலொத்திக்கொள்வாள்
அங்கயஞ்சீர்கரத்தைக் கண்ணிலொத்திக்கொள்வாள்
அவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே
மங்கிலியம்வரம்பெறுவாய் மைந்தர்களேப்பெறுவாய்
வள்ளியம்மைதன்னுணே மயிலவனுராணே
என்றவளேத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனேப்போலே இயம்பியவள்சிரித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையே துசொல்வாள்
சிறையிருந்தோமானாலும் தினம்வாழ்ந்தோமானாலும்
வாசற்படியக்கோலம் மற்றோர்மனைபுக்கோம்
வீதிதனிலேதிரியோம் வேல்புருவங்கண்ணாளே
நீ-அடங்காதழகுமாய் ஆசைப்பசுங்கிளியே
வேசையர்கள்போலாக வீதிப்புறப்பட்டாய்
கண்டால்விடுவாரோ காண்டீபங்கொண்டவரும்
பார்த்தால்விடுவாரோ பார்த்தன்வடிவுடையோன்
மாலைக்குறத்தி மலைக்குறத்தியே துசொல்வாள்

குறம்

(தின) விசையரவர்கண்டாலே விட்டுவிடாரென்றாய்
மின்னிடை நீயானாலே நாவெழுந்துசொன்னாய்
சிலைவிசையன் நீதிமிகு நெறிமுறைதவறான்
திக்குஜெயங்கொண்டவனார் சேவகனார்தமக்கு
மலைபோலுந்தெய்வகன்னி ஊர்வசியாள்ரம்பை
மலைமாதுபோலேவடி வுடையகுணமாது
மயல்கொண்டுஊர்வசியாள்மயங்கியேதான்விழுந்தாள்
மகிழ்பார்த்தன்மாதாவே போமென்றுவிட்டான்
அவன்வடிவுக்கொப்பான அரிவையர்களுண்டோ
ஆனாலுமருச்சுனனார் அவர் நீதிதவரார்
தன்தாரமல்லாமல் பிறர்தாரம்விரும்பார்
குறவரையன்மகளேயுன் மதத்தாலே நீயும்
கூசாமல்பயமின்றி ஊதிவைத்தாயவரை
நிலமையோடு நீயவரை வம்பனென்றுகுறிக்க
நிஷ்டூரப்பாவிகண்டாய் நீலிகண்டாய் நீயும்
கணவனை வம்பனென்பாருண்டோயிவ்வுலகில்
கரியமால்மைத்துனனா ரென்றுமறியாயோ
சின்னமலர்குழலாளே மின்னொளியேகேளும்
செம்பொனதுமாளிகைக்கு செபமாகவாச்சே
வலப்புறத்தில்கெவுளி நின்று சொல்லிற்றடிபெண்ணே
மனைக்குறியவாள்விசையன் வரப்போறான்பெண்ணே
தங்கத்திருமார்புதனில் ஆபரணமேந்தி
சரசமுடனுனையணைய வருவாண்டிபெண்ணே

எத்தமுள்ளவிசயனு ரிக்கோவில்வந்தால்
எனக்குநல்லகறிசோறு இடுவாயோடிபெண்ணே
என்றவளைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

மின்னொளியாள் அருச்சுனன் செய்த குற்றத்தை குறத்திக்குச் சொல்லல்—வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
கொன்றைக்குறத்தியரே கொம்பனையே நீர்கேளும்
நான்-வம்பென்றசொல்லுகளும் மிகவும்பெரிதாச்சே
அவர்-வம்புகளுஞ்சேஷ்டைகளும்யாருங்கண்டதில்லை
நான்-நித்தஞ்சிவனையெண்ணி நீதியுடன்பூசைசெய்ய
ஒன்றையொருநாளி லுன்பாதஞ்சீர்மண்டபத்தில்
சிவனை நினைந்துநான் சிவபூசைசெய்கையிலே
அரனை நினைந்துநான் குருபூசைசெய்கையிலே
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிந்தையில்தானினைந்து சிவனை நிலைநிறுத்தி
பூசைசெய்யும்வேளையிலே போர்விசயர்வந்துவிட்டார்
அல்வளவில்பார்த்தன் அவர்முடுகியோடிவந்து
வேளையிதுகூடுகைக்கு மின்னிடையேயென்பதுவும்
நாளைவருமோயிளமை நாயகியேயென்பதுவும்
கண்ணேவிழியாயோ கட்டழகியென்பதுவும்
ஒன்றாகப்புல்கி யுறவணைவோமென்பதுவும்
சக்கட்டம்பண்ணுறதும் சற்றேநகைக்கிறதும்
கைக்கொட்டியாடி நகைத்தாண்டிகாவலனும்
கோபித்துக்கண்சிவந்து கொற்றவனைப்பார்த்தேனே
சீரியகோபமதாய் விஜயனைப்பார்த்துவிட்டேன்
அவர்-பல்லழகும்பாவனையும் பார்த்துமயங்கினேனே
மீசைமுறுக்கழகும் விழியில்கறுப்பழகும்
கச்சுகட்டுவுள்மருங்கும் கத்திச்சுருப்பழகும்
வில்லழகும்கண்டுநான் விழுந்துக்கொடுத்தேண்டி
சிவனை மறந்தேன் சிவபூசைநான்மறந்தேன்
வழிப்படுமைந்தெழுத்தை மாதேமறந்துவிட்டேன்
செபிக்கும்செபமறந்தேன் சிந்தையில்மெய்மறந்தேன்
தேன்மொழிமாதேநான் சிவனைமறந்துவிட்டேன்
ஆனதால்வம்பனென்றும் உரைத்தேன்விருதோசை

எனக்குமேவேண்டாத வம்பனென்றுஊதிவைத்தேன்
அன்னமேகட்டுவச்சி யார்மேலேநோவதடி
என்னைப்போல்பெண்பிறந்தாய் இவ்வார்த்தைகூறடி நீ
எனக்குப்புருஷனுண்டோ உத்தமியேசொல்லடி நீ

மின்னொளிக்குப் புத்தி சொன்ன குறம்

(தின) அன்னமேமின்னிடையே ஆரணங்கு நீகேளாய்
அறிந்தபடிசொல்கிறண்டி நெறிமுறைமையாக
வனத்துமலரெடுத்தாலும் அரனைத்தொழுதாலும்
மகிழவொருநோன்பதனை நோர்த்தாலுமாதே
நிட்டையோடிருந்தாலும் நீதிவான்ஆனாலும்
நெறியானசிவபூசை நீங்கள்செய்தாலும்
கணவனவர்தானாக வலியவந்தழைத்தாலும்
இதனையிவ்வுலகிலுள்ளாரெல்லோர்க்குஞ்சொல்வேன்
ஏழையாயினுங்கணவன் இருந்தானேயாகில்
பின்னையொருதெய்வமென்ன ஒருசந்ததிதானென்ன
பிதிர்கணங்கள்கோவில்கள் புகுவதுவதுதானென்ன
எல்லாமுநீரேயென் றியங்கியேதொழுதால்
எல்லாம்பணிசெய்தவரோ தேவரறியாரோ
நல்லநாளுமேயென்பார் சீதேவியரையும்
நன்மைமிகுந்தவளு மொருபத்தினியுமாவார்
சல்லாபசம்பத்து மைந்தர்களுமுண்டாம்
தையலரே நீருட்டமி சாபங்கள்பலிக்கும்
பொல்லாங்குபோக்கடிக்கும் இனிமேலுஞ்சொர்க்கம்
பூமியிலேயுண்டுகண்டாய் பொய்யல்லடிமாதே
விஸ்தாரம்பேசிடுவார் கணவனை நிந்திப்பார்
வெறியனுக்குமனையாட்டி யாகினேனென்பார்கள்
சற்றேயசட்டனாய் வீட்டுக்குள்ளேயிருந்தால்
தங்களிடஅதிஷ்டமென்று தாமுமறியாரே
பந்தாவைநொந்தவர்கள் பித்தாகச்சமைவார்
பரமனிடதன்னருளால் மயிலவனாருளால்
சத்தியங்காணிவ்வார்த்தை யுனக்குமட்டுமல்ல[ல்வேன்
இத்தரணியில்வாழ்பெண்களுக்குமனைவோர்க்குஞ்சொ
அன்னமெனுமின்னிடையே ஆரணங்கேகேளாய்
அறிந்தபடிசொல்லுகிறே னெறிமுறைமையாக
வானஸ்தனந்தான்குழையு மருவியுன்னையணைய

டன்னர்வரும்போதாச்சு மின்னிடையேகேளாய்
மகுடமுடிமன்னரிப்போ வருங்குறையைச்சொல்வேன்
விகடமொன்றும்வாராமல் விநாயகரைத்தொழுவேன்
பகடியொன்றுஞ்செய்யாத பாவையர்களரசே
கபடில்லைமுறத்தில்முத்து கடுகவிசைந்திடுவோம்
முத்தாலேமிகப்பரப்பி குறியுரைப்பேன்பெண்ணே
வித்தானகணவனிப்போ விரைந்தோடிவருவான்
என்றவளைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

மின்னொளியாள் புருஷன் வரங்கேட்டது வேறு

விளங்கியசீர்மாதவத்துமின்னிடையுமேதுசொல்வாள்
எண்ணறவோதி எழுத்தறப்படித்தாலும்
பெண்மதியாலேயல்லோ பிழைமோசமாகிறது
மன்னன்வருங்குறியைச் சொல்வாய்மலைக்குறத்தி
விஜயன்வருங்குறியைச் சொல்வாய்நீமெல்லியரே
கூடையில்முத்தளந்து கொண்டுவந்துமுன்வைத்தாள்

குறத்தி அருச்சுனன் வருகிறதாய்ச் சொன்ன குறம்

(தின) கனகக்கும்பமுலையாளே கன்னியரேகேளாய்
கணவனிப்போவருங்குறியைக் கண்டுநான்சொல்ல
கருணைவல்லிதாயேநீ உண்மைசொல்லவேணும்
கந்தரேயெந்தனுக்கு முன்னடக்கவேணும்
முத்துகளைமிகப்பரப்பி விழியாலேசிமிட்டி
மெத்தமெள்ளமின்னிடைக்குக் காமவிடாய்தீர
அருச்சுனனுரிவளைவந்து அணைவதுமெய்யானல்
நச்சுமலைகொச்சியம்மை நடக்குங்குறிசொல்லு
குற்றமறயெந்தனுக்குச் சற்றேகுறிசொல்லு
என்றவளைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவளநகைத்தாள்

வேறு

வாராய்நீமின்னிடையே வார்த்தையொன்றுநீகேளும்
கூடையிலேமுத்தளந்து கொண்டுவாமின்னிடையே
நினைத்தகுறிவோடவில்லை நேரிழையேயெந்தனுக்கு
கண்டுகுறிசொல்லிடுவேன் கடுகமுத்தெடுத்துவாராய்

என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாள்மின்னிடையும்
மூத்துமுத்தென்கிருய் நத்தியேகேட்கிருய்
மெத்தாசைப்படுகிருய் வீணியடிநீகுறத்தி
நச்சுநச்சென்கிருய் நாயகமேகட்டுவச்சி
என்று-முறத்தில்முத்தளந்து முன்னல்வைத்தார்கள்
சதிராகமிகமெழுகி சாணிபிள்ளையாரும்வைத்து
அறுகுபுஷ்பஞ்சூட்டி அட்சதைகாப்புமிட்டு
தூபதீபந்தான்கொடுத்துத் தொழுதாள்குறத்தியவள்

குறம்

(இன) குறத்திமுத்தைபரப்பி குறியிதுவேயென்பாள்
கோலவிழியாள்மயக்கி மிகநோக்கிநகைப்பாள்
ஐங்கரனேமுக்கணனே ஆனைமுகத்தோனே
அருச்சுனனரிக்கோயில் வருவாரோசொல்லும்
மனையிடத்துதேவதைகள் மகிழுமஞ்சளழகி
மடிச்சீலைக்காரிமுதல் வந்துநிற்கவேணும்
பொங்கள்மிகநயினரும் பொற்கொடியேதெய்வம்
பூவாடைக்காரிமுதல் வந்துநிற்கவேணும்
மண்ணுப்பிடாரிநீ மழுவேந்துங்குறத்தி
வடவாசல்செல்லியம்மை வந்தருளவேணும்
ஆகாயதேவதைக ளையன்பிடாரியரும்
அலைகடல்கன்னிமுதல் வந்தருளவேணும்
ஏழுகடற்கன்னிமுதல்·இளையதஞ்சிமாரும்
இன்பமுள்ளகுறியெனக்கு தந்தருளவேணும்
மலையாளகொச்சியம்மை உந்தனருள்வேண்டும்
வாள்விஜயனரிக்கோயில் வருவாரோசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலேசிலுத்துக்கொள்ளுதுடம்பு
தேகமெல்லாம்மயிர்க்கூச்ச லிடுகிறதேபெண்ணே
வாடைமணம்வீசுதடி ஐவர்வந்தாப்போலே
மாய்க்குதேஎன்னுடம்பைசன்னதங்கொண்டாற்போல்
கூடைகொண்டுகவியுதடி கோமளமேபெண்ணே
கோலவிழிதுடிக்குதடி குறிகளிப்போகேளாய்
மங்கையரேகள்ளியிப்போ சொன்னதினலே
வரவேணும்பார்த்தனிப்போ வள்ளியம்மையருளால்
இன்னமரைநாழிகையில் அருச்சுனமகாராசன்
வண்ணமுடனரிக்கோயில் வரப்போருன்பெண்ணே

கொச்சக்குறத்தியிட குறிகளும்பொய்யாது
கொச்சியம்மைஆணையென்று கூடையின்மேலடித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையேதுசொல்வாள்
விசையரிதோவீதிவந்தா னென்றீரேமெல்லியரே
விஜயர்வந்தபிற்பாடு மெல்லியரேபோய்விடுவேன்
அந்தப்புறத்திலே ஆரணங்கும்போய்நுழைந்தாள்
உள்வாசல்வந்தமர்ந்தாள் பேடைமலர்க்கண்ணும்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தங்கேதுசொல்வாள்
இக்கோலமாயிருந்தால் இங்கேவாரான்பார்த்தனவன்
மெக்காலமாகிநீர் மஞ்சனமாடுமென்றாள்
மஞ்சனமாடாதே மங்கையரே நீயிருந்தால்
சென்மத்திலும்வாராண்டி தேர்விஜயனிக்கோயில்

மின்னொளிக்கு குறத்தி ஸ்நானஞ்செய்து வைத்தது

எண்ணெகொண்டுவாருமென ஏந்திழையாள்கட்டுவச்சி
அருகிருந்ததாதியவள் திடுக்கெனவேதானெழுந்து
பூவெழுதிசித்திரித்துப் பொன்படலேதானெடுத்து
பூவாசஎண்ணைதனை பொற்கொடிமார்கொண்டுவந்தார்
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்திதானெழுந்து
மின்னிடைபின்னாலே மெல்லியரும்வந்துநின்றாள்
பன்னிரண்டாண்டுமுன்னே பின்னிவிட்டகேடயத்தை
மாணிக்கச்சடைவிழ்த்து மயிரைவிரித்துவிட்டாள்
நீக்கிவகிர்ந்தாளே நெறிமுறையின்படியே
பூவரசஎண்ணெயை எலுமிச்சஞ்சார்வார்த்து
ஆருய்வகிர்ந்தாளே ஆர்க்கத்தலைகீறி
குங்குமவார்குழலை கீல்கொண்டைபோட்டாளாம்
எண்ணெயிடும்போதையிலே இளவிஜயனருச்சுனனார்
தாதிகளறியவென்று தன்னொளியைக்காட்டினார்
பல்லொளியைக்காட்டினார் பார்த்தார்கள்தாதியர்கள்
மின்னொளியைப்போல பல்லொளியைக்கண்டார்கள்
பரசுவீணைபார்த்தலவோ பயந்தார்கள்தோழியர்கள்
கானக்குறத்தியல்ல காண்டீபனருச்சுனர்காண்
குறத்தியென்றுநாமிருந்தோம் கோதண்டபாணியவர்
வண்ணகுறத்தியைபோல் வடிவுகொண்டுதந்தாரே
பெருமையாய்தானிருந்தால் தெண்டனைநேருமென்று

மஞ்சனசாலையமைத்து வைத்தார்கள் தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து
செம்பொன்னின் தட்டிலே அரைப்பரைத்துவைத்தார்
சீக்காயும்நெல்லி சிறுபருப்புகஸ்தூரி [கள்
பச்சிலைமஞ்சள் பசுமஞ்சளரைத்துவைத்தார்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து
தட்டிவுதயமே தானிணையில் தும்படித்து
எங்குமலங்கரித்துச் சந்தன நீர்தெளித்து
கண்மூன்றுடைய கனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைபிரித்திட்டு மேலேயணைகோலி
காம்பரிந்தயைங்கலப்பூ கட்டிலின்மேல்சொரிந்து
கால்கோட்டைகைகோட்டை யிட்டந்தகன்னியரும்
தங்கத்தலைகாணி சகலாத்துத்தழுவணையும்
சாரத்தலைகாணித் தழுவணையும்போட்டார்கள்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான் குச்சுவிட்டு
மல்லிகைமுல்லைகளை வகைவகையாய்த்தூக்கேற்றி
பஞ்சவர்ணக்கிளியைப் பலதிசையும்கட்டினார்கள்
அத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரியும் கரைத்துத்தெளித்தார்கள் [தார்
சாம்பிராணிப்புகைபோட்டார் சந்தனப்புகைகொடுத்
பஞ்சணையைச்சேர்ந்தார் பாங்கியர்களானவர்கள்
மற்றுஞ்சிலதாதி மங்கையர்களோடிவந்தார்
மஞ்சனச்சாலை சமைந்ததென்றுதெண்டனிட்டார்
அப்போதுகுறத்தியவள் அலங்காரமாயெழுந்து
மஞ்சனச்சாலைக்கு வாருமென்றாள் மின்னிடையை
ஸ்தானங்களாட்டிவைக்க சற்றேயெழுந்திரென்றாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
குறத்தியுடைமையாலே குளிர்த்துமுழுகுவேனோ
அத்தண்டதாதியர்களனைவோரும்யோசனையாய்
அவரவர் தம்பணிக்கு அனைவோரும்நடந்தார்
சிறிதுபேர் தாதியர்கள் சீக்கிரமாய்நடந்து

தாதிகள் அவாளவாள் வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்தது

கோலமடப்பள்ளியைக் குச்சிட்டுத்தான் திறந்து
எங்குமலங்கரித்துச் சந்தன நீர்தெளித்து

அடுப்புமெழுகுவார் அட்சதைக்காப்பிடுவார்
பானைகழுவிப் பனிநீருலேசாய்ப்பார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
போதச்சமைத்தார்கள் பொற்கொடிமார்தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மங்கையர்களோடிவந்து
வெள்ளிக்கிடாரத்தில் வேண்டியநீர்வார்த்து
பாண்டந்தொடலாமோ பங்கயஞ்சீர்கண்ணே
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
சற்றேயிருகுறத்தி ஸ்நானஞ்செய்துவாறேனென்றாள்
வண்ணக்குறத்தி மலேக்குறத்தியேதுசொல்வாள்
அல்லியிற்பிறந்தாட்கும் அனலிற்பிறந்தாட்கும்
இருவருக்குகைபார்த்து ஸ்நானங்களாட்டிவைத்தேன்
தாதிமார்தோழிமார் தையல்மாரில்லாமல்
தனியாகநானிருந்து ஸ்தானஞ்செய்துவைத்தேனே
அவர்களேப்பார்க்கிலும் ஆரணங்குநீபெரிதோ
விஜயன்வருகிறதை மெல்லியரேபார்க்கிறேன்
ஆளன்வருகிறதை அறிகிறேண்டிமின்னிடையே
கூடையெடுத்தவளும் எழுந்தாளேகொம்பனேயாள்
வாடிகுறத்தி நீ மனதுசலியாதே
மனதுக்கிசைந்தபடி செய்வாய்நீவாடியென்று
மஞ்சனச்சாலேயிலே வந்தாரிருவருமாய்
அத்தண்டதாதியரும் அப்புறத்திற்போனூர்கள்
அடியார்கள்போனபின்பு அக்குறத்திமாதருமே
மஞ்சனச்சாலே மணிக்கதவைத்தாள்போட்டாள்
பட்டாடைவாங்கியே பலபணியுந்தான்கழட்டி
சிற்றாடைவாங்கியே சிறுபறையுந்தான்கழற்றி
நாற்காலின்மேலாக நாயகியைத்தானிறுத்தி
சீக்காயுநெல்லி சிறுபயருந்தானெடுத்து
ஆனந்தமாரிக்கு அரப்பிட்டுநீராட்டி
பச்சிலேமஞ்சள் பசுமஞ்சள்தானெடுத்து
கொம்பனேயாள்முகத்திலேயுங் குங்குமமாரிலேயும்
மேல்விழுத்துமேல்விழுந்து மெல்லியற்குப்பூசினாள்
அப்போதுமின்னிடையுமாரணங்குமேதுசொல்வாள்
ஏதடிகுறத்தி நீ யென்மேல்விழுகிறாய்
மயங்குதலேயாவானேன் பாதேவிழுவானேன்
அல்லகாண்பெண்ணே யாரணங்கே நீகேளாய்

அல்லியவள்கொலுவில் ஆண்டொளிவைப்பார்த்திருந்
நேற்றிரவு நித்திரை இல்லாததன்மையினால் [தேன்
கண்ணுறக்குதுகாண் கட்டழகியெந்தனுக்கு
நித்திரைவருகுதடி நினைவைக்குலைக்குதென்றாள்
ஸ்நானங்களாட்டிவைத்தார் தாமக்கருங்குழலை
நீர்காட்டிவூதியே நிலங்கிள்ளிக்காப்புமிட்டு
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்த துகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
அரண்மனைக்குள்ளாக அழைத்துவந்தாளாரணங்கு
வட்டமனைமேலே மாதரைத்தானிருத்தி

குறத்தி மின்னொளியாட்கு ஆபரணமளித்தது

சம்பங்கியெண்ணைகொண்டு தடவிச்சிணுக்கறுத்து
வாரிமுடித்து மாணிக்கக்கொண்டையிட்டாள்
சீவிமுடித்து சிமில்போலகொண்டையிட்டாள்
ஒவ்வொருமயிருக்கும் ஒவ்வொருபூவிதழாம்
பொன்னிதழும்பூவிதழும் பூட்டியலங்கரித்து
கொண்டைக்குதண்டைகளும் கொண்டைதாங்கிமாலை
சந்திரபிறைசூரியபிறை தரித்தாள்நெற்றியிலே [களும்
நெற்றியிற்சுட்டுகட்டி நேர்விழைக்குமையெழுதி
நடுநெற்றியில்நாமமிட்டு நற்சாந்துபொட்டுமிட்டு
ஒட்டுக்கடுக்கனும் இணைசேர்ந்தநர்கடகம்
அன்னகொப்புபின்னைவாளி அழகுமிகுஞ்சவுளி
பச்சைக்கல்முருகுப் பதித்திருந்தவாளிகளும்
நாய்க்கரைதன்னில் நடுக்கழுத்தில்பூஷணமும்
ஒற்றைச்சரடுகளும் ஒருபுறமும்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளும் இருபுறமும்பொன்சரிகை
முத்துச்சரப்பளியும் மோகனமாலைகளும்
சந்திராகாரசரப்பளியாம் தாயித்தைப்பூஷணமும்
உத்திரசஞ்சமது உத்தமற்குபோடலுற்றாள்
தோள்வாங்கிக்கைவாங்கித் தேன்மொழிக்குச்சாற்றி
கடகஞ்சரிபவழம் கைநிறைந்தமோதிரங்கள்
மூக்குத்திசிந்தாக்கு முன்கைமுகதாரி
ஐந்துவிரலுக்கும் அழகானமோதிரமும்
பத்துவிரலுக்கும் பதிந்தகணையாழி
அரைக்கிசைந்தஒட்டியாணம் அழகுபெறச்சாற்றினாள்

தண்டைகொலுசுஞ் சதங்கையும்பாடகமும்
காலாழிகல்லணையும் பீலாழிபில்லணையும்
தேர்ப்பீலிமீன்பீலி தரித்தாளாந்தேன்மொழிக்கு
அஷ்டாபரணம் அலங்காரஞ்செய்தாளே
சரிகைப்புடவையைத் தரித்தாளேமங்கையற்கு
முத்துரவிக்கை முருகுழலிக்குத்தரித்தாள்
கண்ணாடிகொண்டுவாடி கட்டழகிதாதியென்ருள்
கண்ணாடிகொண்டுவந்து கட்டழகிகைகொடுத்தாள்
கண்ணாடிதானெடுத்து கட்டழகிகாட்டவந்தாய்
மின்னொளியாள்தானெழுந்து வெம்பிமிகத்ததும்பி
அன்றுமுதலிவ்வரையிலாரணங்குபார்த்ததில்லை
காண்டீபனுந்தானுமாய் கண்ணாடிபார்த்ததில்லை
அவ்வசனங்கேட்டு அருங்குறத்தியேதுசொல்வாள்
மன்னவனுருன்புருடன் வருகிருர்காண் மாளிகைக்குள்
சுபத்திரையாள்வீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
நாககன்னிவீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
போகவதிவீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
துரோபதையாள்வீதிலிட்டு வாருண்டிமின்னொளியே
அல்லியுடவீடுவிட்டு வாருண்டிமின்னொளியே
பவளக்கொடிமாது பத்தினியாள்வீடுவிட்டு
வாராண்டிமின்னொளியே மன்னனரை நாழிகையில்
அரனாரைப்பூசைபண்ணி அமுதுபொசித்தீரானல்
கால்நாழிகைக்குள்ளே காளையருந்தான்வருவான்
என்மேலேஆணையாக வருவான்காண் மின்னொளிபே
என்றுசொல்லிமின்னிடை எழுந்தங்கேதுசொல்வாள்
அத்தனைபோற்றியென்று அணைத்துமேதானிருந்து
முந்தமுறைசெய்யவல்ல அந்தணர்களோடிவந்து

மின்னொளி பூசை செய்கிறது

செம்பொன்குடத்தில் திருமஞ்சனங்கொண்டுவந்தான்
செபமதுதிறந்து சிவனாரைப்பூசைபண்ணி
எண்ணெயபிஷேகம் ஏந்திழையாள்தான்செய்து
பாலாலபிஷேகம் பத்தினியாள்தான்செய்து
பொன்னல்மலரெடுத்து பித்தரையும்பூசைபண்ணி
சந்தனவாசனையைச் சாத்தினாள்தையலரும்
தட்டிலேபோசனமுந் தாளியிலேபால்பழமும்

அரனார்சிவபூஜை ஆரணங்குதான்முடித்தாள்
அறிவுநடைநாயகற்கு ஆகாரந்தான்கொடுத்து
சிவனாரைப்பூசைபண்ணி செபத்தினையுள்ளடக்கி
அரனாரமர்ந்தபெட்டி ஆரணங்குதான்பூட்டி
சுந்தரமுடன்மின்னொளியுஞ் செவியிலேபூச்சொருகி

மின்னொளியுங் குறத்தியும் போசன முண்ணுதல்

அமுதுண்ணும்மண்டபத்தி லாரணங்குசேர்ந்தாள்
போசனங்கொண்டுவா பொற்கொடியேயென்றாள்
தாதிமாரோடியே தளிகையதுகொண்டுவந்தார்
தையல்குறத்தியற்குத் தலைவாழையிலைபோட்டு
மின்னொளியால்முன்னாலே முக்காலியிட்டார்கள்
பொற்கலத்தைமுன்னேவைத்து போசனம்பாலித்தார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நல்லபொரிக்கறிகள் இராஜாக்கள்போசனமும்
பொரித்தபொரிக்கறியும் இராஜாக்கள்போசனமும்
பச்சென்றகீரையும் பவழம்போல்நற்கறியும்
அடவியில்தொவையல்களும் அழகானபச்சடியும்
துவையல்குழம்புகளும் சீராய்ப்படைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்து போசனமுண்ணுமென்றார்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேதுசொல்வாள்
ஒக்கவேயுண்பதற்குப் பொருந்தாதேவுத்தமியே
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொல்வா
குறமாதுடனாகக் கூடவேவுண்பாரோ [ள்
ஏசாரோஎன்னையிந்த இனத்திலுள்ளபெண்களெல்
சோரவளநங்கையாள் சுபத்திரைகேட்டாக்கால்[லாம்
தூற்றியேகாற்றில்வைத்துச் செல்வார்பலருடனே
என்னுடைத்தகுலமெல்லாம் இழிகுலத்தில்தள்ளிடுவார்
சற்றுமதியார்கள் தரணியிலுள்ளவர்கள்
என்னைகட்டுவச்சி யென்பேரில்தயவுவைத்து
உனக்குவந்தபோசனத்தை உண்ணடிமாதேயென்றாள்
பார்த்தனெனுங்கட்டுவச்சி பைங்கொடிஏதுரைப்பாள்
அல்லிக்கும்துரோபதைக்கும் அன்பாய்குறியுரைத்து
இன்பக்குறியுரைத்து இருவருமுண்ணலையோ
அவர்களைப்பார்க்கிலும் அதிகமாயுன்சாதி
விஜயன்வருகிறதை மெல்லியரேபார்ப்போமடி

அருச்சுனன்வருகிறதை அறிவோமடிமின்னொளியே
நீ-வாழ்கிறதைப்பார்ப்போமடி மாதுமின்னிடையே
கூடவுண்டாலல்லாது கொம்பனையேநான்போறேன்
என்று-கூடையெடுத்து கொம்பனையாள் தானெழுந்து
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுமேதுரைப்பாள்
உன்னைவெறுக்கக் கணக்கில்லைவுத்தமியே
பார்த்தனவருச்சுனனார் பண்ணிவைத்ததோஷமிது
கொண்டவற்கெளிதானால் கண்டவற்கெளிதாகும்
எவரைநாடிப்போவேனடி என்றலைவிதிப்படிகாண்
பார்த்தனெனைத்தள்ளிவைத்தபடியல்லோகுறத்தியரே
உனக்குமெளிதாச்சோ யுகமுடியுங்காலமாமோ

மின்னொளியும் குறத்தியும் ஒருகலத்திலுண்டது

கூடவேயுண்பதற்கு கொம்பனையேவாருமென்றாள்
தலையிலெழுத்தையடி தள்ளிவைக்கக்கூடாது
ஒக்கவேவுண்டிடுவோம் உத்தமியேவாருமென்றாள்
அப்போதுகுறத்தியவ ளதிகப்பிரியமுடன்
சந்தோஷமாகவந்தாள் தாமக்குழலாளும்
அமுதுண் ணுமண்டபத்தில்இருவருமாய்ப்போய்புகுந் [தார்
ஒருகலத்தில்போசனங்க ளுண்டாரிருவருமாய்
கூட்டிப்பிசைந்துக் குறத்தியருமூட்டினாள்
பாதியடிசில் பகர்ந்துண்டாள்கட்டுவச்சி
போசனமுண்டு பொடியிட்டுகைதிமிறி
காலோடுகையும் கனிவாயுஞ்சுத்திசெய்து
வைத்தமெரிவடியைத் தொட்டுநடந்தசைந்து
வட்டமணைமேலே வந்தமர்ந்தாரிருவருமாய் [தாள்
அடைக்காயும்வெற்றிலையும் அருந்ததிமுன்னேவைத்
வாசமிலையெடுத்து மலைக்குறத்தியற்களித்தாள்
கட்டுவச்சிவாங்கியே மண்ணோடேதானணைந்தாள்
கம்மாறுவெற்றிலையும் களிப்புள்ளதுவர்பாக்கும்
இந்தாருமென்று இளங்குறத்திதான்கொடுத்தாள்
மன்னனருச்சுனனார் வாள்விஜயனென்கணவர்
வந்தாலொழிய மலைக்குறத்திநாயகமே
அங்கேயிருந்து அடைக்காய்கள் தின்னுவது
கட்டுவச்சிநாயகமே அடைக்காய்கள் நான்வேண்டேன்

பார்த்திபரில்லாமல் பரிமளங்கள் நான் தீண்டேன்
என்னுணைகட்டுவச்சி எந்தனுக்குவேண்டாமென்ருள்
என்றுமவள்சொல்ல இவளுரைப்பாள்கட்டுவச்சி
மன்னரிதோவாரார் வாழ்வுனக்குண்டாச்சு
அறுமுகவர்தன்னுணை அம்மைவள்ளிதன்னுணை
அருச்சுனருன்கணவன் அரைநொடியில்வாருன்காண்
பள்ளியறைக்குப் பைங்கிளியேபோமென்ருர்
மின்னொளியுங்கட்டுவச்சியு மிகவெழுந்துகைபிடித்து
பள்ளியறைவாசற்படிக் கதவையேதான்திறந்து
ஒத்தமஞ்சபஞ்சணை ஒளிவழகைத்தான்பார்த்து
சுத்தியெங்குந்தான்பார்த்து துன்னிலம்பூகண்ணுலே
பார்த்தாள்குறத்தியரும் பங்கயஞ்சீர்கண்ணுலே
மின்னொளியேபெண்மயிலே விஜயனுர்வருவாரோ
பார்த்தர்வருவாரோ பஞ்சணைசோடிப்பில்
பின்னையுமுண்டோடி பக்குவங்கள்மின்னொளியே
பள்ளியறையுந்தனக்குப் பார்க்கசமைந்ததோடி
தச்சன்சமைந்தானே தானேசமைந்ததுவோ
எப்போதுமுண்டோடி யின்றுபுதிதோதான்
சிறையிலிருந்தேனென்று தேன்மொழியேசொன்னீரே
அடைக்காயருந்தேன் ஆபரணம்பூணேனென்ருய்
மைபொட்டிடுவதில்லை மஞ்சள்குளிப்பதில்லை
பாரச்சிறையில்வைத்தார் பார்த்தனென்றுசொன்னீரே
மெய்யென்றிருந்தேனே மின்னொளிநாயகமே
சூதுகளுமுண்டோடி சோழன்மகளாரே
ஆரணங்கேமின்னொளியே அறியவுரையுமென்ருர்
இவ்வார்த்தையைகேட்டு எதுரைப்பாள்மின்னொளியும்
கானக்குறத்தியே!! கட்டுவச்சிநாயகமே
ஆருமொருவரில்லை ஆள்வரவுந்தானுமில்லை
சுந்தரப்பூதாதிமார் சொற்பேச்சுங்கேளார்கள்
என்பேச்சுங்கேளார்க ளீடழிக்குந்தாதியர்கள்
தங்களிடபேச்சினுல் தான்செய்வார்தாதியர்கள்
இருந்தசிறைகாணுமல் இவர்கள்செய்யக்காரணமேன்
என்னசெய்வேனென்று எரிபறந்துகண்சிவந்து
கட்டுவட்டத்தின் கயிறுருவிவிட்டாற்போற்
தீரமொடுங்கி யிருவிழியில்முத்துதிர்த்தாள்

முத்துபோல்கண்ணீரைமுகமெல்லாஞ்சோரவிட்டாள்
சோழன்மகளாருஞ் சோர்ந்துமனந்தளர்ந்து
ஆருதகோபம் அனலாகநிற்கையிலே
தாமக்குழலாள் தாதியவள்கூறுவாள்
வந்தார்விஜயனென்று மலேகுறத்திசொன்னளே
மணவாளனிப்போ வருவாரென்றுசொன்னளே
மெய்யென்றுநம்பியே மின்னொளியேஆச்சியே
சோடித்தலங்கரித்தோம் சுந்தரியேபஞ்சணேகள்
எங்கள்மேற்கோபமுண்டு இந்தபிழைகாருமென்று
தாதிமாரெல்லோருந் தான்ருெழுதுதெண்டனிட்டார்
இவ்வார்த்தைதான்கேட்டு எதுரைப்பாள்கட்டுவச்சி

அருச்சுனன் அரை நாழியில் வருவானென்று சொன்ன குறம்

(தின) வாடியடிமின்னொளியே வாள்விஜயன்தேவி
உன்-மணவாளனரைநொடியில் வருவானடிபெண்ணே
கணவனிதோவுன்மனேக்குக் கால்நடையாய்வருவான்
கைபார்த்தேனுந்தனுக்குக் கண்டுகுறிசொன்னேன்
அஞ்சாதேமின்னொளியே அணேந்துவிளேயாடி
அழகானகதிரவன்போல் பெண்பெறுவாய்பெண்ணே
சிந்தனேகள்தேவையில்லே சிறைமீண்டுபோச்சு
திருச்சோழன்மகளேஎன்று செங்கரத்தைப்பிடித்தாள்

வேறு

கானக்குறத்தியவள் கட்டுவச்சிகூறுவாள்
சொற்பொறுக்கப்போகாது சோழன்திருமகளே
வாள்விஜயன்தேவியென்று வாழாதிருந்தாலும்
ஆண்காற்றுமயங்கிவர் அஞ்சுமடிமின்னொளியே
கலியாணமுண்டல்லோ கன்னியரேயுந்தனுக்கு
கண்ணீர்பெருகிறதைக் கணவனார்வந்தாக்கால்
வாருன்மணவாளன் மதிமுகந்தான்பாருன்
வாடிமயிலேயென்று மலேக்குறத்திகைபிடித்து
கொங்கையின்மேலே குறத்திமுத்தமிட்டாள்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
அறியாதபாலகரை யணேக்குமடிமேலே

என்னைமையலாக்கி யென் னுடம்பைபுண்ணாக்கி
மாயமலைக்குறத்தி வந்துகுறியுரைத்தாய்
உன்-எச்சில்கலந்தல்லோஎனக்கமுதூட்டிவைத்தாய்
கூடவுமுண்டாயே கோடறையில்வந்தாயே
மன்னவனாரென்கணவர் வருவாருமென்றாயே
பொய்யாச்சேயுன்குறிகள் பூங்குறத்திநாயகமே
கானக்குறத்தியவள் கட்டுவச்சிதானெழுந்து
மின்னொளியைப்பார்த்து மெல்லியருங்கூறுவாள்

குறம்

(தின) வட்டமதிமுகத்தாளே மின்னொளியேகேளும்
வடிவுடையவுன்புருஷன் வந்தாண்டிவாசல்
கூர்நகங்கள்வைத்துருக கொங்கைதனைப்பிடித்து
கோவையிதழ்மின்னொளியே கோதியணைவாண்டி
குறத்திநானருகிருந்தால் கோபம்வரும்பெண்ணே
குறநாற்றமருச்சுனற்கு குமட்டியடியாதோ
இங்கேயிருநானவரை அழைத்தோடிவருவேன்
என்றுசொல்லிகுறத்தியவ ளேகிநடந்தாளே
பெண்வடிவுதனைமறைத்து பணிதிகளைவாங்க
பொற்கூடைதனிலந்தப் போர்விஜயன்தானும்
அன்றுதித்தாளண்டையிலே போய்வாருமென்று
ஆகாயம்போகவென்றே அந்தரத்தேதட்ட
ஆகமாய்ப்பறந்து அந்தக்குறக்கூடை
அனலுதித்தாரண்டையிலே அமர்ந்ததுவக்கூடை

குறவேடம் நீங்கி அருச்சுனன் தன் சுயரூபத்துடன் வந்து மின்னொளியாள் கண்ணை மூடினது

மின்னொளியாள்கண்மலரை விஜயனவர்மூடினார்
கண்மலரைமூடவே கன்னியவளேதுசொல்வாள்
கானக்குறமகளோ கட்டுவச்சிநாயகமோ
என்-பத்தாவருச்சுனரோ பாங்கியரேசொல்லென்றாள்
ஆரெனைக்கண்மறைத்தார் அச்சங்களில்லாமல்
தாதியவள்தான்பார்த்து தையலவளேதுசொல்வாள்
விஜயனார்தேவியரே மின்னொளிநாயகமே
ஆரென்று நீரும் அடையாளஞ்சொல்லுமென்றார்

என்று-தாதியவளுரைக்க தானுரைப்பாள்மின்னொளி
கண்ணைமறைத்துக் கரத்தையவள்பிடித்து [யாள்
மூந்நூறுக்காதவழி முழக்கமுள்ளபந்தலிலே
முத்திழைத்தபந்தலிலே முடுகிவந்துமாலையிட்டு
சுண்டுவிரல்பிடித்த சுந்தரனாரென்றுரைத்தார்
காண்டாவனமெரித்த கட்டழகாகைவிடுங்காண்
மன்னர்மயங்கி மலர்விழியில்கைவாங்கி
கானக்குறத்தியாய்க் கைபார்த்தகட்டுவச்சி
அந்தக்குறத்தி யழகைநான்பார்க்கவேணும்
வேடக்குறத்தியரை மின்னொளியுந்தான்பார்த்து
விஜயனல்லாச்சொல்ல மின்னொளியுந்தான்பார்த்து
பார்த்தாளேமின்னொளியும் பார்த்தன்வடிவழகை
விஜயரேவும்முடைய வேஷங்கலைந்தீரோ
பூட்டியவாபரணம் புதைத்துவைத்துவந்தீரோ
கொண்டைமேல்தொங்கலும் கோல்திரிபட்டுடையும்
முத்துபோறபல்ஒளியும் முருக்கிதழ்போல்செவ்வாயும்
ஒட்டியசந்தனமும் உலவியகண்மலரும்
சந்தனபொட்டழகும் சதிரானநெற்றியும்
உரியுங்கனிப்பழமும் ஊர்வசிநாட்டமும்
கொச்சக்குறக்கூடை குறமகளின்தன்னழகும்
உம்மிட-மாயஸ்தனபாரம்மறைத்துவைத்துவந்தீரோ
மைபோட்டுதான்கலைக்க மதிகெட்டுப்போனீரோ
நீதானெழுந்திருந்து நீக்கியிவ்வடிவாகி
ஆருமறியாமல் அங்கொருவர்காணமல்
கோலமறைத்தீர் குறமுறைத்தீர்கொற்றவரே
இக்கோலங்கொண்டென்னை ஈடழிக்கவந்தீரோ
இத்தனைகால மிருந்தேன்சிறையாக
மைத்துனன்முன்னேதான் வாழாமல்வைத்தீரோ
என்-சக்களத்திகள்முன்னே சதிபிழைசெய்தீரோ
இப்போ-வந்திங்கேபோக மனமாச்சோமன்னவரே
உம்முடையதேவிமார் உரைக்கவும்வந்தீரோ
நீர்தான்வந்தீரோ நிலவரைத்தைச்சொல்லென்றாள்
மின்னொளியாள்கேட்க விஜயனவன்ஏதுசொல்வான்
மெய்யாகச்சொல்லுகிறேன் மெல்லியரே நீர்கேளும்
மாயனிடதங்கையரை மனதில்நினையாதே

நாகமடந்தை நன்னுதலைச்சொல்லாதே
ஆனாலழக னருச்சுனர்தானுரைக்க
வாருமென்றுசொல்லி மணிக்கடகக்கைபிடித்தான்
செம்பொன்கதவடைத்துச் சிக்கெனவேதாள்பூட்டி
தேவியருந்தானுமாய் சேர்ந்ததிருவணையில்
வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
ஒருவற்கொருவ ருகந்துவிளையாடி
பலகாலுமிவருடனே பழகியிருந்தாப்போல்
தழுவாதுபோலே தழுவிவிளையாடி
மாலைமுடியாமல் மண்மேலேகொண்டிருந்தாள்
சந்தோஷமாகவே தனஞ்செயனும்மின்னொளியும்
செங்கோற்செலுத்தி சீரரசையாண்டிருந்தார்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்தன்கதையை
எழுதிப்படித்தவர்கள் இந்திரனைப்போல்வாழ்வார்
காளைகுறங்கற்றோர்கள் காசினியில்வாழ்ந்திடுவார்
கன்னியர்கள்கேட்டால் கடுக்மணம்பெறுவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திருப்பார்
இக்கதைகேட்டவர்கள் ஈன்றிடுவார்புத்திரனை
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

மின்னொளியாள் குறம் - முற்றிற்று.

சக்கரவர்த்தி பிரஸ், 189, தங்கசாலைத் தெரு, சென்னை—1.

எலிக்ஸ்ரைன்

மேகரோக நிவாரணி!

தாதுவிருத்தி தரக்கூடியது!!

மலையாள அஷ்டாங்க முறைப்படி செய்தது.

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் நிகரற்றது.

பத்தியம் கிடையாது!!

மேகரோகம், ஸ்திரீகளின் சேர்க்கையால் உண்டாகும் மேக வியாதிகளாகிய வீரிய நஷ்டம், ஞாபகக்குறைவு, ஜனனேந்திரியத்தின் பலக்குறைவு, ஸ்திரீ சம்பந்தமான வியாதியில் கஷ்டப்படும் ஸ்திரீ புருஷர்களின் வருத்தத்தை ஒழித்து, இல்லற இன்பத்தையும் தேகாரோக்யத்தையும், ஆண்மையையும் கொடுக்கவல்லது.

தீரும் வியாதிகள்

ஸ்வப்பன ஸ்கலிதம், நரம்புகளின் பலவீனம், மேகப் படைகள், உடம்பு ஊரல், அஜீரணம், மலச்சிக்கல், கை கால் நோவு, மயக்கம், பாரிசவலி, ஆராத புண்கள், வயிற்றுப் புண்கள், கை கால் எரிச்சல், கணைச்சூடு, வெள்ளை, வெட்டை, தந்தமேகம், தேக மெலிவு, இரத்தக் குறைவு, தேக வெளுப்பு, மேக ஜுரம், வாய்ப் புண், மூலச்சூடு, உஷ்ண இருமல், பலக்குறைவு, நெஞ்சுப் புண், தாது நஷ்டம், நெஞ்சு எரிவு, சுவாச காசம், பசிக்குறைவு, இடுப்பு வலி, கால் குடைச்சல், கண் எரிச்சல், பித்த மயக்கம், பித்த வெடிப்பு, சிரங்கு, தட்டிகள், கிரந்திப் புண், தூர்நீர்கள், வாதபித்த முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும். இதை வியாதியற்றவர்களும் சாப்பிட்டு வந்தால், உடம்பு தளர்ச்சி நீங்கி, தேக புஷ்டி உண்டாகி, இரத்த சுத்தியும், விருத்தியும், தாது பஷ்டியும், மனோ உற்சாகமும், மேனிப் பிரகாசமும் உண்டாகும். இம் மருந்தை ஆண், பெண் யாவரும் சாப்பிட வல்லது எல்லாவித உடம்புக்கும் பொருத்தமானது. உடம்பிலுள்ள உஷ்ண வியாதிகளும் தீரும். வெட்டைச் சூட்டினாலும், தேக காங்கையினாலும், சூதக சம்பந்தமான வியாதியில் மெலிந்திருக்கும் பெண்கள் எலிக்ஸ்ரைனை சாப்பிட்டால் தேக புஷ்டியும், தசை வளர்ச்சியும், புத்திர பாக்கியமும் பெற்று இன்புற்று வாழ்வார்கள்.

20-நாள் 40-வேளை மருந்து விலை ரூ. 2—4—0.

பெங்களூர் டிஸ்பென்ஸரி,

தபால் பெட்டி நெ. 1657. 327, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

ஜீவா - ஸ்டமக் பவுடர்

சகலவித வயிற்று வலியையும், வயிற்றிலுண்டாகும் வியாதியையும், புண்களையும் ஆப்ரேஷன்) செய்யாமல் இம் மருநது குணப்படுத்தும் இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப் படி செய்தது.

இம் மருந்து, அஜீரணம், மல பந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக்குத்தல், குடல் புண், ரணம், குலைக்கட்டி, ஈரலில் சதை வளருதல், சாப்பிட்ட முன்னும் பின்னும் உண்டாகும் வயிற்று வலி, வாந்தி, கை கால் குத்தல், குன்மம், வயிற்றில் உண்டாகும் பலவிதமான வியாதிகளைக் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தது.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூ. 5—8—0.

காசா

காசம், இருமல், ஈளை வியாதிகளுக்கு சிறந்தது. இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி செய்தது. இருமல், காசம், இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்டல், தொண்டை வலி, மார்துடிப்பு, மார்வலி, மார்பிலும் தொண்டையிலும் சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை போக்கிக் கபத்தை ஒழித்து, சளியோடு ரத்தம் வருதல், மஞ்சள் நிறமாக வருதல், இளைப்புக் காணுதல், பலஹீனம், உடம்பு மெலிதல், ஆயாசப், மூச்சுத் திணறல், கை கால் அசதி, சுவாசகாசம், ஜுரம் முதலியவைகளைக் குணப்படுத்தி ரத்த சுத்தி செய்யும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூ. 2—8—0.

(பெரிய கேட்லாக் இனாம்.)

பெங்களூர் டிஸ்பென்ஸரி,

தபால் பெட்டி நெ. 1657. 327, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

பெங்களூர் டிஸ்பென்ஸரி

எலிக்ஸ்ரைன்

தபால் பெட்டி நெ. 1657.
327, தங்கசாலே தெரு,
சென்னை-1.

மேகரோக நிவாரணி!

தாதுவிருத்தி தரக்கூடியது!!

மலையாள அஷ்டாங்க முறைப்படி
தயார் செய்தது

இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும் தசை வளர்ச்சிக்கும் சிகாற்றது.

ருசிகரமானது!

பத்தியம் கிடையாது

மேகரோகம், வீரிய நஷ்டம், ஞாபகக் குறைவு, ஜனனேந்திரியத்தின் பலக் குறைவு, ஸ்திரீ சம்பந்தமான வியாதியில் கஷ்டப்படும் ஸ்திரீ புருஷர்களின் வருத்தத்தை ஒழித்து புதிய மனிதனாகச் செய்யும்.

__தீரும் வியாதிகள்:__- ஸ்வப்பனஸ்கலிதம், நரம்புகளின்பலவீனம், மேகப்படைகள், உடம்பு ஊறல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால்நோவு, மயக்கம், மார்வலி, கைகால் எரிச்சல், கணைச்சூடு, வெள்ளை, வெட்டை, தந்தமேகம், தேகமெலிவு, இரத்தக்குறைவு, தேகவெளுப்பு, மேகஜுரம், வாய் புண், தாது நஷ்டம், நெஞ்சு எரிவு, சுவாசகாசம், பசிக்குறைவு, உஷ்ண வயிற்றுவலி, இடுப்புவலி, கால் குடைச்சல், கண் எரிச்சல், பித்த மயக்கம், பித்த வெடிப்பு, சிரங்கு கிரந்திப்புண், துர்நீர்கள், வாதபித்தம், முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும். இம்மருந்தை ஆண் பெண் யாவரும் சாப்பிடவல்லது. எல்லாவித உடம்புக்கும் பொருத்தமானது உடம்பிலுள்ள உஷ்ண வியாதிகளும் தீரும்.

வெட்டைச்சூட்டினாலும், சூதக சம்பந்தமான வியாதியால் மெலிந்திருக்கும் பெண்கள் எலிக்ஸ்ரைனை சாப்பிட்டால் தேக புஷ்டியும், தசை வளர்ச்சியும், புத்திர பாக்கியமும் பெற்று இன்புற்று வாழ்வார்கள்.

உடம்பு மெலிந்து, சக்தியற்றுவரும் ஒவ்வொருவரும் எலிக்ஸ்ரைனை சாப்பிட்டால் தேகத்தில் சதை புஷ்டியுண்டாகி நரம்புகளுக்கு பலமும், முறுக்குமேற்றி எலும்புகளை வளர்த்து, ஜீரணக் கருவிகள் உறுதிப் பெற்று, தேகத்திற்குப் பலமும் வசீகரமும் உற்சாகமும்ஊட்டி, நீர்போல் உடைந்துபோன இந்திரியத்தை இருகச்செய்து, வீரியசக்தியை பெருக்கி, குழிவிழுந்த கண்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களை வசீகரமாக்கி புத்துயிரளித்து யௌவனத்தைத் தரும்.

20 நாள் 40 வேளை மருந்து ரூ. 2—4—0

பெங்களூர் டிஸ்பென்ஸரி, தபால் பெட்டி நெம்பர், 1657
327, தங்கசாலை தெரு, மதராஸ்—1,

ஜீவா ஸ்டமக் பவுடர்

ஆப்ரேஷன் தேவையில்லை!



சகலவித வயிற்று வலியையும் வயிற்றிலேற்படும் புண்களையும், வயிற்றை ஆப்ரேஷன் செய்யாமல் குணப்படுத்தும். இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி செய்தது.

இம்மருந்து, அல்சர், அஜீரணம், மலபந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக்குத்தல், குடல் புண், ரணம், சதை வளர்தல், குலைக் கட்டி, ஈரலில் சதை வளர்தல், கைகால் குத்தல், இடுப்பு நோய், மயக்கம், சீர காங்கை சாப்பிட்ட முன்னும் பின்னும் உண்டாகும் வயிற்று வலி, வாந்தி, குன்மம், வயிற்றில் உண்டாகும் இன்னும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தும்.

20 நாள் 40 வேளை மருந்து ரூ. 2—8—0

காசா (ஆஸ்த்மா நிவாரணி)

காசம், இருமல் முதலிய வியாதிகளுக்குத் தலைச்சிறந்தது (இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி) வனமூலிகை, உலோக வஸ்துக்களைக்கொண்டு செய்தது இருமல், காசம் இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு, வலி முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும்.

மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச்செய்து கபத்தை அறவே ஒழித்து, சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், இளைப்புக் காணுதல். பலஹீனம், உடம்பு மெலிதல், ஆயாசம் மூச்சுத் திணறல், கைகால் அசதி, சுவாச காசம், ஜுரம் முதலியவைகளைக் குணப்படுத்தி, இரத்த சுத்திசெய்யும். உபயோகித்து உண்மை அறியவும். ஆண் பெண் பத்தியமின்றிச் சாப்பிடலாம்.

20 நாள் 40 வேளை மருந்து ரூ. 2—8—0

பெங்களூர் டிஸ்பென்ஸரி, தபால் பெட்டி நெம்பர். 1657
327, தங்கசாலை தெரு, மதராஸ்—1.

பிமோரா

ஸ்திரீகளின் சூதகரோகத்திற்கும் கர்ப்பசம்பந்தமான சகல வியாதிகளுக்கும் கைகண்ட அவுஷதம்.

மாதா மாதம் விலக்கு ஏற்படும் காலங்களில் உண்டாகும் வயிற்று வலியையும், சரீரம் ஸ்தம்பித்தலும், குத்தல், கை கால் சோர்வு, இடுப்பு நோவு, மர்ம ஸ்தானத்தில் வேதனை, வயிற்றில் கட்டிபோல் உருளுதல், சூதககாலங்களில் பொறுக்கமுடியாத வயிற்றுவலி, வாந்தி. ஆயாசம், கபம் கட்டுதல்; கர்ப்பப் பூச்சிகளால் ஏற்படும் கர்ப்பச்சிதைவு, அஜீரணம், தலைவலி, வயிற்று வலியால் புழுபோல் துடித்தல். தலைபாரம் இரண்டுமூன்று மாதங்கள் கருதரித்து உடைந்து போதல், சிலருக்கு பெரும்பாடு போதல், புத்திர சந்தான மில்லாம லிருத்தல், பல வியாதிகளை சூரியனை கண்ட பனிபோல் பறக்கச்செய்யும்.

இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி செய்தது. பெண்களுக்கு உண்டாகும் கர்ப்பாசய சம்பந்தமான கோளாறுகளை பெருங்காற்றில் சிக்கிய பஞ்சுபோல் பறக்கடித்து ஒழுங்காய் மாதவிடாய் உண்டாக்கி திடகாத்திரத்தையும் சந்தான விருத்தியையும் உண்டாக்கும்.

ஸ்திரீயானவள் நோயற்று புத்திர பாக்கியத்துடனும் திடகாத்திரத்துடனும் யௌவனத்துடனும் இல்லற சுகத்திற்குகந்தவளா யிருக்க வேண்டின் எமது பிமோரா அவைகளை நிறைவேற்றும் சஞ்சீவியாகும்.

புட்டி 1-க்கு ரூ. 2—8—0

ஸிப்பிலிநோ [ஸிப்லிநோவினால் தீரும் வியாதிகள்.]

மேகப் படைகள், மேக ரணம், மேக வாய்வு, மேகஜுரம், கருமேகம், செம்மேகம், வெண்மேகம், கிரந்தி, கண்டமாலை, துடைவாழை, யோனிப்புற்று, சொறி, தேமல், சிறங்கு, பாதக் குழிப்புண், ஆறாத குழிப் புண்கள், புரையோடுகின்ற புண்கள், படர்தாமரை, திமிர்வாயு, குதிக்கால் வாதம், தடிப்புகள், உடம்பு ஊரல், கைகால்கள் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், நகக்காற் நோய், மேகரோகத்தால் உண்டாகும் வெடிப்புகள். குஷ்டரோகங்கள், நீரிழிவு, சகல பிரமேகம் சுக்கில மூத்திர வியாதி, நீரில் சர்க்கரை முதலியன சேர்ந்த வியாதிகள், ஸ்திரீ சம்மந்தப்பட்ட சகல ரோகங்களையும் உத்திரவாதத்துடன் குணப்படுத்தும். இம்மருந்து ஆண் பெண் யாவரும் சாப்பிடவல்லது.

20-வேளை மருந்து ரூ. 3—8—0

பெங்களூர் டிஸ்பென்ஸரி,

தபால் பெட்டி நெ. 1657. நெ. 327, தங்கசாலை தெரு, சென்னை-1.

முக்கிய கவனிப்பு:- ஔஷதங்கள் வேண்டுவோர் எமக்கு கடிதம் எழுதி வி. பி. தபால் மூலம் வரவழைத்துக் கொள்ளலாம். எல்லா ஔஷதங்களுக்கும் தபால் சார்ஜ், பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம். வியாதியை எமக்கு தெரிவித்து மருந்து எடுக்க விரும்புவோர் வியாதியின் முழுவிவரத்தையும் ஆண் பெண் என்பதையும் தெரிவிக்கவும். எமக்கு எழுதும் கடிதங்கள் சங்கிலி எழுத்தில்லாமல், தெளிவாய் முழுவிலாசத்தோடு எழுத வேண்டும். மருந்து உபயோகிக்க வேண்டிய விதம் ஒவ்வொரு மருந்துடனும் சேர்த்து அனுப்பப்படும்.

(பெங்களூர் டிஸ்பென்ஸரி. தபால் பெட்டி நெ. 1657,)
327, தங்கசாலை தெரு, மதராஸ்—1.

ஆண் பெண் உறவு ஆபாசமா?

ஆசிரியர் :
'வேள்' அவர்களின் அற்புத சிருஷ்டி



"பெண்ணாகி வந்ததோர் மாயப்பிசாசம"
என்கிறார் ஒரு மகான்.
"காதல்" என்றால் காதைப் பொத்திக் கொள்கிறார்கள் சிலர்.
"கலியாணமா? ஐயோ. அந்தக் கால் கட்டே வேண்டாம்" என்கிறார்கள் சோம்பேறிகள்.
ஆண் பெண்களைக் கூட்டுவிக்கும் இல்வாழ்க்கையே ஆபாசமான விவகாரம் என்கிறார்கள் வரட்டுவேதாந்திகள்.

ஆண் பெண் உறவு ஆபாசமா?

என்ற அற்புதமான ஆராய்ச்சி நூல் மேற் குறித்தவற்றுக்கெல்லாம் ஆணித்தரமாகப் பதில் சொல்லுகிறது.

திருமணத்தின் தத்துவத்தை, காதல் வாழ்வின் உயர்வை, சிருஷ்டி தத்துவத்தின் இரகசியத்தை மிக அழகாக விவரிக்கிறது.

இந்நூலாசிரியரைப் போல் இதுவரை வேறு யாரும் எழுதியதில்லை.

தனிப் பிரதி விலை ரூ. 1-0-0 தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—**ஆர். என். ராஜன் அண்டு கோ.,**
(புத்தக வியாபாரம்)
தபால் பெட்டி நெ. 1657. 327, தங்கசாலை தெரு, மதராஸ்-1.